## செயல்நோக்கு

“ஆசிய பிராந்தியத்திலேயே செயற்திறனுடனும்,
சிறந்த நட்புணர்வுடனும்
முதல்தர விமானசேவை மையமாக திகழ்தல்

## செயற்பணி

“நாம் அயரா உழைப்புடன் அனைத்து தொழிற்பாடுகளினூடாக போட்டியடிப்படையிலான வான் போக்குவரத்து வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குவது மற்றுமன்றி எமது தாபனத்தின் மீது அக்கறையுடைய தரப்பினர்களின் மனநிறைவினை உறுதி செய்வதேயாகும்”.

# ஈர்ப்புமையத்தில்

கவர்ச்சிகரமான பல இடங்களில் மற்றும் நல் வரவேற்பு விருந்தோம்பல்களால் கலந்து உலகப் புகழ்பெற்ற எமது பெறுமதிமிக்க நாட்டில் தலைமை சர்வதேச நுழைவாயிலாக தோற்றம் பெறுறுள்ளதால் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் (ப.ச.வி) தெற்காசிய பிராந்தியத்தில் வளர்ந்துவரும் மையமாக உருவாகி வருகின்றது.
பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் தமது வாடிக்கையாளர்களுக்கு தான் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டிருப்பது நவீன தொழில்நுட்ப வசதிகளுடனான விமானநிலையமொன்றில் உயர்தர சேவைநிலைமைகளிலிருந்து பலன்களை பறித்தெடுத்ததனாலாகும்.

2014 ஆம் ஆண்டில் இலங்கையின் இரண்டாம் சர்வதேச நுழைவாயிலான மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையமான விமானநிலையத்தில் (ம.இ.ச.வி) கொள்ளளவினால் மேம்படுத்துவதற்கு மற்றும் ப.ச.வி மேலும் அனைத்து இலக்குகளையும் எய்துவதற்குத் தேவையான பல்வேறு தளத்தகை வழியிலான தொழிற்பாடுகளில் மேம்படுத்துதல் எமது அடிப்படை நோக்கங்களாக ஒருமுகப்படுத்தப்பட்டன.



# பொருளடக்கம்


நிதிசார் தனிச்சிறப்புகள் 01
செயற்பாடு சார்ந்த தனிச்சிறப்புகள் 02
தவிசாளரின் மீளாய்வு 03
பணிப்பாளர் சபை 07
சிரேஷ்ட முகாமைத்துவம் குழு 09
முகாமைத்துவ உரையாடலும் பகுப்பாய்வுகளும் 15
நிதி மீளாய்வு 27
மனித வளங்கள் முகாமைத்துவம் 32
நீண்டகால நிலைப்பாட்டு அறிக்கை 39
கூட்டிணைப்பு ஆளுமை 45
இடர் முகாமைத்துவம் 50
கம்பனியின் அலுவல்கள் தொடர்பான
பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை 61
சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை 65
கணக்காய்வாளரின் தகுதிபெற்ற கருத்துரை தொடர்பான
முகாமைத்துவ தெளிவுபடுத்தல்கள் 67
மொத்த வருமானக் கூற்று 68
ஐந்தொகை 69
பங்குகள் மாற்றங்கள் கூற்று 74
காசுப்பாய்ச்சல் கூற்று 75
நிதி கூற்றுக்களுக்குரிய குறிப்புகள் 72

# நிதி சார்ந்த
# தனிச்சிறப்புகள்

| | 2014<br>ரூபா மி. | 2013<br>ரூபா மி. | +/-%* | 2013<br>ரூபா மி. | 2012<br>ரூபா மி. | +/-%* |
|---|---|---|---|---|---|---|
| மொத்த விற்பனை வரவு | 13,742 | 12,110 | 13% | 12,110 | 11,114 | 9% |
| பெறுமானத்தேய்வுக்கு முன் தொழிற்பாட்டுச் செலவு | 6,797 | 7,473 | 9% | 7,473 | 5,214 | -43% |
| EBITD | 6,945 | 4,637 | 50% | 4,637 | 5,900 | -21% |
| நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு | 2,625 | 1,746 | -50% | 1,746 | 1,011 | -73% |
| தேறிய நிதிச் செலவுகள் / (வருமானம்) | (1,175) | (1,855) | -37% | (1,855) | 1,030 | 280% |
| வரிக்கு முன் இலாபம் | 5,496 | 4,746 | 16% | 4,746 | 3,859 | 23% |
| வருமான வரி | 2,211 | 1,192 | -85% | 1,192 | 1,121 | -6% |
| வரிக்குப் பின் இலாபம் | 3,285 | 3,554 | -8% | 3,554 | 2,738 | 30% |
| ஒப்புரவுப் பங்குதாரர்கள் சார்ந்த இலாபம் | 3,285 | 3,554 | -8% | 3,554 | 2,738 | 30% |
| பங்கிலாபங்கள் | 500 | 500 | 0% | 500 | - | 100% |
| திசம்பர் 31இல் காசும் காசு சார்ந்தவையும் | 10,238 | 4,031 | 154% | 4,031 | 4,425 | -9% |

* வித்தியாசங்களை முழுத் தானமாக்குவதற்கு அமைவானது

+= சாதகமானது

-= பாதகமானது

# செயலாற்றுகையின் விஷேட குறிப்புகள்

| | | 2014 | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|---|---|
| **நிதிசார்ந்த சிறப்பம்சங்கள்** | | | | | |
| மொத்த புரள்வு | ரூ.மி. | 13,742 | 12,110 | 11,114 | 9,290 |
| வரிக்குமுன் தேறிய இலாபம் | ரூ.மி. | 5,496 | 4,746 | 3,859 | 2,140 |
| திசம்பர் 31இல் பங்குதாரர்களின் நிதியம் | ரூ.மி | 10,679 | 7,441 | 4,217 | 1,274 |
| திசம்பர் 31இல் நடைமுறையற்ற சொத்துக்களின் முன்னெடுக்கப்படும் மொத்தத்தொகை | ரூ.மி. | 44,441 | 47,193 | 42,044 | 25,647 |
| திசம்பர் 31இல் மொத்த நடைமுறைச் சொத்து | ரூ.மி. | 14,952 | 9,079 | 7,488 | 10,625 |
| திசம்பர் 31இல் மொத்த நடைமுறைப் பொறுப்புகள் | ரூ.மி. | 7,660 | 7,058 | 4,181 | 4,011 |
| ஆண்டிற்கான மொத்த மூலதனச் செலவினம் | ரூ.மி | 1,234 | 6,378 | 17,449 | 9,165 |
| ஆண்டிறுதியில் காசும் காசு சார்ந்தவையும் | ரூ.மி. | 10,238 | 4,031 | 4,425 | 4,203 |
| **தொழிற்பாடு சார்ந்த முக்கிய அம்சங்கள்** | | | | | |
| சர்வதேச வான் பயண நகர்வுகள் | எண். | 54,960 | 51,972 | 48,416 | 43,454 |
| பயணிகளின் நகர்வுகுகள்* | எண். | 7,780,724 | 7,330,421 | 7,079,920 | 6,145,532 |
| விமான சரக்குகளின் நகர்வுகள்** | மெ.தொன் | 209,607 | 194,020 | 186,618 | 168,577 |
| திசம்பர் 31இல் மொத்த பதவியணியின் | எண். | 3,932 | 3,674 | 3,445 | 3,306 |
| **விகிதாசாரப்படி முக்கிய அம்சங்கள்** | | | | | |
| ஒப்புரவு மீதான | % | 30.8 | 47.8 | 64.9 | 109 |
| மொத்த வருமான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் | % | 40 | 39 | 35 | 23 |
| பங்குரிமை நிதியத்திற்கு வரிக்குமுன்னர் தேறிய இலாபம் | % | 51 | 64 | 92 | 168 |
| மொத்தச் சொத்துக்களுக்கு மொத்த வருமானம் | தடவைகள் | | 0.22 | 0.22 | 0.26 |
| ஊழியர் ஒருவருக்கு மொத்தச் சொத்துக்கள் | ரூ.'000 | 15,105 | 15,316 | 14,378 | 10,972 |
| ஊழியர் ஒருவருக்காக மொத்த பணியாள் செலவு - ஆண்டிற்கு | ரூ.'000 | 1,203 | 1,182 | 1,020 | 942 |
| ஒரு விமானமொன்றை கையாளுவதற்காக மொத்தச் செலவு | ரூ.'000 | 171 | 177 | 146 | 176 |
| பயணியொருவர் மூலமான வருமானம் | ரூ. | 1,766 | 1,652 | 1,570 | 1,512 |
| பயணியொருவர் மூலம் கிடைக்கும் வரிக்கு பின்னரான இலாபம் | ரூ. | 422 | 485 | 387 | 226 |
| ஊழியரொருக்கு வான் பயணத் தடவைகள் | எண். | 14 | 14 | 14 | 13 |
| வானூர்தி ஒன்றிற்கான பயணிகள் | எண். | 142 | 141 | 146 | 141 |
| ஊழியர் ஒருவருக்குப் பயணிகள் | எண். | 1,979 | 1,995 | 2,055 | 1,859 |
| நிகர சொத்துக்கள் மீதான இலாபம் | % | 35 | 50 | 65 | 109 |
| மொத்த சொத்துக்கள் மீதான் இலாபம் | % | 6 | 7 | 6 | 4 |
| இலாப விகிதாசாரம் | % | 24 | 29 | 25 | 15 |
| இயலளவு உற்பத்தித்திறன் தடவைகள் | தடவைகள் | 12.1 | 11.0 | 9.8 | 9.8 |
| முதலீட்டு உற்பத்தித்திறன் தடவைகள் | தடவைகள் | 0.24 | 0.20 | 0.19 | 0.22 |
| பங்கொன்றிற்கான நிகர இலாபம் | ரூ. | 16,426 | 17,768 | 13,688 | 6,943 |
| நடைமுறை விகிதாசாரம் | தடவைகள் | 1.95 | 1.29 | 1.79 | 2.65 |
| மொத்த செலவினத்துக்கு மொத்த வருமானம் | தடவைகள் | 1.67 | 1.64 | 1.53 | 1.30 |

* பயணிகள் நகர்வில் வந்தடைதல், புறப்படுதல், இடமாற்றம், இடைப்போக்குப் பயணிகள் என்பன அடங்கும். உள்ளக விமானப் பயணிகள் உள்ளடங்கப்படமாட்டாது.

** விமான சரக்கு நகர்வுகளில் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் உள்ளக இடைமாற்ற விமான சரக்குகள் உள்ளடக்கப்படும். வான் கடிதங்கள் புறநீக்கம் செய்யப்பட்டுள்ளன.

# தவிசாளரின்
# மீளாய்வு



"உரிய ஆள்வினையுடமை, விஷேடமாக பொதுமக்களுக்குச் சொந்தமான சொத்துக்களை சிறந்த ஆர்வத்துடன், அக்கறையுடன் மற்றும் சிறப்பான முகாமைத்துவத்தின் மூலம் வழிநடாத்துகையானது, நாணயத்தை தேர்வாயும் மூலாதாரமாகும்."

**நிலைப்பாட்டு வளரச்சி அசைவு வேகம்**

நாம் எமது நிறுவனத்தின் தொழில் வாரியான வரலாற்றில் முனைக்கோடி சவாலான சகாப்தத்திற்கு பயணித்துக் கொண்டிருப்பதனால், விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் இவ்வருடத்துக்கான செயலாற்றை நோக்கும்போது அது உண்மையாகவே திருப்திகரமானதாக இருப்பதனை குறிப்பிட முடியும்.

பொதுமக்களின் நலன்கருதி விமானநிலையம் மற்றும் விமானசேவை தொடர்பான வசதிகளை வழங்குவது எமது தலையாய கடமையென்பதை நினைவூட்டுவதில் மகிழ்வடைகிறேன். எமது முக்கிய கடமைப் பொறுப்பாக அமைவது, வந்தடையும் மற்றும் புறப்படும் விமானப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதாகும். கடந்த பல வருட காலமாக தொடர்ந்தும் வெளிக்காட்டிய முன்னேற்றம் அவ்வாறே தொடரந்தும் விமானப் பயணிகள் வருகைத்தரும் முதல்நிலை செயலாற்ற காட்டியின் வளர்ச்சியில் நிலைப்பெற்றமைக் குறிப்பிட முடியும். போராட்ட காலங்களின் பின்னர் நிலைப்பாட்டு வளரச்சி அசைவு வேகம் காரணமாக பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய மற்றும் மத்தளை இராஜபக்ஷசர்வதேச விமானநிலைய வரலாற்றிலே பதிவு செய்த அதிசிறப்பான விமான அசைவுகளின் எண்ணிக்கை தரவுகளை பேணுவதற்கு முடியுமாக இருந்தன. இந்த அறிக்கையில் முகாமைத்துவ கலந்துரையாடலும், பகுப்பாய்வும் மற்றும் ஏனைய மீளாய்வுகளினூடாக இது தொடர்பாக கலந்துரையாடப்படும்.

**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் இரண்டாவது முனையம்**

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் ஏற்கனவே வடிவமைத்திருந்த வருடாந்த விமான பயணிகளின் அசைவுகளான 6 மில்லியன் கொள்ளளவு சேவைத் தரங்களுக்கு குறிப்பிடத்தக்க இழப்பீடுகள் எதுவுமின்றி கையாளப்பட்டன. விடாமுயற்சியான சவால்களை எதிர்நோக்கி, அர்ப்பணிப்பு, விவேகம், முன்னெடுப்புடன் கடமையாற்றிய பதவியிணருக்கு நன்றி நவில்கின்றேன். அவ் அனைத்தினால் பிரதிபலிக்கப்படுவது யாதெனில், நீண்டகாலமாக நடைமுறையிலிருக்கும் விமானப் பயணிகள் கொள்ளளவு விஷ்தரிக்கும் தேவைப்பாடேயாகும். இத்தேவைப பாட்டை நிறைவேற்றிக்கொள்வதன் நடவடிக்கையாக பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் அபிவிருத்தி கருத்திட்டத்தில் இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் நடவடிக்கை 2014 செப்தெம்பர் 7 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டமை, மேலுமொரு தொழிற்பாட்டுத் தொடரின் ஆரம்பத்தை குறித்தேயாகும். கட்டாயமாக இது கலந்துரையாடலுக்கு ஆளாகும் வருடத்துக்குள் எடுக்கப்பட்ட தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கையாகும். அச்சடங்குகளின் ஆரம்பம் வைபவத்திற்கு ஜப்பான் பிரதமர் கௌரவ சின்சோ அபே அவர்களை வரவேற்பதற்கு முடியுமாக இருந்தமை நாம் பெற்ற கௌரவமாகும்.

இந்த கருத்திட்டத்தின் இந்த நடவடிக்கையின் கீழ் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வருடாந்த வான் பயணிகள் கையாளுகைக் கொள்ளளவு 2019 ஆம் ஆண்டில் ஆரம்ப பகுதியாகும்போது ரூபா 15 மில்லியன் வரை அதிகரிக்கப்படும். இதனூடாக தற்போதுள்ள பயணிகள் கையாளும் கொள்ளளவிலுள்ள இடர்பாடுகளைத் தவிர்க்கக்கூடியதாக அமைவதுடன், அதன் மூலம் விமானப் பயணிகளின் எதிர்பார்புகள் நிறைவேற்றிக் கொள்ள முடியுமாக அமையும். இதன் கீழ் முக்கியமாக தற்போதுள்ள பயணிகள் பாலங்தாங்கிகளுக்கு மேற்குப் பக்கமாக புதிய பயணிகள் பாலங்தாங்கிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படுவதுடன், பயணிகள் வரும் மற்றும் போகும் இரு முனையங்கள் வெவ்வேறாக நிர்மாணிக்கப்படும். அதேபோல இந்த முனையத்தினூடாக கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலைக்கு பிரவேசம் வழங்கப்படும்.

ஜப்பான் "JICA" நிறுவனத்தின் மூலம் இதற்காக எமக்கு நேரடியாக கடன் கிடைத்தமை எமது நிறுவனத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கு பாத்திரமாகுவதுடன், எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதற்கு இதனை வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்கின்றேன். "JICA" நிறுவனத்தின் மூலம் இதற்கு முன்னர் வழங்கிய கடன் கருத்திட்டங்களுக்குள் நாம் பிரதிபலித்த பயனுடைய செயற்பாடுகள் மற்றும் நிதி செயலாற்றம் மற்றும் வழுவற்ற நிதி முகாமை அதற்கு காரணமாக அமைந்தமையை குறிப்பிடுகின்றேன்.

**மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம்**

2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்திற்கு புதிய விமானசேவைக் கம்பனிகள் கவரச்செய்யும் நோக்கில் கம்பனியால் மிகவும் வினைத்திறனுடன் ஆற்றல் வாய்ந்த மேம்பாட்டுத் தொழிற்பாடுகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படினும், எம்மை ஆர்வமூட்டும் சிறு பலன்களையாவது அடைவதற்கு முடியாமல் போனது. ஆனாலும் இரண்டாம் சர்வதேச விமான நிலையத்தை நிறுவியமையூடாக, எமது கடமைகளாகக் கருதப்படும் விமானத் தகவல் பிராந்தியத்தினூடாக பறக்கும் விமானங்களுக்கு அது நேரளவான தாக்கத்தை உருவாக்கியுள்ளது. அக்குறித்த விமானங்களின் அவசர தரை இறக்கங்களின்போது மாற்று விமானநிலையமாக அது அமைவதால் குறைந்த எரிபொருள் கொள்ளளவுடன் பறக்கும்போது அதிகளவு பலன்களை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வரும் விமானசேவைக் கம்பனிகளுக்கு கிடைத்துள்ளன. தொழிற்பாடுகளில் அதிகளவு உரிமையுள்ள தேசிய விமானசேவை இதன் மூலம் முக்கிய நன்மைகளைப் பெற்று வருகிறது. அத்துடன் ஏனைய கம்பனிகளும் அதற்கு நிகரான விதத்தில் பலன்களை அனுபவித்து வருகின்றன.

**சான்றளிக்கப்பட்ட பயிற்றுவிப்பாளராக எமது தோற்றம**

எமது பயிற்சிப் பாடசாலையான சிவில் விமானசேவைகள் பயிற்சி நிறுவனம் (CATC) சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பின் (ICAO) "Trainer plus" நிகழ்ச்சித் திட்டத்தின் பூரண அங்கத்துவம் 2014 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் பெற்றுக்கொண்டது.
இத்துடன் எமது நிறுவனம் இதனை அறிக்கைவிடும் சந்தர்ப்பமாகும்போது சர்வதேச சிவில் விமானசேவைகள் அமைப்பின் பயிற்சி வழங்குநராக உருவாகியிருக்கும். சர்வதேச ரீதியாக விமானசேவைகளை பயிற்றுவிக்கும் 41 நிறுவனங்களுக்கு மாத்திரம் இதற்குச் சமனான அல்லது இதற்கு மேற்பட்ட வரவேற்பு கிடைக்கப்பெற்றுள்ளன.

கலந்துரையாடலுக்கு ஆளாகும் வருடத்துக்குள் நிதி செயலாற்றுகையை கவனத்திற் கொள்ளும்போது மிகவும் கருதக்கூடியளவில் மொத்த வருமானம் ரூபா 13.7 பில்லியன் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அது கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 13% வளர்ச்சியாகும். அண்ணளவாக மொத்த வருமானத்தில் 2/3 அளவினாலான பங்களிப்பு, வானூர்தி மூலமல்லாத தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமே கிடைக்கப்பெற்றுள்ளன. இது சிறப்புப் பெறுவது நவீன வர்த்தக விமானநிலையங்களில் வானூர்தி மூலமல்லாத வருமான காட்டிகளின் பெறுமதி அதிகரிப்பு பொதுவாக மிகவும் நேர் அளவான காட்சியாக ஏற்றுக் கொள்ளப்படுவதனாலாகும். நிகழ்காலத்தில் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திலும் அவ்வாய்ப்புகளை காணக்கூடியதாகவுள்ளது.

விமானங்கள் தரையிறக்கம் மற்றும் தரிப்பிடக் கட்டணங்கள் மொத்த வானூர்திகள் மூலமான வருமானத்தில் 65% பங்களிப்பை வழங்குகின்றன. புறப்படு பயணிகளால் செலுத்தப்படும் வரி (Embarkation) வருமானமானது, மொத்த வானூர்திகள் மூலமல்லாத வருமானத்திலிருந்து 35% பங்களிப்பு செய்வதுடன், அது வானூர்திகள் மூலமல்லாத வருமானத்தில் உயர் பங்களிப்பாகும். இதனூடாக பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வளாகத்தின் செய்ற்பாட்டினூடாக எமது கம்பனியின் நிதி நிலைமைகள் மீதுள்ள பங்களிப்பு பிரதிபலிக்கின்றது.

எமது கம்பனி இவ்வருடத்தின் வரிக்கு முன்னரான இலாபம் 5.5 பில்லியனாக பதிவு செய்ததுடன், வரிக்குப் பின்னரான இலாபம் 3.3 பில்லியனாக பதிவு செய்தது. வருமான வரிகள் மற்றும் பங்கிலாபங்களாக 0.5 பில்லியன் செலுத்துவதனூடாக எமது கம்பனி அரச தாபனங்கள் மத்தியில் உயர் நிதி செயற்பாடுகளுள்ள கம்பனிகளுடன் இணையும் வாய்ப்பு பெற்றுள்ளது. இவ்வாறு தொடர்ந்தும் அரசுக்கு கருதக்கூடியவாறான வருமானத்தை ஈட்டித் தருவதுடன், பாரிய பங்களிப்பை வழங்குவதால் அது எமக்கு மிகப் பெரிய ஆற்றலாக உள்ளது எம்மால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளில் மீள செலுத்துவதற்கு எதிர் பார்க்கப்படுவதால், அது சவாலாக எம் முன் தோன்றியுள்ளது..

**மொத்த வருமானம்**

**ரூ.பில்.** 13.7 **ன் மூலம்** ↑13%

**மொத்த பங்குகள்**

**ரூ.பில்.** 10.7 **ன் மூலம்** ↑45%

**வரிக்கு முன்னரான இலாபம்**

**ரூ.பில்.** 5.5 **ன் மூலம்** ↑16%

**மொத்தச் சொத்துக்கள்**

**ரூ.பில்.** 59.4 **ன் மூலம்** ↑5%

இதற்குள் மத்தளை சர்வதேச விமானநிலையம் கட்டியமைப்பதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள் இவ்வருடத்திலிருந்து மீள செலுத்தும் பொறுப்பு கம்பனியிடம் இருப்பதைக் கருதக்கூடியதாக உள்ளது. அதேபோல அந்த விமான நிலையத்துக்குரிய சொத்துக்களின் தேய்மானச் செலவும், கம்பனியிற்கு ஏற்க நேரிடும். மேற்குறிப்பிட்ட காரணங்கள் கம்பனி பல வருடமாக பேணிவந்த வருமான மாதிரிகளுக்கு அதிகளவு தாக்கத்தை விளைவிப்பதற்கு அதிகளவு வாய்ப்புகள் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் பாதுகாப்பான திட நிதி முகாமைத்துவம் தந்திரோபாயம் மற்றும் தொலைநோக்குடன் அரசின் மற்றும் நல்லாட்சி கொள்கைகள் இணைக்கும்போது அக்குறித்த சவால்கள் வெற்றிபெற முடியுமென்பது எமது நம்பிக்கையாகும்.

**எமது வாக்குறுதிகள்**

நாம் எதிர்காலத்தில் எமது பதவியணியினர் மற்றும் நாம் செயலாற்றும் சமுகத்திற்குள் முதலீடு செய்யப்படும். தேசத்தை வலுப்படுத்துதல் மற்றும் எமது சேவை, வாடிக்கையாளர்களுக்காக அதிக பெறுமதி வாய்ந்த சேவைகளை வழங்குவதற்காக அதிக பெறுமதி வாயந்த சேவைகளை வழங்குவதற்காக பங்களிப்பு வழங்கக்கூடியவாறான புதிய நடவடிக்கைகளில் முதலீடுகள் செய்யப்படும். அதேபோன்று எமது மனித வளங்கள் முகாமைத்துவம் செய்யும்போது சுற்றாடல் இழப்பீடுகள் குறைந்த மட்டத்தில் பேணுவதற்கும் உறுதியளிப்போம்.

**மதிப்பாய்வு மற்றும் செய்நன்றி**

இதற்கு முன்னர் இருந்த பணிப்பாளர் சபையால் 2014 ஆம் நிதி வருடத்தில் கம்பனியின் வெற்றிக்காக செய்யப்பட்ட வழிக்காட்டல் மற்றும் ஒத்துழைப்பிற்காக எனது நன்றியை தெரிவித்துக் கொள்வதற்கு இதனை வாய்ப்பாக பயன்படுத்திகின்றேன். அதேபோல கம்பனி வெற்றிகரமான பாதையை நோக்கி கொண்டு செல்லும்போது நிகழ்காலத்தில் இருக்கும் பணிப்பாளர் சபையால் கிடைக்கும் ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டலில் எனது முழு நம்பிக்கையும் வைக்கப்பட்டுள்ளதை பிரகடனப்படுத்துவதில் விரும்புகின்றேன்.

அந்தந்த பிரிவுகளால் தேர்ச்சியினை வெளிக்காட்டுகின்ற பல்வேறுபட்ட துறைகள் ஒரு பணிக்காக ஒருமுகப்படுத்தும் பகுதிகள் தலைவர்கள் உட்பட சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு எனது வாழ்த்துக்களை வழங்குவதற்கு விரும்புகின்றேன். கலந்துரையாடலுக்குட்படுத்தும் வருடத்துக்குள் அவர்களின் அர்ப்பணிப்பு, தளத்தகை தோற்றம், தலைமைத்துவம், சிறப்புத் தேர்ச்சி, அனுபவம் மற்றும் தொழில்சார் தேர்ச்சி இல்லாதிருப்பின் உண்மையாகவே இந்த வெற்றியை அடைந்திருக்க முடியாது. மொத்த பதவியணியினர் எமது மிகப்பெரிய சொத்தாக இருப்பதுடன், அவர்களின் தொழில்துறை நிபுணத்துவம் நிறுவனத்தின் மீது உள்ள பற்று மற்றும் அதிக அர்ப்பணிப்பு போன்றவற்றுக்கு நன்றி செலுத்துவதுடன், அவர்களின் அர்ப்பணிப்பு ' தொடர்ந்தும் கிடைக்குமென எதிர்பார்க்கின்றேன்.

இறுதியாக சிவில் விமானசேவைகள் அமைச்சின் அமைச்சர்கள் மற்றும் பணிப்பாளர் சபை மீதும் நம்பிக்கை வைத்து கம்பனியின் பொறுப்பை எம்மீது கையளித்தமை தொடர்பாக நன்றி தெரிவிப்பதுடன் எதிர்வரும் 2015 வருடம் வெற்றிகரமான வருடமாக அமைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும்.

பி.எச். ஆனந்த விமலசேன

தவிசாளர்
ஜுன் 23, 2015



# பணிப்பாளர் சபையினர்

**இடமிருந்து வலமாக**

எஸ். ஆர். ஆட்டிகல - பணிப்பாளர்

டீ.ஜே.ஜீ.எஸ். எதிரிசிங்ஹ - பணிப்பாளர்

ஆர். கெட்டவலகே - பணிப்பாளர்

ருவினி டயஸ் பண்டாரநாயக்க - நிறவேற்றுப் பணிப்பாளர்



**இடமிருந்து வலமாக**

ஜீ.எச் ஆனந்த விமலசேன- தவிசாளர்

எச்.எம்.எஸ்.எல் விஜேரத்ன – உப செயலாளர்

எஸ். கே. சிறில் - பணிப்பாளர்

எல்.டப்ளியு.ஏ.டீ சொய்சா – பணிப்பாளர்

எம்.சீ.ஜீ மஹீபால – கம்பனி செயலாளர்

.

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு



டீ.பி. கருணாரத்ன
பிரதான நிறைவேற்று அலுவலர் (ம.இ.ச.வி)



எச். எஸ். ஹெட்டிஆரச்சி
விமான நிலைய மேலாண்மைத் தலைவர்



எச்.ஏ.ஏ.கே.எம்.செனவிரத்ன
சிவில் விமான சேவை பயிற்சித் தலைவர்



ஜீ. விதானகே
சிவில் பொறியியல் தலைவர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு)



டப்ளியு. சீ. திசேரா
வானோடல் சேவைகள் தலைவர்



கே.எச்.சீ. குமாரசிங்ஹ
பாதுகாப்பு சேவைத் தலைவர்



எஸ்.எம்.ஆர். ரபீக்
கருத்திட்டங்களின் தலைவர்



டப்ளியு.எம்.ஜீ. கருணாரத்ன
வணிக மற்றும் உடமைகள் தலைவர்



ஜே.எம். டி குரூஸ் ரொபின்
கட்டிடக்கலை, நிலத்தோற்றம் மற்றும் உட்புற வடிவமைப்பு பதில் தலைவர்



ஆர்.டப்ளியு. விஜேசிங்ஹ
இயந்திர பொறியியலாளர் பதில் தலைவர



எஸ்.எம்.டீ. விஜேசூரிய
பதில் பாதுகாப்புத் தலைவர்



யு.ஜே.லொக்குஆரச்சி
தொழில்நுட்பத் தகவல்
தலைவர்



எல். தஹநாயக்க
நிதித் தலைவர்



டப்ளியு. விமல்சாந்த
மின்னணுவியல் , வானோடல் மற்றும்
பொறியியல் தலைவர்



டப்ளியு.ஜீ. சிறில்
உள்ளக கணக்காய்வு மற்றும்
தர உறுதிப்பாட்டு தலைவர்



எம்.சீ.ஜீ. மஹீபால
மனிதவளப் பிரிவு தலைவர்
கம்பனி செயலாளர்



ஏ.டி.என்.ஆர். டி அல்விஸ் குணசேகர
தீயணைப்பு மற்றும்
இடர் மீட்புத் தலைவர்



வைத்தியர்
எஸ்.டி.ஏ.எஸ். நிஷாந்த
கம்பனி மருத்துவ அலுவலர்



எம். ரத்னசிங்ஹ
சட்டப்பிரிவுத் தலைவர்



ஜே.எம்.ஏ.யு. ஜயமான்ன
பதில் மின் பொறியியல் தலைவர்



யு.எஸ். ஜாகொட
பதில் சிவில் பொறியியல்
(பராமரிப்பு)



எச்.பீ.எஸ். சிறிமான்ன
பதில் வழங்கீட்டு முகாமைத்துவ
பிரிவுத் தலைவர்



எஸ்.பீ.ஆர். மனுகுலசூரிய
பதில் விற்பனைத் தலைவர்





# 1 மில்லியனிலும்

அதிகமான விமானப் பயணிகள் தொடர்படுத்தும் அமைவிடமாக பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தை தேரந்தெடுப்பது அதன் பேணப்பட்ட உயர் தர சேவைகள் மீது நம்பிக்கை வைப்பதன் மூலமேயாகும்

# முகாமைத்துவ உரையாடலும் பகுப்பாய்வுகளும்...

















# ஒருமுகப்படுத்தல்













# முகாமைத்துவ

# உரையாடலும் பகுப்பாய்வுகளும்

**பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் ஒவ்வொரு துறைகளிலும் தொடர்ச்சியாக வளர்ச்சியடையும் போக்கு.**

**பயணிகளின் அதிகரிப்பு**

ஆண்டுக்காக சுற்றுலாப் பயணிகள் தொடர்பாக கூறப்பட்ட எதிர்வுகூறலை நிஜமாக்கும் வகையில் 1,527,153 சுற்றுலாப் பயணிகளையும் மொத்தமாக 7,766,491 பயணிகளையும் விமான நிலையம் கையாண்டுள்ளது. அதாவது வரலாற்றில் முதல் முறையாக 7.7 மில்லியன் பயணிகளையும், 1.5 மில்லியன் சுற்றுலாப்பயணிகளையும் அண்மித்த முதலாவது சந்தர்ப்பமாகும். சீனா, இந்தோனிசியா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய சேரிடங்களிலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிக வளர்ச்சியை காட்டியதுடன் வட ஆசியா மற்றும் கிழக்கு ஐரோப்பா என்பன அதிகளவு வளர்ச்சியை பதிவு செய்தது.
( வதிவிட நாட்டின் படி சுற்றுலாப் பயணிகளின் வருகை பக்க இலக்கம் 26 இல் காட்டப்பட்டுள்ளது.

**விமானங்களின் அசைவுகள்**

பகுப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் நேர அட்டவணையின் படி பயணிக்கின்ற 28 விமான சேவைகள், உலகம் முழுவதும் 45 நகரங்களுக்கு செல்வதற்கும், மீண்டும் பயணங்களைத் தொடர்வதற்கும் பண்டாரநாயக்கா விமான நிலையத்தை பயன்படுத்தியுள்ளன.

தேசிய விமானசேவையான இலங்கை விமானச் சேவைக்கு மேலதிகமாக தற்போதுள்ள பூரண சேவைகளான கதே பசுபிக், எயார் அராபியா, ப்லய் டுபாய், எதிஹாட் போன்ற விமானச் சேவைகள் தமது தொழிற்பாடுகளை விரிவாக்கி பூரண சேவை விமானச் சேவையில் 4% மொத்த வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. 2013 ஆம் ஆண்டில் 4% ஆன வளர்ச்சியை பதிவுசெய்த குறைந்த செலவு விமானச் சேவைகள் இவ்வாண்டில் 1% ஆன மட்டத்தினைக் கொண்ட வளர்ச்சி வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வுக்குட்படும் ஆண்டில் பூரண சேவை மற்றும் குறைந்த செலவு விமானச் சேவைகளுக்கிடையிலான கூட்டமைவு 17:3 ஆகும்.

**விமானச் சரக்கு தொழிற்பாடுகள்**

மீளாய்வுக்குட்படும் ஆண்டில் கையாளப்பட்ட விமானச் சரக்குகளின் அளவு 209,417 மெட்ரிக் தொன் ஆகும். விமானச் சரக்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகிய இரண்டு துறைகளும் 8% ஆன சம வளர்ச்சியை பதிவு செய்தது. வான் சரக்கு விமானங்களில், வான் சரக்குகளின் அதிகரிப்பிற்கு தற்போதுள்ள விமானச் சேவைகளின் கொள்ளளவு மற்றும் போக்குவரத்து தடவைகளின் அதிகரிப்பும் காரணமாக அமைந்தது.












## மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் வளர்ச்சியின் ஆரம்பம்

2014 ஆம் ஆண்டு மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது தொழிற்பாட்டு வருடமாகும். மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் கொள்ளளவானது, வர்த்தக விமான அசைவுகள் 2, 734 ம், இடைவழிப் பயணிகள் 7,158 ம், அடங்கலாக 40,836 மொத்த பயணிகளை கொண்டமைந்திருந்தது.

## முனையக் கொள்ளளவை விரிவுபடுத்தல்

### முனையம் 2

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் 560 மில்லியன் அமெரிக்கா டொலர் செலவில் புதிய முனையமொன்றை விரிவுபடுத்தி சேர்க்கப்பட்டது. அதி கூடிய கட்டட நிர்மாணிப்புக் கலை, உட்புற அலங்காரம், பிரமிக்க வைக்கும் சில்லரை வர்த்த நிலையங்கள் மற்றும் உணவறைகள் என்ற வகையில் புதிய தோற்றத்துடன் அமைந்துள்ளது. ஆகையால் இந்த முனையம் பயணிகளுக்கு புத்துணர்வை ஏற்படுத்தும் பயணத்தையும், கொள்வனவு அனுபவங்களையும் மேலும் விருத்திச் செய்யக்கூடியதாக அமைந்துள்ளது. இது பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பயணிகளை கையாளும் கொள்ளளவான 06 மில்லியனுக்கும் அதிகமாக, மேலும் 09 மில்லியன் பயணிகளை கையாளும் வருடாந்த கொள்ளளவின் அதிகரிப்பாகும். இடைவழி பயணிகளின் சஞ்சரிப்பு இயக்கமுள்ள பிரதேசத்தை 6000 ம் சதுர அடியால் அதிகரிக்கப்பட்டு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் அழகிய சூழலையும் இடைவழி பயணிகளை கையாளும் கொள்ளளவையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள துணை கட்டிடத்திற்கு மேற்கு புறமாக உட்செல்லல் மற்றும் வெளிச்செல்லல் நேராக செல்கின்ற வண்ணமும், கொழும்பு கட்டுநாயக்கா அதிவேக பாதைக்கு துரிதமாக உட்பிரவேசிக்க கூடிய வகையிலும், நிருமாணிக்கப்பட்ட பயணிகளின் பாலங்களும், 2 கட்டிடங்களும் இக் கருத்திட்டத்தில் உள்ளடங்குகின்றன. இந்த கருத்திட்டம் ஒவ்வொன்றும் வேறுபட்ட மூன்று பெகேஜ்களை கொண்டுள்ளதுடன், 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கருத்திட்டம் ஜப்பான் பிரதமர் மேன்மைதங்கிய ஸின்ஸோ அபே மற்றும் இலங்கையில் மேன்மை தங்கிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை வரலாற்றில் முதல் முறையாக இலங்கை அரசாங்கத்தின் முகவர் நிறுவனமான விமான நிலையம் மற்றும் விமானச்சேவைகள் கம்பெனி என்பன சர்வதேச ஜப்பான் கூட்டுத்தாபன பிரதிநிதியுடன் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆந் திகதி கடன் உடன்படிக்கை கைசாத்திட்டது.

ஏனைய எல்லா கருத்திட்டங்கள் போன்று பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை கையாளும் கொள்ளளவை விரிவுபடுத்தல் என்பது சவால்களையும் இடர்களையும் கொண்டமைந்ததாகும். 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளுக்காக கூறப்பட்ட எதிர்வுகூறலின் பிரகாரம், முறையாக வருடாந்தம் 8.2 மில்லியன் பயணிகளையும், வருடாந்தம் 9 மில்லியன் பயணிகளையும் கொண்டிருந்தது. வருடாந்தம் 06 மில்லியன் பயணிகளை பொதுவான சூழலின் கீழ் கையாளக்கூடிய வகையில் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை திட்டமிடப்பட்டுள்ளதால், கையாளும் கொள்ளளவு தொடர்பான பிரச்சினை காரணமாக பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் வளர்ச்சி ஒரே இடத்தில் இருக்கும் நிலை ஏற்படக்கூடுமென உத்தேசிக்கப்படுகிறது.

புதிய அசைவுகளை கவருதலும், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் மேலதிக வான் அசைவுகளை கவருதலும் 2013 ஆம் ஆண்டில் மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் நீண்டகால தீர்வுகளாக அமைந்தது. பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் புதிய முனையக் கட்டிடம் காரணமாக, கீழே குறிப்பிட்டுள்ளவாறு கொள்ளளவை அதிகரிக்கும் வரை பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் உத்தேச உள்ளக விமான முனையம் மற்றும் தனியார் ஜெட் விமானங்கள் இரத்மலானை விமான நிலையத்திற்கு அனுப்பி வைப்பதன் மூலம் தீர்வுகள் காணப்படுகின்றன.

1 நாளாந்த நேர அட்டவணை பிரகாரம் பயணிக்கும் விமானமான **fly dubai** விமானம் மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் எரிபொருள் நிரப்புமிடம்

2 முனைய கட்டிடம் 2 இற்காக பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது கட்டத்தின் இரண்டாவது படிநிலையின் ஆரம்ப விழா.






தற்காலத்தில் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் கொள்ளளவு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பரிமாணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளதுடன், பாரிய அளவிலான அபிவிருத்தி கருத்திட்டத்தை முடிவுறுத்திய பின்னர் உருவாகும் கொள்ளளவு அடைப்புக் குறிக்குள் காட்டப்பட்டுள்ளது.

- பயணிகளை கையாளும் கொள்ளளவு - வருடாந்தம் 06 மில்லியனாகும். (வருடாந்தம் 15 மில்லியனாகும்.)
- விமான ஓடுப் பாதையில் விமானங்களை கையளாளும் கொள்ளளவு - ஒரு மணித்தியாலத்திற்கு 25 அசைவுகளாகும். (ஒரு மணித்தியாலத்திற்கு 12 வரவுகளும் 13 மீள்செல்லுதலும்)
- விமானச்சரக்கு கையளாளும் கொள்ளளவு - வருடாந்தம் மெட்ரிக் தொண் 250,000 ஆகும்.

- நிறுத்தி வைக்கும் உட்பிரவேசம் - 25(36)
  - பாலத்திற்கான உட்பிரவேசிப்பு - 08
  - பாலமல்லாத உட்பிரவேசிப்பு - 17
- உட்பிரவேசிப்பு வாயில் - 12 (20)
  - பாலமுடன் கூடிய வாயில் - 08
  - தொலைதூர வாயில் - 04
- பரிசோதனை செய்யும் கருமபீடங்கள் - 53 (96)

## வான்வெளி முகாமைத்துவம்

### தொழில்நுட்பத்தை மேம்படுத்தல்

இரத்மலானை விமான பயண முகாமைத்துவ முறைமையினை மேம்படுத்துவதற்காக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனி விசேட முதலீடை மேற்கொண்டுள்ளது. உதாரணமாக பல்வகை ரேடார் முறைமை சேவை (Multi tracking Radar) போன்ற ஒருங்கிணைந்த முறைமை கட்டுப்பாட்டு நிலையங்கள், விமான பயன முகாமைத்துவ முறைமையினை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. தன்னியக்க கண்காணிப்பு ஒளிப்படக்கருவி முறைமையை (Automatic Dependant Surveillance - ADS - C) மேலும் மேம்படுத்தப்பட்டு எதிர் காலத்தில் ADS - B என்ற கண்காணிப்பு ஒளிப்படக் கருவி உபகரணங்களை அறிமுகப் படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் வான் பயன தரவு தயாரித்தல் மற்றும் வான் பயன கட்டுப்பாட்டு இடைநிலை வசதிகளின் தரவு தொடர்பாடல் சேவைகள், வான் பயண முகாமைத்துவ முறைமைகளை மேம்படுத்துவதன் மூலம் வான் சேவையின் தொழிற்பாட்டு செலவை குறைத்துக்கொள்ளும் நோக்கத்துடன், ஆசிய பசுபிக் வலயத்தில் சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பு (ICAO) வீதி வரைப்படத்திற்கு அமைவாக குறித்துரைத்த தேவைகளுக்கேற்ப தீர்மானிக்கப்படுதல் என்பன குறிப்பிடலாம்.

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பெனி விமான போக்குவரத்து சேவை வழங்குநராக இந்த இரத்மலானை வான் பயண கட்டுப்பாட்டு நிலையத்தில் (Area Control Center - ACC) உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் தேவையை அடையாளம் கண்டுள்ளது. (Aviation system Block Update (ASBU) இன் கீழ் ICAO அலுவல்கள் 4 ஐ அடையாளம் காணப்பட்டுள்ளது. பெயரளவில் விமான நிலையங்களின் தொழிற்பாடுகள் (பசுமை விமான நிலையங்கள்) உலகளாவிய interoperable முறைகளும் தரவுகளும் சிறந்த மட்டத்திலான கொள்ளளவு, நெகிழ்வான வான் பயணங்கள் மற்றும் வினைத்திறனுடனான வான் வழிகள், தவணை முறையில் பகுதி 1, பகுதி 2, பகுதி 3 என்ற வகையில் முடிவுறுத்துவதற்கு கருதப்பட்டுள்ளது. கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணை ஒவ்வொரு காலவெல்லைகளுள் பகுதி 1, 2013 ஆம் ஆண்டு தொடக்கம் மிக விரைவில் காலவெல்லைகளின் மாற்றத்தை காட்டும்.

**ICAO Aviation System Block Upgrades (ASBU)**




ASBU குறிக்கோள் யாதெனில், பசுமையான சூழல், பாதுகாப்பான சூழல் என்பவற்றின் மூலம் நாடுகளை இலக்காகக் கொள்ளுதலாகும். இலங்கை மாற்றீடாக இதில் பங்கு கொண்டுள்ளதுடன், அதற்கு உதாரணமாக வளைந்து கொடுக்கும் வீதி முறைமை மற்றும் பயன்படுத்துவதற்கு விருப்பமான வீதி முறைமை மேம்படுத்தல் வேண்டும். அத்துடன் இந்த மொத்த நேரடி வீதி பயன்பாட்டுக்கு கவனிக்கத்தக்க அளவில் பங்களிப்புச் செய்து பயன் படுத்துவதற்கு விருப்பமான வீதி முறைமைக்காக (User Preferred Route) எமது பிராந்தியத்துள் செல்கின்ற நேரடி வீதி பயன்பாட்டை இந்தியா, ஜகார்த்தா, அவுஸ்த்ரேலியா போன்ற (FIR) வலயங்களுக்கும் பயன்படுத்தல் வேண்டும். அதற்கு காரணங்களாக விமான திட்டமிடல்களில் அதிக எண்ணிக்கை (aero mobile) ஊடாக கிடைக்கப்பெறுகின்ற வான் நிலை அறிக்கைகள், ADS, விமானப் பயண கட்டுப்பாட்டு முன்னோடி தரவு தொடர்பாடல் வழி, (CPDLC) அறிக்கைகள் சான்றுகளாகும். எமது அடுத்த கட்ட நடவடிக்கையாக விமான நிலையம், விமான சேவை கம்பனி CDO மற்றும் CCO முறை விசேட எரிப்பொருள் சோதனை, காபன் வெளியீடு என்பன அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. கொழும்பு ACC ஆல் விமானங்கள் இரண்டுக்கிடையில் (Reduse Horizonatal separation) நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பது, இரண்டு விமானங்களுக்கிடையிலான ஆகக்குறைந்த தூரம் 2014 ஆம் ஆண்டில் இருந்து கடல் வழியில் 80 மைல் தூரத்தை - கடல் வழி 50 மைல் தூரம் வரை ADS/CPDLC கொண்டமைந்த விமானங்களுக்கு ஆகக்கூடிய வான் மட்டங்கள் மற்றும் எரிப்பொருள் விரயத்தை குறைத்துக்கொள்வதற்காகும். மேலும் வான் பயன அனுமதி மற்றும் விமானங்களிலிருந்து வெளியேற்றும் $CO_2$ கவனத்தில் கொள்ள தக்க அளவில் குறைத்துக்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. எமது அடுத்த கட்டமாக விமான நிலையம் மற்றும் விமான சேவை கமபெனியில் Continues Descend Operation (CDO) Continues Climb Operation (CCO) அறிமுகப்படுத்துவதன் மூலம் எரிபொருள் மீதப்படுத்துவதனையும் எரிபொருள் வெளியீடினையும் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு Approach Control Center ஆல் CCO, CDO மற்றும் விமான ஓட்டிகள் விருப்பமான உட்பிரவெசத்தில் தரை இறக்குவதற்கு CDM கொழும்பு ACC ஐ பயன்படுத்தலாம். CDM இன் கீழ் Approach Control Center முதலாவதாக கூட்டிணைந்து தொடர்ச்சியான ஏற்றத்துடன் செல்கின்ற போது Area Control Center இடம் கையளித்த பின்னர், ஏனைய பறக்கும் தகவல் வலயத்திடம் (FIR) கையளித்த பின்னர் அடுத்து வரும் பறக்கும் தகவல் வலயத்திடம் கையளிக்கும் வரை கவனிக்கத்தக்க அளவில் எரிப்பொருளை மீதப்படுத்தலாம். 95% அளவிலான விமானங்கள் CDO, CCO வசதிகளுடன் உள்ளதுடன், சீரற்ற காலநிலை காரணமாக நிராகரிப்பதற்கு இடமுண்டு. வான் பயண கட்டுப்பாட்டின்போது 2016 ஆம் ஆண்டில் மேம்படுத்துவதற்கு இந்த உத்தேச திட்டம் மேலும் கொழும்பு ACC இன் வான் பயணத்திற்கான பாதுகாப்பு, வினைத்திறன் 2030 வரை இருக்கும். இந்த உட்கட்டமைப்பு வசதிகள் 2015 ஆம் ஆண்டில்

நடைமுறைப்படுத்துவதற்கு எதிர் பார்க்கப்படும் performance based navigation முறைமைக்கு உதவியாக அமையும்.

## CANSO - ஆசியா பசுபிக் மாநாடு

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பெனி மிக வெற்றிகரமாக 2014 ஆம் ஆண்டு நடாத்திய விமான போக்குவரத்து சேவை நிறுவனத்தின் (CANSO) ஆசிய பசுபிக் மாநாட்டின் பொருட்டு அனுசரணை வழங்கியது. 48 நாடுகளின் 148 அரச தூதுவர்கள் பங்குபற்றிய இந்த மாநாடு அதிக பங்களிப்பு வழங்கிய மாநாடாக பதிவு செய்யப்பட்டது. இந்த மூன்று நாள் மாநாட்டில் பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளின் மீது அதிகூடிய கவனம் செலுத்தப்பட்டதுடன், வான் போக்குவரத்து முறைமையின் அறிவு அனுபவம் மற்றும் எதிர்கால திட்டங்கள் என்பனவும் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டது.

## பாதுகாப்பும் இடர்காப்பும்

விமான நிலைய முகாமையாளர், வழிநடாத்துநர் மற்றும் இலங்கை விமான சேவை நிலையத்தின் மேம்படுத்துநராக பணியாற்றும் விமான நிலைய மற்றும் விமான சேவை கம்பெனியின் பிரதான பணி யாதெனில், விமான தொழிற்பாடுகளின் பாதுகாப்பையும் இடர்காப்பையும் உறுதிப்படுத்தலாகும். மேலும் பிரயாணிகளுக்கு பாதுகாப்பான மென்மையான அனுபவங்களை வழங்கும் நோக்கத்துடனும், விமான நிலைய தரப்புகளுக்கு நின்றுநிலைக்கும் அலுவலக சூழலை வழங்குவதற்கும் விமான நிலைய மற்றும் விமான சேவை பாதகாப்பு பிரிவு ஒன்றிணைந்து விமானநிலைய சமூகத்துடன் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நியைத்தின் பாதுகாப்பு, இடர்காப்பு என்பவற்றின் தரத்தை மேம்படுத்தி உறுதிப்படுத்துவதற்கு பணியா ற்றுகின்றன.

## விமானத் தளத்தின் பாதுகாப்பு

பாதுகாப்பு முகாமைத்துவ பிரிவானது, பாதுகாப்பு முகாமைத்துவ முறை பயனுள்ளதாக செயற்படுகின்றதா என கண்காணிப்பதுடன், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம், மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம், மற்றும் இரத்மலானை விமான நிலையங்களின் கட்டாய பாதுகாப்பை ஒழுங்குபடுத்தல் தேவைகளை தொடர்ச்சியாக மேற்கொள்கின்றது. இந்த நோக்கங்களை எய்துக்கொள்வதற்கென்றால் 03 விமான நிலையங்களிலும் விமானத் தளங்களின் தொழிற்பாட்டு பிரிவுகள் பாதுகாப்பாக இயங்குகின்றதா என்பது தொடர்பாக பாதுகாப்பு முகாமைத்துவ பிரிவு பாரிய கவனம் செலுத்துகின்றது.

## இடர்களும் முன்னாயத்தமும்

இயற்கையுடனான இடர்களின் பின்னர் ஏற்படும் நிலைமைகளை எதிர்நோக்குவதற்கு, 33 பேர் பங்குபற்றிய 4 நாட்களிலான G A R D (get Airport Ready For Disasters) செயலமர்வு 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நடைபெற்றது. நிலைபேறுடன் கூடிய பரிபூரண விமான நிலையமாக மதிப்பீடு செய்து உறுதிப்படுத்துவதற்கு தேவையான எல்லா தரப்புகளும் இதில் பங்கு கொண்டனர். இந்த விசேட இடர்காப்பு செயலமர்வில், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பெனி, சிவில் விமானசேவை அதிகார சபை, ஸ்ரீ லன்கன் எயார்லயின்ஸ், விமான போக்குவரத்து கம்பெனி, தொழிற்பாட்டு குழுக்கள், இலங்கை விமானப்படை, சுங்கம், குடிவரவு குடியகழ்வு, இடர் முகாமைத்துவ நிலையம், U N D P, U N O C A மற்றும் செஞ்சிலுவை போன்ற நிறுவனங்கள் பயன்பெற்றன. விமானச் சேவை நடவடிக்கைகள்

## விமானச் சேவை நடவடிக்கைகள் தொடர்பான பாதுகாப்பு

விமானச் சேவை நடவடிக்கைகள் தொடர்பான பாதுகாப்பை ஏற்படுத்தல் விமான நிலையம் மற்றும் விமானச்சேவை கம்பெனியின் முக்கியமான பணியாகும். அதற்காக விமான நிலையத்தின் எல்லை வேலியின் பாதுகாப்பின் பொருட்டு பொறுப்பு கூறுகின்ற இலங்கை விமானப்படை, பொலிஸ், தாவரம் மற்றும் விலங்கு தொற்று தடைக்காப்பு நிறுவனம், இடர் முகாமைத்துவ நிலையம், இலங்கை சுங்கம் போன்ற அரச முகவர் நிறுவனங்களுடன் தொடர்புபட்டு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் உயர் பாதுகாப்பு முகாமைத்துவ தரத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு விமான நிலையம் மற்றும் விமான சேவை கம்பெனி பணியாற்றுகின்றது.

இலங்கை சிவில் விமான சேவை பணிப்பாளர் நாயகத்தின் விருப்புடன் சர்வதேச விமான சேவை கட்டாய பாதுகாப்பு கட்டளைப் படி நடைமுறைப்படும் பொருட்டு முறையாக சேவை வழங்குநர்களுக்கு வழங்கப்பட்டது. பிட்ஸ் சிவில் விமான சேவை தனியார் கம்பெனி, பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் சர்வதேச வான் பொருட்களை தொழிற்படுத்தும் அவ்வாறான நிறுவனமாகும்.

1. விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பெனி அனுசரணை வழங்கிய C A N S O ஆசியா பசுபிக் மாநாடு

2. 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் கொழும்பில் நடைபெற்ற G A R D செயலமர்வு தொடர்பான பத்திரிக்கை கலந்துரையாடலில் பாதுகாப்பு முகாமையாளர் ( வலது பக்கமிருந்து முதலாவதாக)


1



2






1. 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நடைமுறைப்பட்ட அவசர தேவையின் பொருட்டு மேற்கொள்ளும் பரிபூரண முயற்சி
2. I C A O வின் தேவையை பூர்த்தி செய்து, நீர்கொழும்பு கடலேரியில் 24 மணித்தியாலங்கள் முழுவதும் நடைமுறைப்படும் நீரில் ஏற்படும் விபத்துகளிலிருந்த மீட்கும் நடவடிக்கைகள்
3. C A P S C A வில், நிறுவனத்தின் மருத்துவ அலுவலர், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் பொது சுகாதார அவசர தேவையின் பொருட்டு தயாராக இருத்தல்
4. பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் LED டிஜிரல் ஊடக காட்சி பலகை

சிவில் விமான சேவையின் பாதுகாப்பு வழங்குவதற்காக, இந்த கட்டாய சிவில் விமான சேவை பாதகாப்பு தொழிற்பாட்டு தேவைகளை பூர்த்தி செய்வதற்கு 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3 ஆந் திகதி விமான நிலையம் மற்றும் விமானச்சேவை கம்பெனி பிட்ஸ் விமானச்சேவை கம்பெனியுடன் இணைந்து சேவை மட்டத்திலான உடன்படிக்கை கைச்சாத்திட்டன.

### தீயணைப்பும் மீட்டலும்.

எமது தீயணைப்பு மற்றும் மீட்புப்பிரிவு வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றும் வண்ணம் பயிற்சி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்றது. A 380 விமானமொன்றில் திடீரென ஏற்படும் நிலைகளுக்கு முன்னாயத்தமாக மத்தலை ராஜபக்' சர்வதேச விமான நிலையத்தை அடிப்படையாகக்கொண்டு தீயணைப்பு பிரிவில் 06 தலைவர்களுக்கு சிங்கப்பூரில் வெளிநாட்டு பயிற்சி வழங்கப்பட்டது. அதாவது இவ் வகையை சார்ந்த புதிய விமானமொன்று தமது வர்த்தக தொழிற்பாட்டின் போது ஏற்படும் திடீர் தீ நிலைமைகளின்போது மீட்கும் முயற்சியின் பகுதியாகவே இப் பயிற்சி வழங்கப்பட்டது. இந்த குறிக்கோளின் பொருட்டு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் தீயணைப்பு பிரிவில் 05 தலைவர்களை தற்போது பயிற்றுவிக்கப்பட்டுள்ளது.

### விமானநிலையத்தின் அவசர சேவைகள்

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம், மத்தலை ராஜபக்ஷ விமான நிலையம், இரத்மலானை விமான நிலையம் என்பவற்றுக்கு விமான நிலைய அவசர சந்தர்ப்பங்களின் திட்டம் (AEP) அபிவிருத்தி, விநியோகித்தல் மற்றும் மாற்றங்களை மேற்கொள்வதற்குள்ள பிரதான குழுவாக, விமான நிலைய அவசர சந்தர்ப்ப பிரிவு செயற்படுகின்றது. இந்த குழு AEP எந்தவொரு திருத்தங்களை மேற்கொள்கின்றபோதும் ஒப்பமிடுதல் வேண்டும். இந்த குழு 2 மாதங்களுக்கொரு முறையும், தேவையான எல்லா நேரத்திலும் கூடும். பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம், மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் மற்றும் இரத்மலானை விமான நிலையங்களில் அவசர சந்தர்ப்ப திட்டம், திடிர் விபத்துக்களின் பொருட்டான ஆயத்தம் என்பன பயிற்சிகளின் மூலம் எப்பொழுதும் பரீட்சிக்கப்படுகிறது. பூரண அளவிலான அவசர சந்தர்ப்ப பயிற்சிகள் இரண்டு ஆண்டுகள் கடக்காத வண்ணம் நடாத்தப்படுகிறது. இடைப்பட்ட ஆண்டுகளில் விமானத் தளங்களின் பூரண அளவிலான அவசர சந்தர்ப்ப பயிற்சிகளின் போது அடையாளம் காணப்பட்ட குறைப்பாடுகளை சரிப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக பகுதியான திடீர் சந்தர்ப்ப பயிற்சி நடாத்தப்படுகிறது. ஒவ்வொரு பயிற்சி முடிவடைந்தவுடன் அவசர சந்தர்ப்ப முகாமைத்துவ குழு மூலம் விபரங்களை அறிவதற்கு அமர்வுகள் நடாத்தப்படும். 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பூரண அளவிலான அவசர சந்தர்ப்ப பயிற்சி வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டது.

அவசர சந்தர்ப்ப திட்டமிடல் குழுவின் கீழ் பாதுகாப்பு, மருத்துவம், தொடர்பாடல், போக்குவரத்து, இயங்காதுள்ள விமானங்களை அகற்றல், வசதிகளை வழங்குதல் போன்றவற்றிற்கு 06 துணை குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டன

### சுகாதார விழிப்புணர்வு

### எபோலா தொடர்பாக விபரம் அறிதல்

WHO மூலம் எபோலா நோய் பரவும் நிலை விமான பயணங்கள் ஊடாக உலகம் முழுவதும் பரவிச் செல்கின்ற அவதானம் உள்ளதாகவும், அதன் மூலம் சர்வதேச அளவில் பொது மக்களின் ஆரோக்கியத்திற்கு பாதகமான நிலை ஏற்படுவதாகவும் 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்டது. இந்த தொற்றுநோய்க்கு எதிராக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பெனியால் மருத்துவ பிரிவு, சுகாதார அமைச்சு, WHO உள்நாட்டு அலுவலகம் என்பன இணைந்து பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம், மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் என்பவற்றில் நிவாரண உபாய முறைகளை அறிமுகப்படுத்தின. இதன் போது மேற்காபிரிக்க பிராந்தியத்தின் ஊடாக வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கான நிவாரணம் தொடர்பாக சுகாதார அமைச்சில் தொற்று நோய் மருத்துவமனை, WHO அலுவலகம் என்பவற்றின் ஒத்துழைப்புடன் மருத்துவ பதவியினரின் உயர் பரிசோதனையுடன் பயணிகளையும் முன் வரிசை அலுவலர்களையும் (front line விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி நடைமுறைப்படுத்தப்பட்டது.



3



4

## CAPSCA விமான பயணங்களின் மூலம் தொற்று நோய் பரவுவதனை தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒத்துழைப்பு முன்னாயத்தம்

அதிகளவில் பரவுகின்ற எபோல்லா வைரஸை இலக்காகக் கொண்டு எகிப்து நாட்டில் கயிரோவில் நடைபெற்ற கலந்துரையாடலில் CAPC உலக மகாநாட்டில், நிறுவன மருத்துவருடன் சிவில் விமான சேவை அதிகார சபை, ஸ்ரீ லன்கன் விமான கம்பெனி, பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் சுகாதார அலுவலகத்தில் பிரதிநிதியாளர்கள் பங்குபற்றினார்கள். இலங்கை பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் அவசர சந்தர்ப்பங்களில் மிக வெற்றிகரமாகவும் வேகமாகவும் பொது மக்களின் சுகாதாரத்தின் பொருட்டு முன்னாயத்த திட்டமிடல்களை நடைமுறைப்படுத்தியதால் உலக மாநாட்டில் பரந்தளவிலான பாராட்டுக்கு உட்படுத்தப்பட்டது.

### வியாபாரத்தின் பரம்பல்

### வியாபார பிரச்சாரத்திற்கு புதிய முயற்சி

விமான நிலையம் மற்றும் விமான சேவை கம்பெனி விமான நிலையத்தில் பிரச்சார ஊடகங்களில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் பிரச்சார வருமானத்தை அதிகரிப்பதற்கு புத்துணர்வூட்டும் மற்றும் புரட்சிகரமான முயற்சிகளை மேற்கொண்டது. பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் வர்த்தக பிரச்சாரத்தை அதிகரிப்பதற்கு நாம் எமது பிரச்சார பலகை சட்டகங்களை புதிய முறையில் மாற்றியமைத்ததுடன், பெகெப் ஓடுபாதை உள்ளிட்ட முனையத்தின் உட்புற மற்றும் வெளியக உபாய ரீதியாக முக்கியத்துவம் கொண்ட பிரச்சார பிரதேசங்களுக்கு உயர் டிஜிரல் ஊடாக தொழில்நுட்ப முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. எமது முனையத்தின் உட்புறத்தை சுற்றி வீடியொ பலகை சட்டகங்கள் 03 பொருத்தப்பட்டதுடன், முனையத்திற்குள் LCD டிஜிரல் காட்சியின் பொருட்டு வைக்கப்பட்ட 19 பலகை சட்டகங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.

மேலதிக வருமான உற்பத்திக்கு மேலதிகமாக இந்த நவீனமயப்படுத்திய பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில், விமான நிலைய பிரச்சாரம் தரத்துடன் மேம்படுத்தப்படுமென உத்தேசிக்கப்படுவதுடன், எமது பயணிகளுக்கு மனம்கவரும் விமானநிலைய அனுபவத்தையும் வழங்குவதற்கு எதிர் பார்க்கப்படுகிறது.

### வர்த்தக பிரதேசங்களை மீண்டும் ஸ்தாபித்தல

வெளியேறும் பரிசோதனை பிரதேசத்தை இட வசதிகளுடன் ஸ்தாபிப்பதற்காக வெளியேறும் பொது மக்கள் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த வர்த்தக நிறுவனங்கள், வெளியேறல் நடைபாதையில் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த மீள் ஸ்தாபித்தலுடன் வெளியேறும் நடைபாதையில்(Departure walk way) வர்த்தக பெறுமதியை அதிகரிக்கப்பட்டதுடன், வெளியேறுகின்ற பயணிகளுக்கு கொள்வனவு செய்வதற்காக இலகுவான உட்பிரவேசத்தை ஏற்படுத்தப்பட்டது.

### இடைவழி பயணிகளின் தீர்வை வரியற்ற கொள்வனவு பிரதேசத்தின் விரிவாக்கல் கட்டம் 11

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பெனி விமான முனையக் கட்டிடத்தின் உட்புறத்தில் வர்த்தக வசதிகளை நவீனமயப்படுத்தி, அதனூடாக பயனுள்ள பொருள் பண்டம் வாங்கிச் செல்லும் குதூகலப் பயண அனுபவத்தை பயணிகள் பெற்றுக்கொள்ள வேண்டும்மென்பதில் எப்பொழுதும் முயற்சி எடுக்கின்றன. இடைவழிப் பயணிகளின் பிரதேசத்தை மீண்டும் ஸ்தாபித்தலின் ஊடாக இந்த நவீனமயப்படுத்தல் செயற்படுத்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது கட்டத்தின் விரிவாக்கல் நடவடிக்கைகளின்போது 1250 சதுர மீற்றர் அளவிலான இட வசதி ஏற்படுத்தப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் கருத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் 198 மில்லியன் செலவில் தீர்வை வரியற்ற கடைகள் மற்றும் விற்பனை நிலையங்கள் என்பன பொருட்டு மேலும் 1500 சதுர அடியிலான இடவசதி ஏற்படுத்தப்பட்டது. உலக அளவில் வியாபித்துள்ள உடனடி உணவு தயாரிப்பு உணவகங்களைக் கொண்டுள்ள “பர்கர் கின்ங்” உடன் இடவசதி வழங்கும் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த விரிவாக்கல் கட்டம் இரண்டையும் கொண்டமைந்த இடைவழி பயணிகளின் பிரதேசங்கள், சுற்றுலா துறையின் வளர்ச்சியடையும் ஆரோக்கியம் தொடர்பான சுற்றுலாப் பயணங்களை பலப்படுத்துவதற்கு காரணமாக அமைந்துள்ள சம்பிரதாய ஆயுர்வேதம் மற்றும் இயற்கை மூலிகைகளைக் கொண்டமைந்த நிலையங்கள், நறுமருந்துச் சிகிச்சை வசதிகளை கொண்டமைந்துள்ளன. மேலும் இது சகல வசதிகளையும் கொண்ட சிறுவர் பராமரிப்பு பகுதியையும் கொண்டமைந்துள்ளது. இந்த விரிவாக்கலுக்கு முன்னர் சிகிச்சை நிலையங்கள் மற்றும் அதிவசதிகளுடன் கூடிய 24 அறைகளைக்கொண்ட இடைவழி பயணிகளின் ஹோட்டல் நிருமாணிக்கப்பட்டது.

### வான் சரக்கு கிராமத்தின் விமான முனையம் 03

இலங்கை முதலீட்டு ஊக்குவிப்பு சபை ஊடாக ஏற்றுமதி வர்த்தக சமூகத்திற்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கும், 24 மணித்தியாலங்கள் முழுவதும் ஏற்றுமதி இறக்குமதி கடித ஆவணங்களை தயாரிப்பதற்கும், வான் சரக்கு கிராமத்தில் (ACV) விமான முனையம் 03 இன் முதலாவது மாடியில் அலுவலக இட வசதிகள் 15 ஐ போட்டியுடன் கூடிய விலை கோரலுக்கமைவாக வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டது. இந்த கட்டத்துடன் ACV, 34 வான் சரக்கு களஞ்சியங்கள், 30 அலுவலக இட வசதிகள் மற்றும் 10 விமான சேவை கம்பெனிகளை கொண்டமைந்துள்ளது.

### சுத்தம் முதன்மையாதல்

விமான நிலையத்தின் மூலைமுடுக்கு என்று எல்லா இடங்களிலும் அலங்காரமாகவும் சுத்தமாகவும் வைத்துக் கொள்ளும் பொறுப்பு வெளியக தரப்புகளிடம் வழங்கிய போதிலும், குறித்த நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் கையளித்த பொறுப்பை குறையின்றி நிறைவேற்றுவது எமதும் அவர்களதும் கண்காணிப்பின் கீழாகும். அதன் மூலம் அவர்கள் பயணிகளின் பிரயாண அனுபவங்களின் பொருட்டு சிறிய ஆயினும் பயனுள்ள மாற்றத்தை உருவாக்குகின்றனர். விமான நிலையம் மற்றும் விமான சேவை கம்பெனியினதும் உட்செல்லல் வெளிச்செல்லல் முனையங்களில் 180 சுத்தம் செய்பவர்களும் 13 மேற்பார்வையாளர்களும் உள்ளனர். துணை கட்டிடங்களில் 124 சுத்தம் செய்பவர்களும் 10 மேற்பார்வையாளர்களும் சேவையில் உள்ளனர்.

### சந்தைப்படுத்தல் முயற்சி
### மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் சந்தைப்படுத்தல் உபாய முறைகள்

கைத்தொழில் சக்கரத்தில் ஆரம்ப கட்டத்தில் உள்ள மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை மேம்படுத்தல் எமது பிரதான சந்தைப்படுத்தல் முயற்சியாகும். அனைத்து வாடிக்கையாளர்களுடனும் தொடர்புகளை கட்டியெழுப்ப முடியாத படியால் மிகவும் ஆற்றலுடைய வாடிக்கையாளர்களுடன் தொடர்புகளை கட்டியெழுப்புவதற்கு முயற்சிகளை மேற்கொண்டோம். பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் நேர அட்டவணைகளின் படி தொழிற்படும் விமானங்கள் மாற்றுவழியின் போது தெரிவு செய்வதற்கு மிக பொருத்தமான விமான நிலையமாகவும், பிரதானமாக கடல் சார்ந்த விமான வழிகளில் மேல் ஆகயத்தில் பயணிக்கும்போது மாற்று விமான நிலையமாகவும், தற்போது பயணிக்கின்ற விமான நிலையங்களுக்கு மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் பரிமாறல், பரிமாற்றம் நிலையமாகவும் சேர்கின்ற பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு நாம் கடைப்பிடித்த உபாயவழிமுறைகள் முக்கியமாகும்.

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்துடன் ஒப்பிடுகையில் மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கல் மற்றும் நிறுத்திவைத்தல் கட்டணத்திற்கு வழங்கும் சலுகை 2013 ஆம் ஆண்டு தொடக்கம் மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் தற்போதும் பயன்கொள்வதுடன், விமான நிலையத்திடம் வருகை தரும் மற்றும் வெளியேறும் விமானங்கள் தொடர்பாக எமது மேம்பாட்டு பிரிவு, இலங்கை பெற்றொலிய கூட்டுத்தாபனத்துடன் (CPC) ஆண்டுக்குள் மேற்கொள்ளப்பட்ட பேரப்பேச்சின் பயனாக, பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்துடன் ஒப்பிடுகையில் 3.7% தொடக்கம் 7.2 % வரை வான் எரிபொருள் சலுகையையும் பயன்கொள்கின்றது.



1

1. இடைவழி பயணிகளின் பிரதேசத்தில் விரிவாக்கப்பட்ட தீர்வை வரியற்ற கடைகள்

2. நத்தார் பண்டிகையின் பொருட்டு அலங்காரப்படுத்திய இடைவழிப் பயணிகளின் பிரதேசம்

3. எல்லா வகையிலும் பரிபூரணமானதும், சுத்தமானதும் விமான நிலையத்தை பயன்படுத்தல் பயணிகளின் எதிர்பார்ப்பாகும்.



2



3

எமது முயற்சியின் காரணமாக தமது வலையமைப்பில் முடிவிடமாக மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் தெரிவு செய்த வான் கம்பெனிகள் எவ்வளவு என்பது தொடர்பாக தீர்மானிப்பதற்கு காலம் வர வில்லையென்றாலும், ஆற்றல் உள்ள விமான கம்பெனிகளால் மேற்கொள்கின்ற பயனுள்ள உசாவுதல்கள் எம்மை தைரிய மூட்டுவதாக அமைந்தது. நாம் விமான சேவைகளையும், விமானப் பயணிகளையும் மனம்கவர செய்வதற்கு இலங்கை சுற்றுலா சபை, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் (SLTPB) வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் என்பவற்றுடன் (SLBFE) ஒத்துழைப்புடன் பணியாற்றுவதற்கு முயற்ச்சிக்கின்றோம்.

## நத்தார் பொருள் பண்டம் வாங்கிச் செல்லும் குதூகல விழா

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பெனி பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் பிரதான ஆண்டு அம்சமான, நத்தார் பொருள் பண்டம் வாங்கிச் செல்லும் குதூகல விழாவை தொடர்ச்சியாகவும் ஐந்தாவது முறையாக நடாத்தியது. 2014 ஆம் ஆண்டில் “ விமான நிலைய நத்தார் பொருள் பண்டம் வாங்கிச் செல்லும் குதூகல விழா 2014/2015” என்ற தலைப்பை விரிவுபடுத்தி அதற்கு மத்தலை ராஜபக்ஷ சர்வதெச விமான நிலையத்தையும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

எல்லா பயணிகளுக்கும் சீட்டிலுப்பின் மூலம் மனம் கவரும் பரிசுகளை பெற்றுக்கொள்ளும் அரிய வாய்ப்புகளை ஏற்படுத்தி, அவர்களின் தீர்வை வரியற்ற கொள்வனவுகளுக்கு கிடைக்கப்பெறும் மனம்கவரும் பருவகால சலுகைகளுக்கு மேலதிகமாக, விமான நிலைய முனையத்தினுள் பொழுதுபோக்கு விளையாட்டுகள் உட்பட பொழுதுபோக்கு அம்சங்கள் பலவற்றை ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்தன. விமான நிலையத்தில் உண்மையாகவே சிறந்த சூழலை ஏற்படுத்தி வி.வி.சே.க. மட்டுமல்லாது, ப.ச.வி, ம.ரா.ச.வி. இல் இருக்கின்ற அனைத்து உதவியாளர்களும் இவ்விழாவினை வெற்றிகரமாக்குவதற்கு தம்முடைய பங்களிப்பை வழங்கினர். பணப்பரிசுகள் மற்றும் இலத்திரனியல் வீட்டு உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் போன்ற

4. பெமினா மிஸ் சைனா - 2014 அழகு ராணி போட்டியில் இறுதி போட்டியில் ம.ரா.வி.நி ஊடாக வெளியேறுவதற்கு முதல் எமது புதிய வெளிநாட்டு பிரச்சார தலைவர்களாக

5. மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் தீர்வை வரியற்ற பொருள் பண்டம் கொள்வனவு செய்தல்

6. வான் சரக்கு கிராமத்தில் பிரயாண பைகளில் குறியீட்டு இலக்கங்களை பரிசோதனையிடல்

கவர்ச்சிகரமான பரிசில்களிடையே சீட்டிலுப்பின் மூலம் வழங்கப்படுகின்ற முக்கிய பரிசாக ஐடியல் செரி ஒட்டோ மொபைல்ஸ் கம்பனியின் அனுசரனையில் வழங்கப்படுகின்ற புத்தம்புதிய செர்ரி J3 ஸ்போட்ஸ் வகையைச் சார்ந்த மோட்டார் வாகனமாகும். முனையத்தில் அல்லது பிரயாணிகள் சஞ்சரிக்கும் இடங்களில் 10 டொலர்களைச் செலுத்தி எந்தவொரு பயணியும் இச்சீட்டிலுப்பில் பங்கு கொள்ள முடியும்.

2010/2011 தொடக்கம் ஆரம்பிக்கப்பட்ட இவ்விழாவானது நிலையான விருத்தியொன்றைக் காட்டி நிற்பதுடன் பலராலும் எதிர்பார்க்கப்படுகின்ற முக்கியமான வருடாந்த நிகழ்வாகக் கடந்த நான்கு வருடங்களாக இடம்பெற்றுக்கொண்டு வருகின்றது.

## LOCKING THE VACUUM

வர்த்தகப் பெயர் அபிவிருத்தி, விமானச் சேவைகள் தொடர்பான விற்பனை புலனாய்வுத் தகவல்கள் போன்ற இலங்கை விமானச் சேவைகளின் பரம்பல் மற்றும் தற்போது காணப்படுகின்ற சிற்சில இடைவெளிகளை நாம் இணங்கண்டதுடன், போட்டிச் சந்தையின் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில், நாம் அத்துறைகளில் நிதி முதலீடு செய்தோம்


6


4


5

## ATL மேம்பாட்டுத் திட்டம்

ப.ச.வி. இன் இரண்டாம் கட்டம் இரண்டாம் படிமுறை அபிவிருத்தி திட்டத்தின் நன்மைகளை இரத்மலானை விமான நிலைய சர்வதேச ஒருங்கிணைந்த ஜெட் நடவடிக்கைக்கான முதலீடு, இலங்கையை எமது பிராந்தியத்தின் விமானச் சேவைகள் கேந்திரஸ்தானமாக மாற்றுதல் போன்ற நோக்கங்களுடன் ஒருங்கிணைந்தும் அறிவுறுத்தியும் வர்த்தகப் பெயர் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு பாரம்பரிய அச்சு ஊடகத்திலிருந்து துரித விருத்தியை எட்டிக் கொண்டிருக்கின்ற டிஜிடல் ஊடகத்தைப் பயன்படுத்தி எமது திட்டமிட்ட விற்பனை நடவடிக்கைகளது ஒரு பகுதியாக Above The Line(ATL) மேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியமை.

### உள்ளக நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைகள்

## முதலாவது முயற்சியாண்மை வளத்திட்டமிடல் கட்டமைப்பு (ERP)

2014 மார்ச் மாதத்தில் முதலாவது ERP கட்டமைப்பானது வி.வி.சே.க.ல் ஆரம்பிக்கப்பட்டது. இதன்மூலம் புதிய தலை முறையினருக்கு உரிய (Point of Sales(POS) செயன்முறைக்கு உட்படுத்தியதன் மூலம் வி.வி.சே.க.யின் மொத்த மதிப்பீட்டில் முதலாவது மற்றும் துணைச் செயற்பாடுகளின் வினைத்திறனை விருத்தி செய்தலுடன் இருப்பு முகாமைத்துவத்தையும் விருத்தி செய்தல்.

## வரவு செலவுத் திட்டம்

வி.நி. மற்றும் வி.சே.க.யின் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் செயற்பாடானது பாரம்பரிய அணுகுமுறைக்குப் புறம்பாக அதாவது, முதல் தர முகாமைத்துவத்தின் பங்களிப்புடன் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டதுடன் அதனைத் தயாரிப்பதற்கும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் அவர்கள் பொறுப்பேற்றமையும் முக்கிய அம்சமாகும். மேலும், முன்னைய வருடத்தின் வரவு செலவுத் திட்டத்திற்கு சதவீத வேறுபாடுகளை உள்ளடக்கி முன்கொண்டு செல்வதற்குப் பதிலாக வருகின்ற வருடங்களில் விற்பனை இயலளவை கவனத்திற் கொண்டு புதிய வரவு செலவு திட்டமொன்றைத் தயாரித்தல் நிறுவனத்தின் முறையாகும். இதன் மூலம் நெகிழ்வுத் தன்மையான வரவு செலவுத் திட்டமொன்று தயாரிக்கப்படுவதுடன் புதிய தகவல் பயன்பாட்டில் இது இற்றைவரைப்படுத்தப்படுகின்றது.

## தர முகாமைத்துவ கட்டமைப்பு (QMS)

வி.நி. மற்றும் வி.சே.கம்பனியின் தர முகாமைத்துவ கட்டமைப்பானது ISO 9001 i 2008 தரத்திற்கு அமைவாக தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் வி.நி. மற்றும் வி.சே.க.யின் அடிப்படை செயற்பாடுகள் உள்ளடக்கப்படுகின்றன. வருடத்தில் உள்ளக கணக்காய்வு மற்றும் தரச்சான்றுப் பிரிவின் மூலம் QMS பூரணப்படுத்தப்பட வேண்டிய தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படுவதாக உறுதிப்படுத்துவதற்கு ஆகாய விமான சேவை, விமான நிலைய முகாமைத்துவ இலத்திரனியல் மற்றும் ஆகாய விமான பொறியியலாளர்கள், தீயணைப்பு மற்றும் மீட்பு நடவடிக்கை, இயந்திர பொறியியலாளர் மற்றும் பாதுகாப்பு சேவை போன்ற பிரிவுகளில் திட்டமிடப்பட்ட உள்ளக கணக்காய்வுகள் 100% மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| உபாய ரீதியிலான அபிவிருத்தி கருத்திட்டங்கள் ப.ச.வி. | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|---|---|
| **1. விமான நிலைய ஓடுப்பாதையை மேல் விரிப்பிடல்** | | | | ✈ | | | |
| **2. பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது கட்டம் இரண்டாவது படிநிலை** | | | | | | ✈ | |
| **3. முனையம் 1 இனை விரிவாக்கல்** | | | | | | | |
| i. இலத்திரனியல் தொகுதி | | | ✈ | | | | |
| ii. பரிசோதனை செய்யும் பிரதேசங்கள் | | | ✈ | | | | |
| iii. உட்செல்லல் மற்றும் வெளியேறல் நடைபாதை மற்றும் வாகன தரிப்பிடம் | | | ✈ | | | | |
| iv. வீதி முறைமையின் படிவத்தை மாற்றம் செய்தல் | | | | ✈ | | | |
| v. சுங்கப்பிணையத்திலுள்ள பண்டகசாலை | | | | ✈ | | | |
| vi. பரிசோதனை செய்யும் பிரதேசங்கள் | | | | ✈ | | | |
| **4. சிக்கன முறைமையிலான பயணிகளின் முனையங்கள்** | | | | | ✈ | | |
| **5. விமான நிலைய ஹோட்டல்** | | | | | | | |
| i. 18 ஆவது மைல் | | | | | | | ✈ |
| ii. வெளியேறல் | | | | | | | ✈ |

| உபாய ரீதியிலான அபிவிருத்தி கருத்திட்டங்கள் மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|---|---|
| **1. ம.இரா.ச.வி விமானங்களை பழுதுபார்த்தல் மற்றும் பேணல்** | | | | | | | |
| i. ஏற்றிடம் | | | ✈ | | | | |
| ii. நிறுத்திடம் | | | ✈ | | | | |
| **2. விமான தளத்தின் தரத்தினை உயர்த்துதல்** | | | | | | | |
| i. உட்பிரவேச வழிகளின் அபிவிருத்தி | | | | | ✈ | | |
| ii. விமானச் சரக்குகள், ஏற்றிடம் | | | | | ✈ | | |
| iii. ILS பொருத்தல் | | | | | ✈ | | |
| iv. Cat 1 உட்பிரவேசத்தில் ஒளியூட்டல் | | | | | ✈ | | |
| **3. மத்தலை ஓய்வு வசதிகள்** | | | | | | | |
| i. ஹோட்டல் | | | | | | | ✈ |
| ii. கொல்ப் விளையாட்டு மைதானங்கள் மற்றும் அதனைச் சார்ந்த வசதிகள் | | | | | | | ✈ |
| iii. கடை தொகுதிகள் | | | | | | | ✈ |

## பெற்றுக்கொண்ட விருதுகளும் கௌரவித்தல்களும்

## ICASL வருடாந்த அறிக்கை விருதுகள் 2014

எல்லா தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் ஒரே தொகுதிக்கு போட்டியிட்டதுடன், இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவனத்தால் நடாத்தப்படும் வருடாந்த அறிக்கை விருது வைபவத்தில் சேவை பிரிவின் கீழ் உலோக பதக்கத்தை நாம் பெற்றுக்கொண்டோம். ஆகையால் எமது பிரதான வியாபார வெளியீடின் மூலம் அறிக்கையிடலின் தரத்தை உயர்த்துவதற்காக நாம் மேற்கொண்ட முயற்சி கவனத்தில் கொள்ளப்பட்டது.

## NBEA - 2014

தேசிய வர்த்தக சபையால் ஒழுங்கமைக்கப்பட்ட தேசிய வர்த்தக சிறப்பு விருது விழாவில் (NBEA) அரச சேவை துறையில் திறமை விருதால் எம்மை கௌரவிக்கப்பட்டது. இந்த மிக விசேடமான விருது போட்டியில் நிறுவனமொன்றில் முழுமொத்த வியாபார திறமையை மதிப்பிடப்படும்.



1 வி.நி.மற்றும் வி.சே.கம்.இன் உப தலைவர் மற்றும் சிரேஷ்ட கணக்காளர் NBEA உலோக பதக்கத்தை பெற்றுக்கொள்ளுதல், தலைவர் (நிதி)

2 வி.நி.மற்றும் வி.சே.கம் தலைவரின் தலைமைத்துவத்தில் வி.நி.மற்றும் வி.சே.கம் குழு பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கைக்காக உலோக பதக்கம் பெற்றுக்கொள்ளுதல்



## சுற்றுலாப் பயணிகளின் வருகை - வசிக்கின்ற நாடுகளின் பிரகாரம் 2007 தொடக்கம் 2014

| வதிவிட நாடு | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|---|---|
| வட அமெரிக்கா | **28,355** | **24,311** | **24,948** | **40,216** | **49,057** | **59,236** | **65,616** | **72,653** |
| கனடா | 11,869 | 10,258 | 10,707 | 21,123 | 24,671 | 29,329 | 30,926 | 33,282 |
| ஐ.அ.கு | 16,486 | 14,053 | 14,241 | 19,093 | 24,386 | 29,907 | 34,690 | 39,371 |
| லத்தின் அமெரிக்கா | | | | | | | | |
| மற்றும் கரீபியன் தீவுகள் | **3,962** | **3,739** | **617** | **620** | **1,036** | **1,626** | **3,166** | **4,124** |
| மேற்கு ஐரோப்பா | **194,448** | **167,187** | **170,123** | **256,861** | **315,210** | **373,063** | **421,037** | **479,007** |
| ஓஸ்ட்ரியா | 3,580 | 2,651 | 2,409 | 3,925 | 6,262 | 7,991 | 11,300 | 12,664 |
| பெல்ஜியம் | 4,669 | 2,378 | 2,617 | 5,398 | 10,122 | 11,323 | 9,138 | 9,915 |
| டென்மார்க் | 1,796 | 1,320 | 1,362 | 4,393 | 6,582 | 8,323 | 9,845 | 11,239 |
| பின்லாந்து | 497 | 468 | 738 | 1,950 | 3,649 | 4,840 | 2,471 | 2,903 |
| பிரான்ஸ் | 8,091 | 10,594 | 15,886 | 31,285 | 48,695 | 56,863 | 64,388 | 78,883 |
| ஜேர்மனி | 35,042 | 30,625 | 29,654 | 45,727 | 55,882 | 71,642 | 85,470 | 102,977 |
| இத்தாலி | 11,451 | 9,126 | 7,514 | 11,423 | 13,527 | 15,871 | 17,982 | 21,116 |
| நெதர்லாந்து | 17,526 | 13,030 | 11,291 | 17,861 | 23,966 | 26,754 | 22,281 | 24,196 |
| நோர்வே | 2,304 | 1,613 | 1,666 | 3,955 | 4,977 | 7,703 | 8,573 | 9,237 |
| ஸ்பெயின் | 2,484 | 2,282 | 2,387 | 4,461 | 5,886 | 8,319 | 8,183 | 11,914 |
| சுவீடன் | 4,851 | 3,711 | 3,560 | 7,096 | 10,937 | 13,775 | 12,597 | 14,259 |
| சுவிட்சர்லாந்து | 4,917 | 5,326 | 6,331 | 9,427 | 14,110 | 20,054 | 19,141 | 20,097 |
| ஐக்கிய இராச்சியம் | 94,060 | 81,331 | 81,594 | 105,496 | 106,082 | 114,218 | 137,416 | 144,168 |
| ஏனைய | 3,180 | 2,732 | 3,114 | 4,464 | 4,533 | 5,387 | 12,252 | 15,439 |
| கிழக்கு ஐரோப்பா | **25,573** | **29,440** | **26,310** | **35,517** | **49,249** | **72,401** | **125,695** | **154,153** |
| ரஷ்யா | 13,621 | 15,797 | 11,834 | 13,278 | 21,385 | 28,402 | 51,235 | 69,718 |
| உக்ரேன் | 524 | 952 | 2,577 | 5,703 | 9,967 | 22,348 | 38,607 | 29,882 |
| செகொஸ்லோவெகியா குடியரசு | 1,880 | 2,555 | 2,814 | 4,204 | 5,548 | 5,877 | 8,881 | 11,736 |
| போலாந்து | 3,761 | 4,960 | 5,138 | 6,613 | 5,817 | 5,806 | 9,688 | 13,370 |
| ஏனைய | 5,787 | 5,176 | 3,947 | 5,719 | 6,532 | 9,968 | 17,284 | 29,447 |
| மத்திய கிழக்கு | **13,554** | **16,776** | **23,741** | **37,540** | **57,501** | **56,169** | **80,509** | **88,991** |
| சவுதி அரேபியா | 3,861 | 3,456 | 6,685 | 9,301 | 15,081 | 19,423 | 23,753 | 30,875 |
| ஐ. அராபி எமிர் | 814 | 2,469 | 5,974 | 9,825 | 17,664 | 11,083 | 8,471 | 9,895 |
| இஸ்ரேல் | 2,648 | 2,596 | 1,901 | 3,919 | 6,164 | 7,212 | 8,545 | 8,058 |
| குவேட் | 831 | 1,011 | 1,123 | 2,303 | 2,812 | 3,245 | 7,427 | 8,170 |
| ஓமான் | 515 | 499 | 727 | 1,359 | 2,177 | 2,602 | 7,634 | 12,756 |
| ஏனைய | 4,885 | 6,745 | 7,331 | 10,833 | 13,603 | 12,604 | 24,679 | 19,237 |
| ஆபிரிக்கா | **2,712** | **2,141** | **1,549** | **2,308** | **3,614** | **5,045** | **8,081** | **12,163** |
| தென் ஆபிரிக்கா | 933 | 756 | 779 | 1,415 | 1,962 | 3,048 | 3,366 | 4,155 |
| ஏனைய | 1,779 | 1,385 | 770 | 893 | 1,652 | 1,997 | 4,715 | 8,008 |
| கிழக்கு ஆசியா | **52,854** | **44,944** | **48,329** | **68,430** | **96,194** | **132,730** | **183,097** | **280,511** |
| சீனா குடியரசு | 11,949 | 9,812 | 8,550 | 10,430 | 16,308 | 27,627 | 54,288 ** | 128,166 ** |
| ஹொங்கொங், சீனா | 186 | 537 | 1,330 | 1,230 | 2,199 | 1,535 | | |
| இந்தோனிசியா | 1,404 | 1,157 | 1,040 | 1,343 | 2,049 | 2,890 | 17,540 | 29,558 |
| ஜப்பான் | 14,274 | 10,075 | 10,926 | 14,352 | 20,586 | 26,085 | 29,923 | 39,136 |
| கொரியா(தென்) | 4,870 | 4,300 | 3,695 | 4,426 | 5,485 | 7,838 | 12,207 | 13,412 |
| மலேசியா | 6,704 | 5,188 | 6,850 | 13,367 | 16,094 | 21,776 | 19,519 | 23,178 |
| பிலிபைன்ஸ் | 2,162 | 1,693 | 1,421 | 1,391 | 2,047 | 5,687 | 15,615 | 11,160 |
| சிங்கப்பூர் | 5,688 | 5,802 | 7,808 | 11,875 | 15,953 | 17,273 | 15,546 | 15,762 |
| தாய்லாந்து | 2,467 | 3,583 | 3,208 | 3,684 | 5,880 | 7,897 | 9,608 | 9,260 |
| தாய்வான் | 2,553 | 1,907 | 2,715 | 5,277 | 7,010 | 12,703 | 3,931 | 5,193 |
| ஏனைய | 597 | 890 | 786 | 1,055 | 2,583 | 3,265 | 4,920 | 5,686 |
| தெற்காசியா | **149,626** | **128,098** | **126,205** | **175,694** | **237,647** | **247,559** | **326,556** | **370,299** |
| பங்கலாதேஷ் | 1,665 | 1,564 | 1,294 | 1,954 | 4,726 | 4,646 | 10,037 | 10,754 |
| இந்தியா | 106,067 | 85,238 | 83,634 | 126,882 | 171,374 | 176,340 | 208,795 | 242,734 |
| மாலைதீவு | 29,539 | 31,564 | 31,916 | 35,791 | 44,018 | 47,572 | 79,474 | 86,359 |
| நேபால் | 885 | 860 | 676 | 753 | 826 | 1,038 | 2,021 | 3,319 |
| பாகிஸ்தான் | 10,204 | 7,885 | 7,373 | 9,148 | 14,724 | 16,056 | 25,336 | 25,424 |
| ஏனைய | 1,266 | 987 | 1,312 | 1,166 | 1,979 | 1,907 | 893 | 1,709 |
| அவுஸ்த்ரலெஷியா | **22,924** | **21,839** | **26,068** | **37,290** | **46,467** | **57,776** | **60,836** | **65,252** |
| அவுஸ்த்ரேலியா | 20,241 | 19,536 | 23,239 | 33,456 | 41,728 | 51,614 | 54,252 | 57,940 |
| நியுசிலாந்து | 2,627 | 2,240 | 2,672 | 3,487 | 4,212 | 5,641 | 6,174 | 6,880 |
| ஏனைய | 56 | 63 | 157 | 347 | 527 | 521 | 410 | 432 |
| | | | | | | | | |
| மொத்தம் | **494,008** | **438,475** | **447,890** | **654,476** | **855,975** | **1,005,605** | **1,274,593** | **1,527,153** |

* இலங்கையில் 1 தொடக்கம் 365 நாட்கள் தங்கிய சுற்றுலாப் பயணிகள் பற்றிய பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையர்கள், பரிமாறல், பரிமாற்றம், தொழில் மற்றும் வதிவிடம் பெற வந்தவர்கள் விலக்கப்பட்டுள்ளனர்.

** 2013 ஆம் ஆண்டிலிருந்து சீனாவின் கீழ் இப் பெறுமதி சேர்க்கப்பட்டுள்ளது.

**மூலம் - இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபை**

# நிதி
# மீளாய்வு

## செயலாற்ற பகுப்பாய்வு

விமானநிலைய, விமானசேவைகள் கம்பனியினது முதன்மை நிதி சுட்டளவுக்கிணங்க 2014 ஆம் நிதி வருடத்தில் கலப்பு மதிப்பீட்டு முகப்பைக் காட்டுகின்றது.

விமானநிலைய விமானசேவைகள் கம்பனியினது 2014 ஆம் ஆண்டின் திரட்டிய வருமானம், முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது அதன் வளர்ச்சி ரூபா 1.63 பில்லியன் ஆகுவதுடன், அது சதவீதமாக 13% ஆகும். கம்பனியின் இலாபகரமான தன்மை தொடர்பாக கருதும்போது அதன் வரிக்குப் பிந்திய இலாப அதிகரிப்பில் தாக்கம் விளைவிக்கும் காரணியாக மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் சொத்துக்களின் மீதான பிற்போடப்பட்ட வரிச்செலவு 85% இனால் அதிகரித்தமையை குறிப்பிட முடியும்.

முன்னைய வருடங்களில் பதிவு செய்யப்பட்ட வரிக்குப் பின்னரான இலாபம் மேலும் அதிகரிக்கச் செய்து வரிக்குப் பின்னரான இலாபம் ரூபா 0.75 பில்லியன்களால், அதாவது, 16% இனால் கடந்த வருடத்துக்கு நிகராக அதிகரித்துக் கொள்வதற்கு கம்பனியிற்கு முடியமாக இருந்தது. எவ்வாறிருப்பினும், வட்டி, வாடகை, தேய்வு மற்றும் கடன் தீர்ப்பிற்கு முன்னைய இலாபம் ரூபா 6.79 பில்லியன்களாகும். அது கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 42% அதிகரிப்பாகும்.

2014 ஆம் ஆண்டிற்குள் விமானநிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியின் நிதி வளர்ச்சி அதிகரிப்பதற்கு காரணம், பிராந்திய ரீதியில் மற்றுமல்லாது உள்நாட்டு ரீதியில் ஏற்பட்ட திடமான பொருளாதார மீளுயர்வு. இது உல்லாச சொர்க்கபூமியாக இலங்கை உலக பிரஜைகள் மத்தியில் பிரபல்யப்படுத்தும் கூட்டு முயற்சியின் பிரதிபலன்களாகும்.

வான் பயணிகள் போக்குவரத்தின்போது முழுநேர சேவை விமானங்கள் 8% மிதமான வளர்ச்சியைக் காட்டியிருப்பதுடன், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் அசைவில் 87% ஆனளவு பங்கேற்பை வழங்குவது முழுநேர விமானசேவைகளின் மூலமாகும். மொத்த பயணிகள் அசைவுகளின் வளர்ச்சி, குறைந்த செலவிலான விமானசேவைகளில் 2% அளவிலான எல்லைக்கோட்டு சரிவு வளர்ச்சியைக் காரணமாகக் கொண்டு இலேசான எதிர்மறைவாக நிகழ்ந்தமை கடந்த வருடத்துக்குள் காணக்கூடியதாகவுள்ளது.

## புரள்வு

முன்னேற்ற மீளாய்விற்குட்படும் 2014 வருடத்துக்குள் பதிவுசெய்யப்பட்ட ஒருங்கிணைந்த புரள்வு ரூபா 13.7 பில்லியனாக இருந்ததுடன், இது முன்னைய வருடத்துக்கு நிகராக 13% ஆன வளர்ச்சியாகும். வானூர்தி மூலமல்லாத வருமானங்கள் அதிகரித்தமையே இதற்கு பிரதானமான காரணியாக குறிப்பிட முடியுமாக இருப்பதுடன், முன்னைய வருடத்திலும் பார்க்க 12% (ரூபா 1.1 பில்லியனாகும்) அதிகரிப்பாகும் வானூர்தி மூலமல்லாத வருமானங்களால் மொத்த வருமானத்திற்கு 75% பங்களிப்புச் கிடைத்துள்ளது.
.

விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனியின் திரட்டிய புரள்வில் ஐந்தாண்டு காலமாக கையேற்கப்பட்ட வளர்ச்சி பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

விமானநிலைய விமானசேவைகள் கம்பனயின் திரட்டிய புரள்வு வளர்ச்சி (ரூபா.பி)




நிறுவனத்தின் வருமானக் கட்டமைப்பு 2014




மீளாய்வுக்குட்படும் காலத்திற்குள் விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனியின் வருமான கட்டமைப்பிற்கு பாரியளவு பங்களிப்பை விமானத்தில் ஏற்றும் கடடணங்களின் மூலம் கம்பனிக்கு கிடைத்துள்ளது. இதற்குக் காரணம் முன்னைய வருடத்தில் காணப்பட்ட வருமானமான கட்டமைப்பு ரீதியிலான பங்களிப்பான 26% தொடர்ந்தும் பேணியமையே யாகும். நயப்பு வருமானம் (Concession Income) 13% ஆல் தனிச்சிறப்பு வாய்ந்த வளர்ச்சியை ஏற்படுத்தி இரண்டாவது பாரிய மூலகமாக 21% பங்களிப்பு மொத்த வருமானத்திற்கு வழங்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட வருமான புரள்வுகளாக வரி வருமானங்கள், தரையிறங்கும் கட்டண வருமானங்கள் மற்றும் பறத்தல் வருமானங்கள் முறையே 17% 16% மற்றும் 6% ஆன பங்களிப்பை வழங்குகின்ற முக்கிய வருமான மூலகங்கள் அவற்றின் வருமான அதிகரிப்பு முறையே 10%, 9%, மற்றும் 15% ஆகும்.

நாம் மேலும் வருமான அதிகரிப்பின் தாக்கம் விளைவிக்கும் அசைவுகளை பகுப்பாய்வு செய்வதாயின் தரையிறக்கும் கட்டண வருமானத்தை கணக்கெடுக்கும் அடிப்படை சுட்டளவாக எடுத்துக் கொள்ளப்படும் ஆகக்கூடிய விமானம் கிளம்பும் எடை 2013 ஆம் ஆண்டில் ெ.தொண் 3,663,010 இலிருந்து 2014 ஆம் ஆண்டில் மெ.தொண் 3,919,098 வரை 7% ஆன வளர்ச்சி, பறக்கும் தடவைகளின எண்ணிக்கை 27,529 இலிருந்து 31,600 வரை 15% ஆல் வளர்ச்சி அதிகரிக்கும் அதேவேளை எய்தியது.

எவ்வாறாயினும் பறத்தல் வருமானங்களின் வளர்ச்சி வீதம் பறத்தல் தடவைகளின் வளர்ச்சி வீதத்திற்கு சமமானதாக இல்லை. (MTOW) தொடர்பான பறத்தல் வருமானங்கள் ஆகக்கூடிய விமானம் கிளம்பும் எடை ஆரம்ப குறிப்பிட்ட மட்டத்திற்கேற்ப மாற்றம் பெறுவதனாலாகும்.

**"வெளிநாட்டு நாணயத்திலிருந்து சம்பாதித்த வருமானங்களின் தொழிற்பாட்டு வருமானத்தில் சதவீதமாக 51ூ ஆல் அதாவது ரூபா 6.9 பில்லியனாகும். (அ.டொ. 53 மி) 2014 ஆம் ஆண்டில் அ.டொ.2 மில்லியனிலும் பார்க்க (ரூ.250 மி) வெளிநாட்டு வருமானங்களைப் பெற்ற முக்கிய 5 நாடுகள் மத்தியில் இத்தாலி, ஐக்கிய அரபு எமீர் குடியரசு, இந்தியா, கட்டார் குடியரசு மற்றும் ஹொங்கொங் உள்ளடக்கப்பட்டுள்ளன."**

## வெளிநாட்டு செயற்பாடுகளில் இருந்து ஈட்டிய வருமானம்

மொத்த செயற்பாட்டு வருமானத்தில் 51% வெளிநாட்டு செயற்பாடுகள் மூலம் பெறப்பட்டவைகளாக இருப்பதுடன், அது ரூ. 6.9 பில்லியன்களாகும். (அ.டொ. 53 மில்லியன்கள்) 2014 ஆம் ஆண்டில் அ.டொ. 2 மில்லியனிலும் பார்க்க (ரூபா 250 மி.) வெளிநாட்டு வருமானங்களைப் பெற்ற முக்கிய 5 நாடுகள் மத்தியில் இத்தாலி ஐக்கிய அரபு எமீர் குடியரசு, இந்தியா, கட்டார் குடியரசு மற்றும் ஹொங்கொங் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2014 ஆம் ஆண்டு புரள்வில் இரட்டை பெறுமதி வளர்ச்சியை பதிவு செய்தது. அவ்வளர்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ள 1 அமெரிக்கா டொலர் மில்லியனிலும் பார்க்க உழைத்த நாடுகளாக கட்டார் குடியரசு (43%)", ஐக்கிய அரபு எமீர் குடியரசு (11%)", ஹொங்கொங் (43%)", மலயாசியா (36%)", சவுதி அரேபியா (63%) மற்றும் ஐக்கிய இராச்சியம் (47%) குறிப்பிட முடியும். இதற்கு அடிப்படையாக அமைந்தது எமது நீண்டகால வாடிக்கையாளர்களான விமானங்களில் ஆகக்கூடிய விமானம் கிளம்பும் எடை அதிகரித்தல். விமானங்கள் வரும் தடவைகளின் எண்ணிக்கை அதிகரித்ததுடன், உயர் பறத்தல் வருமானங்களின் அதிகரிப்பாகும்.

2013 மற்றும் 2014 வருடத்துக்காக உயர் சார்பிலா வருமானங்கள் கிடைக்கும் 20 நாடுகளிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து தொழிற்பாட்டு வருமானத்தில் பிரதிநிப்படுத்துகின்ற சதவீதமாக சார்பிலா வருமான அதிகரிப்பு மற்றும் சார்பிலா வருமான கிடைக்கும் நாடுகளின் தரப்படுத்துதல் பின்வரும் அட்டவணையில் தெளிவாக காட்டப்பட்டுள்ளன.

**வெளிநாட்டு நிதிச் செயற்பாடுகள் மூலமான வருமான கிடைப்பனவுகள்**

| நாடு | 2014 | | 2013 | | வருமானம் | வருமானம் | 2014 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் அமெ.டொலர் | தொழிற்பாட்டு வருமானங்கள் பகுதி (%) | வருமானம் அமெ.டொலர் | தொழிற்பாட்டு வருமானங்கள் பகுதி (%) | வளர்ச்சி | வளர்ச்சி % | சார்பிலா வருமானத்தின் அடிப்படையில் | சார்பிலா வருமானத்தின் அடிப்படையில் |
| இத்தாலி | 11,931,914 | 11.31% | 11,228,609 | 11.72% | 703,305 | 6% | 1 | 1 |
| ஐ.அ.இ.(U.A.E) | 11,274,989 | 10.68% | 10,178,851 | 10.63% | 1,096,138 | 11% | 2 | 3 |
| இந்தியா | 10,574,810 | 10.02% | 10,206,471 | 10.66% | 368,339 | 4% | 3 | 2 |
| கட்டார் | 4,047,862 | 3.84% | 2,825,100 | 2.95% | 1,222,762 | 43% | 4 | 4 |
| ஹொங்கொங் | 2,441,929 | 2.31% | 1,740,484 | 1.82% | 701,445 | 40% | 5 | 6 |
| மலேசியா | 2,113,697 | 2.00% | 1,550,743 | 1.62% | 562,954 | 36% | 6 | 7 |
| சிங்கப்பூர் | 2,109,392 | 2.00% | 2,219,071 | 2.32% | (109,679) | -5% | 7 | 5 |
| சவுதி அரேபியா | 1,714,978 | 1.63% | 1,049,414 | 1.10% | 665,564 | 63% | 8 | 8 |
| ஐ. இராச்சியம் | 1,132,308 | 1.07% | 769,592 | 0.80% | 362,716 | 47% | 9 | 10 |
| தாய்லாந்து | 874,769 | 0.83% | 794,305 | 0.83% | 80,464 | 10% | 10 | 9 |
| குவைட் | 850,895 | 0.81% | 391,146 | 0.41% | 459,749 | 118% | 11 | 15 |
| ஓமான் | 821,608 | 0.78% | 725,006 | 0.76% | 96,602 | 13% | 12 | 11 |
| கொரியா | 638,513 | 0.61% | 418,480 | 0.44% | 220,033 | 53% | 13 | 13 |
| துருக்கி | 628,707 | 0.60% | 414,970 | 0.43% | 213,738 | 52% | 14 | 14 |
| இந்தோனேசியா | 552,067 | 0.52% | 499,550 | 0.52% | 52,517 | 11% | 15 | 12 |
| அவுஸ்திரேலியா | 347,710 | 0.33% | 220,973 | 0.23% | 126,737 | 57% | 16 | 17 |
| சீனா | 304,259 | 0.29% | 206,726 | 0.22% | 97,533 | 47% | 17 | 18 |
| தென் ஆப்பிரிக்கா | 186,240 | 0.18% | 182,700 | 0.19% | 3,540 | 2% | 18 | 19 |
| மாலைதீவு | 183,327 | 0.17% | 147,371 | 0.15% | 35,956 | 24% | 19 | 20 |
| முருசி குடியரசு | 159,300 | 0.15% | 125,850 | 0.13% | 33,450 | 27% | 20 | 21 |
| ஏனயவை | 460,863 | 0.44% | 760,885 | 0.79% | -292,603 | -38% | வரிசைப்படுத்தப்படாத | |
| | **53,350,137** | | **46,656,296** | | | | | |

## தொழிற்பாட்டுச் செலவுகள்

மொத்தச் செலவு 2013 ஆம் ஆண்டில் ரூபா 9.2 பில்லியன் இருந்து ரூபா 9.4 பில்லியன் வரை அதிகரித்தது. நிர்வாகச் செலவுகளில் திட முகாமைத்துவ கட்டுப்பாடுகளை கடைபிடித்ததன் காரணமாக மீளாய்வு வருடத்துக்குள் மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் வணிக வியாபாரத்தில் இரண்டாம் வருடமாக அமைந்தாலும் செலவு மற்றும் வருமானத்துக்கிடையிலான விகிதாசாரம் 69% ஆன கருதக்கூடியஅளவினாலான குறைவைக் காட்டுகின்றது. இதற்குக் காரணம் கடந்த வருடங்களில் சான்றுபடுத்தப்பட்ட உயர் செலவு விகிதாசாரங்களுக்கு எதிராகவேயாகும். இது மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் ரூபா 1.4 தேய்வை உட்கிரகித்தன் பின்னர் ஏற்பட்டதாகும். வருடத்துக்குள் பதவியணியினர் செலவுகள் ரூபா 4.7 பில்லியன் வரை 9% ஆல் அதிகரித்தது. 2013 ஆம் வருடத்தில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 4.3 பில்லியனாகும். பராமரிப்பு மற்றும் பேணுதல் செலவுகள் 1% ஆல் சிறிதளவில் சரிவடைந்தமை, வருடத்துக்குள் காணக்கூடியதாக இருந்தது.

கம்பனியின் செலவுக்கட்டமைப்பு 2014




கம்பனியின் செலவுக்கட்டமைப்பு 2013




## தேறிய நிதி வருமானம்/ செலவு

தேறிய நிதி வருமானம்/ செலவு பிரதானமாக, நீண்டகால கடன் எடுப்பனவுகள் மீதான நிதிச்செலவு மற்றும் கடன்கள் மாற்றலின் மீது நாணய பெறுமதி இலாபம்/ இழப்பு ஆகிய இரண்டு பிரதான காரணங்களால் ஏற்படுகின்றது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் ரூபா 1.2 ஆன கடன்கள் மாற்றலின்மீதான நாணய பெறுமதி, கடந்த வருடத்தில் நாணய பெறுமதி மீதான இலாபமான ரூபா 1.7 மில்லியன்கள் பரிமாற்ற இலாபத்தை ஏற்படுத்தியது.

இதற்கிடையில் வட்டி வருமானங்களில் 1% ஆல் எல்லைக் கோட்டு சரிவை காணக்கூடியதாக இருந்தது. கடன் வட்டி கொடுப்பனவுச் செலவு முன்னைய வருடத்துக்கு நிகராக 22% ஆனளவு உயர்வடைந்தது பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் கடன் வட்டி ஆவணக்கோவையில் இந்த வருடத்துக்குரிய கடன் வட்டியான ரூபா 195 மில்லியனுக்கு மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் கடன் வட்டி கொடுப்பனவுகளான ரூ. 505 மில்லியன் உட்படுத்தப்பட்டதனாலேயாகும்.

## இலாபகரமான தன்மை

மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் தொழில்வாரியான கட்டமைப்பை அறிமுகப்படுத்தும் கால கட்டத்தில் இருக்கும்போதே, விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் வரிக்கு முன் இலாபம் ரூபா 5.5 பில்லியனை பதிவு செய்தது. அது வருடத்துக்கு வருட அடிப்படையில் 16% உயர்வாகும். எவ்வாறாயினும் வரிக்கு பிந்திய இலாபமான ரூபா 3.3 பில்லியனாக 2014 ஆம் வருடத்துக்குள் பதிவு செய்தது. அது வருடத்துக்கு வருட அடிப்படையில் 8% உயர்வாகும். விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் கடந்த 4 வருடங்களுக்காக இலாபத்தின் செயலாற்றம் பின்வருமாறு மீளாய்வுக்குட்படுத்தியுள்ளது.




## நிதிப்பாய்ச்சல்

தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் செயற்பாட்டு இலாபம் முன்னைய ஆண்டில் காணப்பட்ட ரூபா 5.3 பில்லியன்களிலிருந்து மீளாய்வுக்குட்படுத்தும் வருடத்தின் ரூபா 7.4 பில்லியன் வரை உயர்வடைந்தது. மேலும் தொழிற்படும் மூலதனம் சரிவடைந்தமை காரணமாக நிதிப்பாய்ச்சல்கள் மேலும் மேம்படுத்தப்பட்டதுடன்,அதன் பலனாக ரூபா 7.5 பில்லியன் தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் காரணமாக நேரான நிதிப்பாய்ச்சல் உருவாகியது. மூலதன செலவுகளாக நிதி வெளிப்பாய்ச்சல் ஓட்டம் ரூபா 1.2 பில்லியன் ஆக இருந்ததுடன், அதில் ரூ.130 மில்லியன் மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில தொடர்பாக செலவிடப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் ரூபா 5400 மி.ஆகும் காசு மற்றும் காசு சார்ந்தவைகளின் தேறிய அதிகரிப்பு வருடத்துக்குள் ரூபா 6207 மில்லியனாகும். (அதன் தேறிய சரிவு 2013 ஆம் ஆண்டில் ரூபா 394 மில்லியனாகும்.)

இதன் தொழிற்பாடுகளை கொண்டு நடாத்துவதற்காக தொழிற்படு மூலதனத்தை நிதியிடுவதற்கு மூலதன செலவுகளின் பங்கிலாபங்கள் மற்றும் நியதிச்சட்ட கொடுப்பனவுளை மேற்கொள்வதற்குத் தேவையான வங்கி வசதிகள் விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியிடம் உள்ளது.

## மூலதன கட்டமைப்பு

வி.வி.சே.க இன் கட்டமைப்பு பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| பங்கு மூலதனம் | ரூ.மி | 20 |
| ஒதுக்கம் | ரூ.மி | 10,659 |
| கடன் | ரூ.மி | 35,920 |

மூலதன கட்டமைப்பின் வடிவமைப்பு




கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது பிடித்துவைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் **50%** ஆன திருப்திகரமான அதிகரிப்பை கம்பனி எய்தியுள்ளது. **2013** ஆண்டுடன் ஒப்பிடும்போது நீண்டகால பொறுப்புக்கள் (ஓய்வூதிய பணிக்கொடைப் பொறுப்பு, அரசிடமிருந்து கிடைத்த மூலதனச் செலவுகள், பிற்போடப்பட்ட வரி பொறுப்புகள்) **41%** ஆல் கருதக்கூடிய அதிகரிப்பு பிற்போடப்பட்ட வரி பொறுப்புக்களினால் பதிவுசெய்யப்பட்டது.

## கடன் நெம்புகோள் விகிதம்

வட்டியுடனான நீண்ட கால கடன்களைப் பெற்றுக் கொள்ளும்போது மற்றும் பங்கு மூலதனத்திற்கு நிகராக இவ் விகிதாசாரம் கணக்கிடப்படுகின்றது. வட்டியுடனான நீண்ட கால கடன்களைப் பெற்றுக் கொள்வதனுடனான பங்கு மூலதனம் கம்பனியின் நிதி தாங்கும் ஆற்றலை காட்டுவதுடன், அதன் 71% எல்லைக்கோட்டுச் சரிவு 2014 ஆம் நிதி வருடத்தில் பதிவு செய்யப்பட்டது. இது 2015 ஆம் ஆண்டில் 82% ஆக இருந்தது. இந்த விகீதாசாரம் மூலம் கம்பனியின் அதி நெம்புகோள் நிலைமைகள் இருப்பதை காணக்கூடியதாக இருப்பினும் இந்த கடன்தொகைகள் இலங்கை அரசாங்கத்தினூடாக பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்னை அபிவிருத்தி செய்வதற்காக தங்கபவுன் உத்தரவாதத்தின் கீழ் பெற்றுக்கொண்டுள்ளது.

## பங்குதாரர்களின் மூலதனம்

கம்பனி பங்குதாரர்களின் மூலதனம் ரூ.மில்.




## பங்குதாரர்களின் வருமான உச்சக்கட்டம்

2014 ஆம் ஆண்டுக்கான பெறுமதிச்சேர்க்கை

2014 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த 2014 நிதி வருடத்தின் கம்பனி இயலளவு மொத்தப் பெறுமதி ரூபா 14 பில்லியனாகும். அது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது 21% அதிகரிப்பாகும். இதற்காக நிர்வாகச் செலவுகள் மற்றும் விற்பனைச் செலவுகள் 2013 ஆம் வருடத்தில் ரூபா 3131 மில்லியன் இலிருந்து 2014 ஆம் வருடத்தில் ரூபா 2068 மில்லியன் வரை சரிவு காரணமாக அமைந்தது.

இதற்கு காரணமாக அமைந்தவையாக தொழிற்பாட்டு செலவின் கீழ் பகுப்பாய்வு செய்துள்ளன. மொத்த பெறுமதியினை உருவாக்கிய விதம், அது இலங்கை அரசு, ஊழியர் கடன்கள் மற்றும் மீளச் செலுத்துகை, பங்கு மூலதன திட்டமிடலாளர் இடையே பங்கிடும் முறையை பின்வரும் பிரகடனத்தில் காட்டப்பட்டுள்ளது. அதேபோல பெறுமானத்தேய்வு மற்றும் ஒதுக்கங்களுக்கு ஏற்றவாறு மீள முதலிடுவதற்காக பிடித்து வைக்கப்பட்ட பகுதியும் காட்டப்பட்டுள்ளது.

| | 2014 | | 2013 | |
|---|---|---|---|---|
| | ரூபா. 000 | | ரூபா. 000 | |
| வருமானம் | 13,612,559 | | 12,219,411 | |
| ஏனைய வருமானம் | 129,642 | | (109,728) | |
| நிதி வருமானம் | 1,875,516 | | 2,428,407 | |
| ஆயுள் எண்ணிக்கை உத்தேசிக்கப்பட்ட மாற்றங்களின் மீதான இயலளவு இலாபம் | 451,965 | | 170,790 | |
| | 16,069,682 | | 14,708,880 | |
| நிர்வாக தாபன மற்றும் விற்பனைச் செலவுகள் | (2,068,009) | | (3,131,819) | |
| **சேர்க்கப்பட்ட பெறுமதி** | 14,001,673 | | 11,577,061 | |
| **சேர்க்கப்பட்ட பெறுமதி பகிர்வு** | | % | | % |
| சேவையாளர்களுக்கு - பணிக்கொடை மற்றும் நன்மைகள் | 4,728,971 | 34% | 4,341,092 | 38% |
| அரசாங்கத்திற்கு - வரி | 2,210,865 | 16% | 1,192,121 | 10% |
| பங்குதாரர்களுக்கு - பங்கிலாபங்கள் | 500,000 | 3% | 500,000 | 4% |
| கடன் மூலதன திட்டமிட்டாளருக்கு - மீளச் செலுத்துதல் | 700,145 | 5% | 573,574 | 5% |
| பிடித்துவைக்கப்பட்ட வியாபாரம் - பெறுமானத் தேய்வுகள் | 2,624,562 | 19% | 1,745,935 | 15% |
| பிடித்துவைக்கப்பட்ட வியாபாரம் - ஒதுக்கங்கள் | 3,237,130 | 23% | 3,224,340 | 28% |
| | 14,001,673 | 100% | 11,577,061 | 100% |

**பெறுமதிச்சேர்க்கப்பட்ட பகிர்வு 2014**




- ஊழியர்களுக்கான பணிக்கொடை மற்றும் நன்மைகள்
- கடன் வழங்கியோர் மூலதனம் மீள்செலுத்துகை
- அரசாங்கத்திற்குரிய வரிகள்
- பிடித்துவைக்கப்பட்ட வியாபார தேய்வுகள்
- பங்குதாரர்களுக்கான பங்கிலாபங்கள்
- பிடித்து வைக்கப்பட்ட வியாபார ஒதுக்கங்கள்

**பெறுமதிச்சேர்க்கப்பட்ட பகிர்வு 2013**




- ஊழியர்களுக்கான பணிக் கொடை மற்றும் நன்மைகள்
- கடன் வழங்கியோர் மூலதனம் மீள்செலுத்துகை
- அரசாங்கத்திற்குரிய வரிகள்
- பிடித்துவைக்கப்பட்ட வியாபார தேய்வுகள்
- பங்குதாரர்களுக்கான பங்கிலாபங்கள்
- பிடித்து வைக்கப்பட்ட வியாபார ஒதுக்கங்கள்

# மனித வளங்கள் முகாமைத்துவம்

வி.வி.சே கம்பெனி, மனித வளங்களை நிறுவனத்தின் இலாபம் மேம்படுத்துவதற்கும் பெறுமதிகளை சேர்கின்றதுமான காரணியாகவே நோக்கப்படுகிறது. அதன் பிரகாரம் வி.வி.க. மனித வள உபாய முறைகள் நிலைபேறுடன் கூடிய வர்த்தக மேம்பாடுகள் மற்றும் நோக்கங்கள் என்பன மேம்படுத்துவதற்காக ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது நிறுவனத்தின் மாற்றங்களை ஏற்படுத்த முடியுமான வகையில் முழுமொத்த உபாய திட்டம் மனித வளங்களை கொண்டு நிறை வேற்றிக் கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

**ஆட்சேர்ப்பும் தகைமையுள்ளவர்களை தெரிவு செய்தலும்**

எமது ஆட்சேர்ப்புத் திட்டங்களில் எதிர்கால விண்ணப்பத்தாரிகளின் திறமைகள் ஆற்றல்கள் என்பன மதிநுட்பத்துடன் ஆராயப்படுவதுடன், எமது நிறுவனம் எதிர்காலத்தில் எதிர் நோக்கும் சவால்களில் அவர்கள் வெற்றிபெறுவார்களா எனவும் அவதானிக்கப்படும். எமது முழுமொத்த ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விண்ணப்பத் தாரிகளின் வாசிப்பு, எழுதுதல், உடல் ஆரோக்கியம், பல்வேறு துறைகளின் திறன்கள் மற்றும் நடைமுறை ஆற்றல்கள் போன்ற பல்வேறு துறைகளின் மீது கவனம் செலுத்தப்படும். இந்த ஆண்டில் கட்டுநாயக்கா மற்றும் மத்தளை விமான நிலையங்களின் வெற்றிடங்களை நிரப்பும் போது, 214 விண்ணப்பத்தாரிகளை பின்வரும் துறைகளின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டது.

| தராதரம் | ஆட் சேர்ப்பு | 2014.12.31 திகதியில் முழு மொத்த பதவியினர் |
|---|---|---|
| நிறைவேற்றுத்தரம் | 02 | 247 |
| வேலை பரிசோதகர்கள் தொழில்நுட்ப அலுவலர்கள் | 06 | 322 |
| எழுதுனர் மற்றும் அதனோடிணைந்த தரங்கள் | 17 | 711 |
| பயிற்சி மற்றம் பகுதி நேர பயிற்சி அலுவலகர்கள் | 103 | 2,014 |
| பயிற்சி பெறாத மற்றும் கீழ் உள்ள தரங்களின் ஊழியர்கள் | 86 | 638 |
| மொத்தம் | **214** | **3,932** |

**பதவி உயர்வுகள்**

இவ்வருடம் 311 பேர் பதவி உயர்வு பெற்றதுடன், இவ்வாறான பதவி உயர்வுகளின் ஊடாக நிறுவனத்தின் உற்பத்தி திறன் மற்றும் செயல் நிறைவேற்றுகை என்பன மேம்படுத்துவதனை எதிர்பார்க்கப்படுகிறது.

**பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தி**

மனித வளங்களை பயிற்றுவிப்பதில் ஒரு பிரதான காரணியாவது, ஊழியர்களை பயிற்றுவித்தலும் அபிவிருத்தி செய்தலுமாகும்.

எல்லா பயிற்சிகளிலும் பங்குபற்றியவர்களின் பதில் நடவடிக்கை மற்றும் மதிப்பீட்டு செயற்பாடுகளின் ஊடாக பயிற்றுவித்தலின் உற்பத்திதிறன் மதிப்பிடப்படும். நிறுவனத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆகிய இரண்டு முறைகளிலும் பயிற்றுவிக்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

வி.வி.சே கம். பயிற்சிபெறும் தேவையை பலப்படுத்துகின்றது. அறிவை மேம்படுத்திக்கொள்வதற்கும், தனிப்பட்ட வளர்ச்சியின் கருதியும், தொழிலுக்கு ஏற்புடையதான கல்விச் செலவுகள் மற்றும் தொழில்சார் நிறுவனங்களுக்கான வருடாந்த உறுப்பினர் கட்டணங்கள் எனன்பன மீளளிக்கப்படுகின்றன. அறிவை மேம்படுத்திக்கொள்ளும் செயற்பாட்டினை விருத்தி செய்து கொள்வதற்காக வெளிநாட்டு பயிற்சி பெற்ற எல்லா ஊழியர்களும் இலத்திரனியல் ஊடாக விரிவான “e-libraryportal”அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

2014 ஆம் ஆண்டு எமது நிறுவனத்தின் நிதியை செலவழித்து 1836 ஊழியர்களுக்கு உள்நாட்டு பயிற்சியும், மேலும் 106 ஊழியர்களுக்கு வெளிநாட்டு பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

எமது முழுமொத்த பயிற்றுவிக்கும் கலண்டர் மிக விரிவான பரப்பெல்லையை கொண்டுள்ளதுடன், பயிற்றுவிப்புகள் தொழில்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தாது ஊழியர்களின் மென் ஆற்றல்களை விருத்தி செய்து கொள்வதற்கும் ஆதாரமாக விளங்குகின்றது. இவ்வாறான பயிற்சிகளை பெற்ற ஊழியர்கள் நிறுவனத்திற்கு வளங்களாவதுடன், நிறுவனத்தின் முன்னேற்றம் கருதி சிறப்பான பங்களிப்பையும் வழங்குகின்றார்கள்.

| | பயிற்றுவிக்கும் மணித்தியாலங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | **2014** | **2013** |
| வெளிநாட்டு பயிற்சி | 7,800 | 9,408 |
| உள்நாட்டு பயிற்சி (உள்ளே மற்றும் வெளியே) | 22,395 | 26,898 |

## சிவில் விமான பயிற்சி நிறுவனம் CATC

இந்த ஆண்டில் நாம் பயிற்சி மற்றும் அபிவிருத்தி துறையில் பெற்றுக்கொண்ட வெற்றிகளில் மிகவும் சிறப்பான விடயம் யாதெனில் சர்வதேச சிவில் விமான சேவை நிறுவனத்தின் "ட்ரேன்எயார் ப்லஸ்" ("TRAINAIR PLUS") நிகழ்ச்சியில் பூரண அங்கத்துவ உரிமையை யூன் மாதம் இரண்டாம் திகதி பெற்றுக்கொள்ளுதலாகும்.

இது எமது பயிற்சி நிறுவனம் வெற்றிகரமாக அபிவிருத்திச் செய்த "TRAINAIR PLUS' உயர் தரத்தின் பரிசோதனை மற்றும் அளவிடல் தொழில்நுட்ப முறைமையில் (ATSEP) பலனாகும். இவற்றுக்கிடையில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி பெகேஜின் இரண்டாவது படிநிலை கருத்திட்டத்தின் (STRAIS) (வெளியீட்டு நிபுணத்துவம்) அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அது 2015 ஆம் ஆண்டின் ஆரம்ப காலகட்டத்தில் முடிவுறுத்துவதற்குள்ளது. அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி பெகேஜில் (STP) எண்ணிக்கை செயல் நிறை வேற்றுகையை காண்பிப்பதுடன், வர்த்தக பயிற்றுவிப்புகளில் போட்டியுடன் கூடிய நலன்கள் கிடைக்கப்பெறுகின்றது.

2014 ஆம் ஆண்டு CATC 61980 ஆன பயிற்றுவிப்பு மணித்தியாலங்கள் பூர்த்தி செய்துள்ளதுடன், இதில் 82% வீதம் எமது ஊழியர்களின் பயிற்றுவிப்புகளாவதுடன், மீதி வீதம் வர்த்தக பயிற்றுவிப்புகளாகும். எமது 498 ஊழியர்களின் பொருட்டு தயாரிக்கப்பட்ட 21 குறுகிய கால பாடநெறிகள் இதற்குள் அடங்குவதுடன், அவர்களின் மென் ஆற்றல்களை விருத்தி செய்தல் அதன் குறிக்கோளாகும்.

இந்த ஆண்டில் CATS வர்த்தக பாடநெறிகள் நடாத்தியதன் மூலம் மொத்தமாக 03 மில்லியன் வருமானம் உழைக்கப்பட்டதுடன், இதில் 69% வீதம் வெளிநாட்டு மாணவர்கள் பயிற்சிபெற்றதன் மூலம் கிடைக்கப்பெற்ற பணமாக அமைதல் முக்கியமான விடயமாகும்.

2014 ஆம் ஆண்டில் எமது பயிற்சி நிறுவனத்தில் பயிற்றுவிப்பு புறழ்வு 955 பயிற்றுவிப்பாளர்கள் ஆகும். வெளிநாட்டு பயிற்சிபெறுநர்கள் 26 ம், வர்த்தக பயிற்சிபெறுநர்கள் 15 ம் இவர்களுள் இருந்தனர்.

இவ்வாண்டில் எமது பயிற்சி நிறுவனத்தால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

| பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | மணித்தியாலங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மென் ஆற்றல் அபிவிருத்தி | 2,196 |
| புதிய ஆட்சேர்ப்புக்களுக்கான பயிற்சி | 25,392 |
| தொழில்சார் அபிவிருத்தி | 11,220 |
| ஆலோசனைப் பயிற்சி | 4,218 |
| தொகுப்பு பயிற்சி | 7,614 |
| வெளியக விண்ணப்பத் தாரிகளின் பயிற்சி | 11,340 |
| மொத்தம் | **61,980** |

### ஆலோசனை சேவை

நிறுவனத்தின் முழுமொத்த உற்பத்திதிறனை மேம்படுத்தும் குறிக்கோளுடன், 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஆலோசனைப்பிரிவு இன்று வரை ஆலோசகர்களின் வழிநடாத்தலின் கீழ் மிக வெற்றிகரமாக பேணிச் செல்லப்படுகிறது. இதன் போது உணர்வுகளின் நிலைப்பாடு, முரண்பாடுகளை தீர்த்தல், அழுத்த முகாமைத்துவம், மாற்று முகாமைத்துவம், என்பனவற்றுக்கு விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. இதன் மேலும் ஒரு பிரிவு யாதெனில் தொழில் செயல் நிறைவேற்றுகைக்கு ஏதுவாக அமையும் காரணத்திற்காக தொழில்சார் ஆலோசனை சேவை வழங்குதலாகும். சிறந்த செயல் நிறைவேற்றுகையற்ற ஊழியர்களுக்கு இரண்டு வகையில் ஆலோசனை சேவை வழங்கப்படுகிறது. அதாவது ஊழியர்களின் சுய விருப்பத்தின் பேரில் மேற்கொள்ளும் ஆலோசனை சேவை மற்றும் அவர்களின் மேற்பார்வையாளர்கள் ஊடாக மேற்கொள்ளும் ஆலோசனை சேவை என்ற வகையிலாகும்.

### சேவை நிலைய சூழல்

எல்லா ஊழியர்களும் அவர்களின் ஆகக்கூடிய கொள்ளளவுடன் வேலை செய்வதற்கும், தமது பங்களிப்பை வழங்குவதற்கும் தொழிலாற்றும் சூழல் உதவுமென்பது எமது நம்பிக்கையாகும். அவர்களின் பணிகளை நிறைவேற்றுவதற்கு புலனாகாத மற்றும்






புலனாகின்ற சொத்துக்கள் வழங்குதல் என்பது இதன் கருத்தாகும். இந்த பணியை எய்துக்கொள்வதற்காக எமது நிறுவனம் மிகவும் மனம்கவரும் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வசதிகளுடன் கூடிய பெகேஜ்களை நடைமுறைப்படுத்துகின்றது.

சுகாதார காப்புறுதி வசதிகள், மரணாதார திட்டங்கள், பூரண விபத்து காப்புறுதி, ஊழியர்களின் போக்குவரத்து வசதிகள் மற்றும் சீருடைகள் இவற்றுக்கள் அடங்கும். ஊழியர்களின் கருத்துகள் மற்றும் பிரேரணைகள் என்பன பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் எமது நிறுவனம் "விவுர்த்த தொர" கொள்கை பின்பற்றுகின்றது. ஒரு நிறுவனத்தின் முன்னேற்றம் நிறுவனம் அனுமதிக்கின்ற முன்னேற்ற முறைகளில் தங்கியுள்ளது. ஊழியர்களின் விளையாட்டு திறன்களை விருத்தி செய்வதற்கும் நலன்புரி திட்டங்களுக்கும் விளையாட்டு மற்றும் நலன்புரி சங்கம் வாய்ப்புகள் வழங்குகின்றது. வருடாந்த ஒன்றுகூடல், பௌத்த, கிறிஸ்தவ, வருடாந்த யாத்திரைகள், புத்தாண்டை கொண்டாடுதல் மற்றும் நத்தார் கொண்டாடுதல் எமது முக்கியமான வருடாந்த சமூக நடவடிக்கைகளின் பலவாகும். குழு வேலைகள் மற்றும் நடவடிக்கைகளின் பொருட்டு முகாமைத்துவம் எப்பொழுதும் வாய்ப்புகள் வழங்குவதுடன், பங்குதாரர்களுடனும் ஏனைய பிரிவுகளுடனும் ஒத்துழைப்புடன் பணியாற்றுவதன் மூலம் எமது நிறுவனத்தில் கழிக்கும் நேரம் உயர், பயனுள்ள அனுபவமாக அமைகின்றது.

## செயல் நிறைவேற்றுகை முகாமைத்துவம்

கடந்த இரண்டு ஆண்டுகளாக புதிய செயல் நிறைவேற்றுகை முகாமைத்துவ முறைமையினை பரீட்சார்த்த கருத்திட்டமாகவே ஆரம்பிக்கப்பட்டது. பிரதான கருத்திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட தடைகள் மற்றும் முட்டுக்கட்டைகள் என்பவற்றை தீர்த்துக்கொண்டு இந்த திட்டத்தை 2015 ஆம் ஆண்டு ஆரம்பத்துடன் அமுல்படுத்துவதற்குள்ளது.
இந்த முறை பல படிநிலைகளின் கீழ் முறையாக அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், இதில் அதிகமான ஊழியர்கள் உள்ளடங்குவதுடன், ஆரம்ப படிநிலையில் சிரேஷ்ட முகாமையாளர்கள் உள்ளடங்குவார்கள்.

## செயலாற்றுகை மதிப்பீடு

எல்லா ஊழியர்களையும் மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்காக "மேல் கீழ் அணுகுமுறை" "top down approach " நடைமுறையினை தற்காலத்தில் பின்பற்றப்படுகிறது.

புதிய முறையின் நடைமுறைப்படி ஊழியர்களின் இலக்குகள் நிறுவனத்தின் பிரதான குறிக்கோள்களுடன் அண்மிப்பதுடன், நேரடியாகவே தொடர்புபடுகின்றது. இந்த திட்டத்தின் ஊடாக ஊழியர்கள் அவர்களின் தற்கால சவால்களை வெற்றிக்கொள்ளும் பொருட்டு அவர்களின் தொழிற்பாட்டு இலக்குகள்மற்றும் வரவேற்பு நிறுவனத்தின் செயல் நிறை வேற்று கையுடன் மற்றும் அபிவிருத்தி குறிக்கோள்கள் என்பன வரைவிலக்கணம் செய்யப்படுவதுடன், தற்கால தொழில் மற்றும் அண்மித்த பதவி உயர்வுகளில் பொறுப்புகளை வகிப்பதற்கு திறனை அண்மித்துக்கொள்கின்றனர். இதன் பிரகாரம் திட்டமிடலுக்கான பலமான மேடை கட்டியெழுப்பப்படுகிறது.

## எதிர்கால பயணம்

எதிர் வரும் ஆண்டுகளில் நாம் பல சவால்களை வெற்றிக் கொள்ள வேண்டியுள்ளது. தற்போதுள்ள சம்பள முரண்பாடுகளை அகற்றுவதற்காக எல்லா அம்சங்களிலுமான ஊழியர்களின் பொறுப்புகள் பிரதிபலிக்கின்ற வகையில் சம்பள மிளமைப்பு தேவையாகவுள்ளது. எமது வர்த்தக நடவடிக்கைகள் பலவற்றுக்குள் புதிய வர்த்தக நடவடிக்கைகளை உள்ளடக்கும் போக்கு உள்ளதுடன், விசேடமாக தரை தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் உள்ளக விமான நிலையங்களை அபிவிருத்தி செய்தல் என்பன எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு தேவையான திறன்களை வழங்குவதற்கு உரிய துறைகளில் ஊழியர்களை பயிற்றுவிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. விமானப் பயணிகளுக்கும் ஏனைய எல்லா வாடிக்கையாளர்களுக்கும் உயர் தரத்திலான சேவை வழங்குவதற்கும் புதிய அனுபவங்களை வழங்குவதற்கும் எல்லா அலுவலர்களையும் தயார்படுத்தல் மற்றும் ஒருமுகப்படுத்தல் மிக முக்கியமாகும் .

3



1 இந்தியாவின் ஹயித்ராபாத் நகரத்தில் நடைபெற்ற உறுப்பினர் உரிமை வழங்கும் வைபவத்தில் எமது சிவில் விமான சேவை பயிற்சி நிறுவனத்தின் தலைவரால் "TRAINAIR PLUS" பூரண அங்கத்துவத்தினை அடையாளப்படுத்தும் பெயர்ப்பலகை சர்வதேச சிவில் விமான சேவை நிறுவனத்தின் "TRAINAIR PLUS" நிகழ்ச்சி முகாமையாளர் திரு தீகோ மார்னெஸ் அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளுதல்.

2 2014 ஆம் ஆண்டில் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பெனியில் பௌத்த சங்கம் ஒழுங்கமைத்த "வெசக் பக்தி கீதங்கள்"

3 2014 ஆம் ஆண்டு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பெனியால் கிறிஸ்தவ சங்கம் ஒழுங்கமைத்த "நத்தார் கரோல் கீதங்கள்"






# 4 மில்லியன்கள் பயணிகள்

ஒவ்வொரு வருடமும் மறக்க முடியாத பல நினைவுகளை சுமந்த வண்ணமே மீண்டும் தமது சேரிடங்களை நோக்கி செல்கின்றனர்.

## நீண்டகால நிலைப்பாட்டு

# அறிக்கை...



# ...ஈர்ப்பு மையத்தில்






Plastic
Polythene
Empty Pet Bottles
Waste Papers
Cardboard
Glass
Aluminium Cans
PLASTIC
PAPER
Organic
Degradable
GLASS
METAL






CLEAN AND EMPTY
PET BOTTLES
BIN
3
BIN
3

# நீண்டகால நிலைப்பாட்டு அறிக்கை

கடந்த பல வருடங்களுக்குள் "நிறுவனத்தின் நீண்டகால நிலைப்பாடு" என்ற எண்ணக்கரு கருதக்கூடிய நவீன கூட்டாண்மை வளர்ச்சி தளத்தகை வெளிப்பாட்டில் முன்னணியில் உள்ளது. இந்த இயங்குவிசையில் பிரதிபலனாக ஊழியர்கள் மற்றும் அனைத்து தரப்பினர்களுக்கு நீண்டகால நிலைப்பாட்டை மேம்படுத்தி இறுதியாக வழங்குவதற்காக சிறப்பான நிலைமைக்காக சிறந்த தீர்கை நாடி நிரந்தர கண்டறிவில் ஈடுபட்டுள்ளது.

விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனியின் நிலைப்பாட்டு கருத்துரை ''பசுமைக் குடில் கொள்கையிலிருந்து'' புறம்பாக செல்கின்றது. சூழலிலும் தாபனத்திலும் நிரந்தர தரப்பினராக இனங்கண்டுள்ளது. ஆற்றல் மிக்க பெறுமதியை மிகவும் பரந்த நிறுவனத்தின் தழுவல் மூலமே ஏற்படுத்த முடியுமென்பது நம்பிக்கையாகும். தாபனத்துக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் சமுக மற்றும் கலாச்சார பிரிவுகளில் முக்கியத்துவம் எமது அணுகுமுறையினூடாக கண்டறியப்படும். எமது தொழிற்பாடுகளில் கருதக்கூடிய தாக்கத்தை உண்பண்ணுகின்ற பொருளாதார சுற்றாடல் தொடர்பாக அறிவோம். ஆகையால் நாம் திட்டமிடப்பட்ட மற்றும் தளத்தகை வழிகளினூடாக இந்த பிரிவுகளில் நேரான தன்மைத் தொடர்பாக ஒன்றுசேர்த்து தாபனத்தின் மற்றும் அனைத்து தரப்பினர்களும் சார்பாக ஆற்றல் மிக்க பெறுமதியை ஏற்படுத்துவதற்காக அது முன்வைக்கப்படும். எமது ஒருங்கிணைந்த சுற்றாடல் கொள்கை கோட்பாடுகள் நான்கினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.




### வெளியீட்டுக் கட்டுப்பாடு

சுற்றாடல் பாதுகாப்பிற்காக மேலும் நடவடிக்கைகளை எடுக்கப்பட்டு வ/விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி முழு ஈடுபாடு பற்றிய கடப்பாடு நிலை வலியுறுத்திக்கூறுகின்றது. இயற்கை சூழலுக்கு விடுவிக்கப்படும் அனைத்து பொருள்களும் தொடர்ந்தும் கம்பனியின் மதிப்பாய்விற்கு உற்படுத்துகின்றது. அதனூடாக வெளியீடுகளைக் குறைத்து பசுமைக் குடில்களுக்கு ஏற்படும் பாதிப்பு கட்டுப்படுத்தும். எமது சுற்றாடல் நடவடிக்கைகள் அனைத்தும் இலங்கை மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் ( CEA) அங்கீகரித்துள்ளது.

### நடைமுறையிலுள்ள வேதிமுறைச் செயற்பாட்டு கழிவுநீர் அமைப்பு (STP)

சுற்றாடலுக்கு விடுவிக்கப்படும் கழிவுப்பொருள்களின் நச்சுத்தன்மையினை கட்டுப்படுத்துவதற்காகவே நடைமுறையிலுள்ள வேதிமுறைச் செயற்பாட்டு கழிவுநீர் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டது. அது மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட மதியுரைகளுக்கு இயைவாக நடைமுறையிலுள்ள வேதிமுறைச் செயற்பாட்டு கழிவுநீர் அமைப்பிலிருந்து வெளியேறும் வேதிமுறைச் செயற்பாடுகள் அனைத்து கழிவுப்பொருள்களை விடுவிப்பதற்கு முன்னர் அதிகளவு பரிசோதனைகளுக்கு ஆளாகப்படும். நாளாந்தம் உள்ளே மேற்கொள்ளப்படும் மாதிரி பரிசோதனைகளுக்கு மேலதிகமாக அனைத்து காலாண்டிலும் தொழில்சார் தொழில்நுட்ப நிறுவனத்தினால் (ITI) பரிசோதனைகள் நடாத்தப்படும். காலவரையில் திருப்திகரமான முறையில் தொழிற்படுத்துகின்ற தொகுதியில் மீள்நோக்கு மற்றும் தொடர்ச்சியாக நடாத்தப்படும் மாதிரி பரிசோனைகளின் திருப்திநிலையில் காணப்பட்டால் மாத்திரமே அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்படும்.

### எரிஉலை மற்றும் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

தொழில்சார் கழிவுப்பொருள் முகாமைத்துவம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினது மேற்பார்வையின் கீழுள்ள விடயமாகும். வ/விமானா நிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் கழிவுப்பொருள் முகாமைத்துவ வசதிகள், மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வெளியிடப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்திற்கிணங்க மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினது ஆலோசனையின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்ட புதிய திண்ம கழிவுப் பொருள்களை அகற்றும் எரிஉலையாகும். மத்திய சுற்றாடல் அதிகாரசபையினது ஆலோசனையின் பிரகாரம் அந்த அனுமதிப்பத்திரத்தினை வெளியிடுவதற்கு முன்னர் எரிஉலையிலிருந்து வெளியேற்றும் அனைத்து கழிவுப் பொருள்களும் ITI நிறுவனத்தினால் பரிசோதனை செய்யப்பட்டது. காலவரையில் திருப்திகரமான முறையில் தொழிற்படுத்துகின்ற தொகுதியில் மீள்நோக்கு மற்றும் தொடர்ச்சியாக நடாத்தப்படும் மாதிரி பரிசோனைகளின் திருப்திநிலையில் காணப்பட்டால் மாத்திரமே அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்படும்.

அப்புறப்படுத்தும் கடதாசி, க்ளாஸ், பிலாஸ்டிக், உருக்கு இரும்பு மற்றும் சேதனப் பொருள்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் (CEA )பதிவுசெய்யப்பட்ட கழிவுப்பொருள்கள் மறு சுழற்சியிற்காக வெளிவாரி நிறுவனத்திற்கு கையளிக்கும் அனைத்து தோட்ட பயனற்ற பொருள்கள் கலப்பு உரம் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படுவதுடன் ஏனைய பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அனைத்தும் தகனம் செய்யப்படும். தகனம் செய்வதால் கழிவுப்பொருள்களிலுள்ள அனைத்து நோய்கள், நுண்ணுயிர்கள், அதி நுண்ணுயிர்கள் அழிவடையும்..

### பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் உயிர்ச்சூழலியல் முகாமைத்துவ திட்டம் (EMP)

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் கொள்கைவாரியான ஒருங்கிணைந்த முகாமைத்துவ கருவியாக இருப்பதுடன் அது வளங்களின் உச்ச பயன்பாடு, கழிவுகளை விடுவிப்பதனைக் குறைத்தல், உயிர்ச்சூழலியல் மேம்பாடு, (காற்றோட்டம், ஒலி மற்றும் நீரின் தரம்) இயற்கைச் சூழல் பாதுகாப்பு EMP தொடர்பாக பொதுமக்களுக்கு தகவல்கள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக வெளிப்படுத்துகை போன்ற நடவடிக்கைகள் பரந்தளவில் உட்படுத்தப்படும். பண்டாநாக்க சர்வதேச விமானநிலையம் சுற்றாடலுக்கு சார்வாதர விமானநிலையமாக உருவாக்குவதனை நோக்காக் கொண்ட 2010 வருடத்தில் அமைக்கப்பட்ட பண்டாநாக்க சர்வதேச விமானநிலையத்தின் சுற்றாடல் குழு EMP விவரங்களுடன் செயல்நிலைப்படுத்துதல்.

EMP மீளாய்வுகள் மற்றும் தேவையான திருத்தங்கள் சுழற்சி முறையாக மேற்கொள்வதன் மூலம் திட்டமிடப்பட்ட இலக்குகளை எய்துதல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பாக பொறுப்பு வகிக்கின்றது.

சுற்றாடல் குழுவின் வழிகாட்டலின் கீழ் வலிமையுடைய சில முன்னெடுப்புகள் மத்தியில் ஊழியர்களின் அறிநிலை விருத்திசெய்தும், அவர்களுக்கு வேண்டிய பயிற்சி அளித்தும் விஷேடமாக, நடைமுறைப்படுத்தப்படுகின்ற நீர் கட்டுப்பாட்டு இயக்கமுறை மற்றும் அனைத்து தொழிற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான வீண்விரயத்தைக் குறைக்கின்ற 3R (குறைத்தல்கள், மறு சுழற்சி மற்றும் மறு பாவனைக்கு எடுத்தல்) தொடர்பாக சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஊழியர்களை பயிற்றுவித்தல் உள்ளடக்கப்படும்.

## வாயுமண்டலத்திற்கு வெளிச்செல்லும் காபன் மற்றும் அடிச்சுவடு குறைத்தல்

(Minimizing the Carbon Footprint)

### வலுச்சக்தி பாதுகாப்பு

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் சக்தி நுகர்வு 74% பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் முனையக் கட்டிடத்திலிருந்து பதிவாகியுள்ளது. வலு தொடர்பான கணக்காய்வுகளினூடாக அதிகளவு சக்தி செலவுகள் ஏற்படக்கூடிய மையங்களை கண்டறிவதற்கும், கணிப்பிடுவதற்கும் ஏற்படும். கணக்காய்வின் நோக்கமாகக் கருதப்படுவது, சக்தியிற்காக செலவிடுவதில் பாரியளவில் பங்கேற்பவர்களை இனங்கண்டுகொள்வதேயாகும். அதில் குளிரூட்டும் தொகுதிகள் மற்றும் மின்சார ஒளித்தொகுதிகளே கூடிய பங்களிப்பைச் செய்கின்றதென கண்டறியப்பட்டுள்ளன.

பின்வரும் சக்தி பாவனையின் வினைத்திறன் தொழிற்பாட்டின் முக்கியத்துவம் தொடர்பாக ஊழியர்களை விழிப்புணர்த்துவதற்காக வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி அயராது முயற்சிக்கின்றனர். வருடத்துக்குள் "அணைத்துவிடும் கொள்கை" அதிகளவில் சக்தி கணக்கு ஆய்வின்போது சுட்டளவாக பயன் படுத்தப்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் வலு முகாமைத்துவ செயற்பாடுகளை அமுல்படுத்துவதன் தொடர்புடைய பல்வேறு தீர்வுகள்.

- நடைமுறைக் கட்டிடங்கள் மின் குறைப்பு ஒளித்தொகுதி, ஒளி கட்டுப்பாட்டுத் தொகுதி மற்றும் மோட்டார் கட்டுப்பாட்டுத் தொகுதி பொருத்தி நவீனமயப்படுத்தப்பட்டன. (உதாரணம் T5 பெலாரசன்ட் கருவிகள் LED C-BUS கட்டுப்பாட்டுத் தொகுதி, AHU மற்றும் PAU இற்கான தொழிற்பாடுகள் )
- புதிய குளீரூட்டும் தொகுதிகள் தற்போது காணப்படும் அவ்வாறான தொகுதிகளுக்கான கட்டிட முகாமைத்துவ தொகுதியுடன் இணைத்தல்.
- கட்டிடங்களை நவீனமயப்படுத்தும்போது இலத்திறனவியல் நிலைப்படுத்தும் மின் தடை மற்றும் மின் குறைப்பு விளக்குகள் / மின்சார குமிழ்களை பயன்படுத்துதல்
- கட்டிடங்களுக்குள் வளி கையாளும் அலகுகளின் பல்வேறுபட்ட கதி இயக்கிகள் மற்றும் மிருதுவான ஆரம்ப கட்டுப்பாடுகளை ஈடுபடுத்தி நிலை உயர்த்துதல்
- வெந்நீர் தொகுதிகளுக்காக சூரிய சூடாக்கியினை ஈடுபடுத்துதல்.
- கூரையின் மீது பொருத்தப்பட்ட யன்னல் வழியாக சூரிய சக்தியைப் பெற்று, இயற்கை ஒளி பாவனையினை உச்சப்படுத்துதல் மற்றும் மின்சார குமிழ்களின் ஒளி குறைந்த சமநிலைப் பொறியினை உகப்பாக்குதல்
- பயணிகள் முனையக் கட்டிடத்துக்குள் இயங்குமுறை உணர்கருவிகள், குடியிருக்கை உணர்கருவிகள், ஈடுபடுத்திக் கொள்ளுதல்.

  வலுச்சக்தி காரணிகளை சரிசெய்தல், இடைமாறுபாட்டு ஹோட்டல்களுக்குள் கட்டுப்பாட்டு விசை இயக்கிகளை ஈடுபடுத்துதல். (RFID) (வான் மின் அலைகளின் மூலம் கண்டறிதல்) முறையினால் செயல்படுகின்ற கதவுகளுக்கு பூட்டுகளை செயற்படுத்துங்கள். உணவுகளை சூடாக்கிக் கொள்வதற்காக சூடு அலுமாரிகளுக்கு பதிலாக நுண்ணலை அடுப்புக்களை மாற்றுவதனூடாக ஒரு மாற்றத்திற்காக குறைந்தபட்சம் நாளாந்தம் 04 கி.வொ மணித்தியால சக்தி சேமிப்பொன்று இடம்பெறும்.
- அலுவலக நேரங்களின் பின்னர் மற்றும் வார இறுதி நாட்களில் அலுவலக பிரதேசங்களிலுள்ள குளிரூட்டிகளுக்குப் பதிலாக நிலை மின்விசிறிகளை உபயோகித்தல்.

இந்த முன்னெடுப்பு பாரிய அளவில் வெற்றியளித்தமை உறுதிப்படுத்தப்படுவது, வருடத்துக்குள் என்றுமில்லாதவாறு ஆகக்கூடிய பயணிகள் மற்றும் வான் நகர்வுகளின் எண்ணிக்கையினை பதிவுசெய்யப்பட்டிருப்பினும், 2010 ஆம் ஆண்டிற்கு நிகராக மின்சார பாவனை அலகாக மிகவும் குறைந்த அதிகரிப்பு காட்டியமையேயாகும்.

**2010 முதல் 2014 வரை ஒரு பயணிக்கான வலுப் பாவனை பின்வருமாறு**

| வருடம் | கி.வோ.ம. பயணி ஒருவருக்கு |
|---|---|
| 2010 | 6.29 |
| 2011 | 5.99 |
| 2012 | 5.27 |
| 2013 | 5.04 |
| 2014 | 4.89 |

எமது வெற்றியின் பலனாக நாம் ஊக்கம் பெற்றுள்ளதுடன், வினைத்திறன் மிக்க வலு மாற்றுத் திட்டம் ஒன்றான சூரிய சக்தி பயன்பாட்டின் பக்கம் கவனம் செலுத்துவதற்கு நாம் தயாராகி வருகின்றோம். 2015 ஆம் ஆண்டாகும் போது எமது தெரிவு செய்யப்பட்ட அலுவலக தொகுதிக்குள் இம்மாதிரி கருத்திட்டப் பணிகள் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இயற்கை வளங்கள் இயல்பான இனப் பெருக்கத்திற்கு ஆதரவு கொடுத்தல்

உலகமயமாக்கல் மற்றும் பொறுப்புணர்ச்சியில்லாது பாவனை செய்வதனூடாக உலகிலுள்ள வரையறுக்கப்பட்ட வளங்கள் அளவிட முடியாத விதத்தில் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. பாரியளவில் சீர்கேடுற்றிருந்த சூழலியல் அறிவியல் தொடர்பான சமநிலை அளவிட முடியாது இருந்தாலும், அவற்றிலிருந்து வெளிப்படுத்துவது, இந்த அழுத்தத்தினைக் குறைப்பதற்காக செயல் ரீதியிலான தீர்வுகளின் தேவைப்பாடாகும். வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேைவகள் (இலங்கை) கம்பனி இந்த சவாலை ஏற்றுக்கொண்டு தாபன தேவைப்பாடுகளுக்காக இயற்கை வளங்களின் பால் உள்ள சார்ப்பு நிலை சிக்கல் நிலையை அகற்றுவதற்கு மாற்று வளங்களைத் தேடி செயல்ரீதியான தொழிற்பாட்டிற்கு உதவுகின்றது. நிலவும் பொருட்செறிவுள்ள காரணிகளுக்கு செயல் ரீதியான தீர்வினை காண்பதற்கு நாம் செயலாற்றுவோம்.

## நீர் பாதுகாப்பு

எமது நீர் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் அவ்வாறான முன்னெடுப்பாகும். பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு நாளாந்தம் தேவைப்படுகின்ற 2,200 கன மீட்டர் பருகுவதற்குத் பொருத்தமான நீர் அளவில் 50% அல்லது இல்லாவிடின் 1200 கன மீட்டர் (கிட்டத்தட்ட) பெற்றுக்கொள்வது தரையின் கீழ் தோண்டப்பட்டுள்ள ஆழ்க்குழாய் கிணறு மூலமேயாகும். எமது நீர் பாதுகாப்பு தொழிற்பாடுகள் பல முன்னெடுப்புக்களால் ஆனது. பயணிகள் முனையக் கட்டிடத்தின் உணர்கரு நீர் குழாய்களின் பாவனை, சிறு நீர் கழிக்குமிடங்களை கழுவுவதற்காக இரட்டை நீர்த்தேக்கத் தொட்டிகளை ஈடுபடுத்தி நீர் பாவனையினைக் குறைத்தல் மற்றும் பயணிகள் முனையக் கட்டிடத்தின் மலசலகூடங்களுக்கு வெளிப்படுத்தும் ஒளி மின் ஆற்றல்கள் ஈடுபடுத்தப்படுகின்றது. நீர் கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் நடைமுறைகளை உச்சளவில் பயன்படுத்துவதனை உறுதிபடுத்துவதற்கும் குறைப்பாடுகள் இருப்பின் அவற்றினை கண்டறிவதற்கும் திட்டமட்டமான அளவு பயன்படுத்தப்படும். தேவையான பழுதுபார்த்தல்கள் மற்றும் பேணுதல்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

## மானிட நிலைப்பாட்டிற்கு ஏற்படும் தடங்களை நீக்குதல்

இளைய தலைமுறையினரின் கல்வி மற்றும் பயிற்சிகளுக்காக வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி பங்களிப்பு செய்கின்றது.

நாடிற்கு இளைஞ புத்திஜீவிகளை வழங்குவதற்காக வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி அறிவூட்டும் மற்றும் பயிற்சி வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் கொண்டு நடாத்துகின்றது. இலங்கை பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தகவல் தொழில்நுட்பம், நிதி, இலத்திறனவியல், தொழில்நுட்ப பொறியியல், பொது நிர்வாகம், இடப்பெயர்வு மேலாண்மை மற்றும் ஊர்தி பொறியில் போன்ற விடங்களில் டிப்ளோமாதாரர்கள் மற்றும் தொழில்நுட்ப பயிற்சியாளர்களுக்கும், கம்பனியினால் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. வருடத்துக்குள் இந்த முன்னெடுப்பு 59 இளைஞ தலைமுறையினரை பயிற்றுவித்துள்ளனர்.

## நிலைப்பாட்டினூடாக கல்வி மற்றும் அறிவு

இளைஞ தலமைுறையின் கல்வி மற்றும் அறிவு மேம்படுத்துவதற்கு தேசிய விமானசேவைக் கைத்தொழில் துறையில் மிகவும் பரந்தளவில் வழிக்காட்டல்களை வழங்குகின்ற தாபனமாக வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி அரசினால் ஆர்பிக்கப்பட்ட "நென குண வடும சிசு திரிய" நிகழ்ச் சித்திட்டத்திற்கு அனுசரணை வழங்கி வருகின்றது. இது 2002 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பாடசாலை சிறார்களின் அறிவு விருத்திக்காக வாராந்தம் நடாத்தப்படுகின்ற இக் கல்விச் சுற்றுலா பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தால் 2002 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 60 பாடசாலைகளுக்கும், 10 பல்கலைக்கழகங்களுக்கும், 15 இராணுவ அங்கத்துவ குழுக்களுக்கும், 15 வேறு தாபனங்களுக்கும் எமது மேற்பார்வை மற்றும் ஒழுங்கமைப்பின் கீழ் தொடர்ந்தும் இந்த வருடத்திலும் இந் நிகழ்ச்சித்திட்டம் திருப்திகரமான விதத்தில் அமுல்படுத்தப்பட்டன.

இவ்வருடத்தில் மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கும் பொதுமக்களுக்கு பிரவேசக் கூடியதாக இருந்ததனால் விமானநிலையத்தை பார்வையிடுவதற்காக வரும் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் 850 பாடசாலை சிறார்கள் மற்றும் ஏனைய தாபனங்களிலிருந்து 300 அங்கத்தவர்களும் இந்த வழிக்காட்டும் சுற்றுலாவிலிருந்து பலன்களை பெற முடியுமாக இருந்தது.






### கலாச்சார நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கையின் நீண்டகால வரலாறு அதன் கலாச்சாரத்துடன் அனைத்து நேரங்களிலும் இணைந்துள்ளது. இந்த அடிப்படை அம்சங்கள் உல்லாசப் பயணிகளை நாட்டினுள் கவரச் செய்வதில் தொடர்ந்தும் நிலைத்திருக்கும் காரணியாக சாட்சி பகர முடியும். எமது கலாச்சாரத்தை ஊட்டுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் வழக்கமாக முயற்சிப்பது இலங்கையின் உண்மையான பழக்க வழக்கங்கள் மற்றும் அதன் பெறுமதி உண்மைப் பெறுமதி வழங்குவதற்கேயாகும்.
அரை தசாப்பதத்திற்கு அண்மிய காலத்திலிருந்து நாடு பூராவும் நிகழும், மிகவும் சிறப்புவாய்ந்த பல கலாச்சார வைபவங்களுக்கு வ/ விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி அனுசரணை மற்றும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.எம்மால் இலங்கையில் மிகவும் புகழ்மிக்க மற்றும் பிரபல்யம் வாய்ந்த பெரஹராவிற்கு அனுசரணை மற்றும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதுடன், இந்த கலாச்சார வைபவங்களுக்காக செலவிடப்பட்ட மொத்த தொகை ரூபா 3,970,000 ஆகும்.

### கலை மற்றும் கலாச்சாரம்

- 2014 ஜுன் மாதம் பேராதெனிய கடபே விகாரஸ்தானையில் இடம்பெற்ற ராமங்ஞ மஹா நிகாயே 69 ஆவது உபசம்பதா மகா வைபத்திற்கு மேற்கொள்ளப்பட்ட நன்கொடைகள்
- கோட்டே மாதிவெல அமைந்துள்ள ஈயம்போருவ கங்காதிலக்க விகாரஸ்தானையில் தர்மாசாலாவ சீரமைத்தல் மற்றும் மலசலகூடத் தொகுதி நிர்மாணிப்பது தொடர்பாக பங்களிப்பு
- 2014 சபுகொட அசல மஹாபெரகரா வைபவத்திற்கு பங்களிப்பு
- 2014 திஸ்ஸமஹாரமயே ருஹுணு பொசொன் மஹாபெரகரா வைபவத்திற்கு பங்களிப்பு
- 2014 ருஹுணு மகா கதிர்காமம் தேவாலயத்தில் வருட அசல வைபவத்திற்காக பங்களிப்பு
- ஸ்ரீ ஜயவர்தனபுல கோட்டே ரஜமஹா விஹாரையில் தலதா பெரகரா மீது பங்களிப்பு
- கண்டி 2014 மலைவாழ் அசல பெஹராவுக்கான பங்களிப்பு.

### மேற்கொள்ளப்பட்ட ஏனைய கருத்திட்டங்கள்

ரூபா 8.5 மில்லியன் செலவினால் அமைக்கப்பட்ட ஒரு தடவைக்கு 150 பேருக்கு இட வசதிகளை வழங்கக்கூடிய விளையாட்டு அரங்கம் வடமேற்கு பகுதியின் ஆனமடுவ பிரதேசத்தில் டி.எம்.தசநாயக்க விளையாட்டு மைதானத்தில் நிர்மாணித்து இந்த வருடத்துக்குள் ஆனமடுவ மாகாண சபைக்கு ஒப்படைக்கப்பட்டது.

### விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனியின் வீடமைப்பு நிதிக் கருத்திட்டம்

தொடர்ந்து 6 ஆவது தடவையும் பாதுகாப்பு அமைச்சினால் அமைக்கப்பட்டுள்ள “wms சார்பில் நாம்” நிதியத்துக்கு ரூபா 4.5 மில்லியன் நிதி நன்கொடையாக வழங்கியமைக்குக் காரணம், அதற்காக விமானநிலைய வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள நிதியங்களைச் சேகரிக்கும் கிடைத்த உதவிப் பணத்தொகை மூலமேயாகமம். இந்த நிதி எமது நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த இராணுவ அங்கத்தவர்களுக்கு வீடமைப்பு திட்டத்தை ஒழுங்கமைப்தற்காக வேயாகும். இந்த நிதி பங்களிப்புடன் நாம் அதற்காக பங்களிப்புச் செய்துள்ள மொத்த தொகை 43 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டன.




1 விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனியால் ஒழுங்கமைக்கப்பட்ட விஷேட கல்வி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைந்த இராணுவ அங்கத்தவர்கள்

2 விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனியின் அங்கத்தவர்கள் தோள்கொடுத்த சமூக சேவைகள் கருத்திட்டம்

3 பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் திண்மக் கழிவுப்பொருள் எரிஉலை

# கூட்டிணைப்பு ஆளுமை...





# ...ஈர்ப்பு மையத்தில்

வி.வி.சே.க இல் 2014 ஆம் ஆண்டு வரை நடைப்பெற்ற 32 வருடாந்த பொதுக்கூட்டங்களில் 19 கூட்டங்கள் ப.ச.வி இன் வருகைத்தரும் முனையத்தின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள இந்த பணிப்பாளர் சபை அறையிலே நடாத்தப்பட்டன.

# கூட்டிணைப்பு

# ஆளுமை

### எமது நடைமுறையும் அர்ப்பணிப்பும்

தாபன போட்டித்தன்மை, வளர்ச்சி மற்றும் நீண்டகால நிலைப்பாடு போன்றவற்றின் அடிப்படைக் கோட்பாடு பொதுநல கூட்டிணைப்பு ஆளுமை என வி.வி.சே.க கருதுகின்றது. பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டிணைப்பு ஆளுமை (கூ.ஆ) வரைவிலக்கண வகைப்படுத்தலுக்கிணங்க "அது தாபனத்தை ஒரு வழிப்படுத்தும் மற்றும் நிர்வகிக்கும் செயற்பாடாகும்" பங்காளர்களிடையே ஏற்படும் முரண்பாடுகளை நீக்குவதற்காக உத்தரவாதமளித்தல் மற்றும் பொருளாதார வினைத்திறமை கூட்டிணைப்பு ஆளுமையின் மிக முக்கியமான அம்சமாகும்.

கூட்டிணைப்பு ஆளுமை சட்டகத்தினுள் எமது செயற்பாடுகள் எப்போதும் பரிசோதனைக்குட்படுத்தப்படுவது ஏனெனில், அதன் மூலம் பெறுமதிகளை உருவாக்குதல், புத்தாக்கம், பொருளாதார அபிவிருத்தி மற்றும் நியமங்கள் என்பன எமது வாடிக்கையாளர்களுக்கும் பொதுமக்களின் வாழ்க்கைக்கு மிகச் சிறந்த தரத்துடன் கூடிய சேவை வழங்குவதற்கும் ஊக்கப்படுத்தப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்தவதற்கு ஆகும்.

வி.வி.சே.க இன் பொதுநல கூட்டிணைப்பு கோட்பாடுகள் "பொதுநல கூட்டிணைப்பு ஆளுமைக்கான அரச வர்த்தக தொழிற்முயற்சி வழிகாட்டல்" சார்ந்து தயாரிக்கப்பட்டுள்ளன. அதனை நிதி அமைச்சில் " தொகுதி" இன் கீழ் வர்த்தக பொது தொழிற்முயற்சிகளுக்காக, பொது தொழில்முயற்சி தொடர்பான திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

நிதி அமைச்சு மற்றும் பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட கூட்டிணைப்பு ஆளுமை ஒழுங்குப்படுத்தும் சட்டகம் வழிகாட்டியாக கம்பெனியால் கருதப்படுகின்றது. கம்பெனியில் நிர்வாக சட்டகமானது, 05 கோட்பாடுகளை கொண்டு அமைந்துள்ளதுடன், கடந்த ஆண்டுகளில் போல் அதனுள் தமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

1. தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டல்.
2. வெளிப்படைத்தன்மை, ஒருமைப்பாடு மற்றும் வருநிலை இடர் முகாமைத்துவம்
3. முக்கிய பங்காளராக அரசிற்கு பதில் கூறும் நிலை
4. பங்காளர்களின் சட்டரீதியான தேவைகளை அடையாளம் காணல்
5. உரிய நேரத்திற்கு சமநிலையில் விடயங்களை வெளிப்படுத்தல்

### கோட்பாடு 1:
### தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டல்

சங்க அமைப்பு விதிகளுக்கமைவாக விமான சேவைகள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்படும் வியாபார முகாமைத்துவம் மற்றும் நிதிக் கட்டுப்பாடு தொடர்பான அறிவு அனுபவமுள்ள உறுப்பினர்களைக் கொண்டமைந்த பணிப்பாளர் சபையின் கண்காணிப்பின் கீழ் கம்பெனியின் வர்த்தக மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் நிருவகிக்கப்படுகிறது. கூட்டிணைப்பு ஆளுமை கொள்கைகளுக்கு தலைமைத்துவம் வழங்கும் மற்றும் பணிப்பாளர் சபைக்கு தலைமைத்துவம் வழங்கும் பொறுப்பை வகிக்கும் தலைவரை அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்படுகிறது. உப தலைவர் மற்றும் நிறைவேற்று பணிப்பாளர்(பணிப்பாளர்கள்) பணிப்பாளர் சபையிலிருந்து நியமனம் செய்யப்படும்.

அரசாங்கம் மற்றும் கம்பெனியின் பங்காளர்களுக்காக கம்பெனியின் பொறுப்புடமை தொடர்பாக நியதிச்சட்ட பொறுப்பினை பணிப்பாளர் சபையால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதில் பிரதான இரண்டு பணிகள் பின்வருமாறாகும்.

(அ). அதன் குறிக்கோளை எய்துக்கொள்வதற்காக கம்பெனியை வழிநடாத்தல்

(ஆ). கம்பெனியின் முகாமைத்துவம், தொழிற்படுத்தல் மற்றும் அபிவிருத்தியை கண்காணித்தல்

### பணிப்பாளர்களின் சுயாதீனம்

பணிப்பாளர் சபை எட்டு பணிப்பாளர்களை கொண்டமைந்துள்ளதுடன், ஐந்து பேர் நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்களாவதுடன், மூன்று பேர் நிறைவேற்றுத் தரம் சார்ந்த பணிப்பாளர்களாவார்கள்.

கோட்பாட்டு ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் ஆகிய இரண்டு துறைகளினதும் முகாமைத்துவத்தின் மீது தங்கி இருக்காமை பணிப்பாளர் சபையின் அமைப்பில் பிரதிபலிக்கனிறது. அது பணிப்பாளர் சபையின் தனிப்பட்ட தொடர்புகள், தனியார், சேவையில் ஈடுபட்டுள்ள அல்லது வியாபாரங்களின் மீது மட்டுமல்ல முகாமைத்துவம் தொடர்பில் பணிப்பாளர் சபையின் கருத்தாகும். பணிப்பாளர் சபையின் கண்காணிப்பு என்ற கடமையில் சுயாதீன தீர்ப்பு பிரதான அம்சமாக விளங்குகின்றது.

தொழில் சார் ரீதியாக பணியாற்றும் கம்பெனியின் செயலாளரிடம் உள்ளக மற்றும் வெளியக தகவல் தொடர்பாக சுயாதீனமாகவோ இணைந்தோ அணுகுவதற்கு பணிப்பாளர் சபைக்கு அனுமதியுண்டு. பணிப்பாளர் சபை நடைமுறைகளுக்கு ஏற்புடையதான வழிகாட்டல்கள் மற்றும்

சட்டத்துடனான தேவைகளை பூர்த்தி செய்தலும் அது தொடர்பான நடைமுறைகளை உரியவாறு நடை முறைப்படுத்தலை உறுதிப்படுத்தலும் கம்பெனி செயலாளரால் மேற்கொள்ளப்படுகிறது.

அதற்கு மேலதிகமாக கம்பெனியின் செயலாளரால் பணிப்பாளர் சபையின் கூட்டங்கள் தொடர்பான அறிவிப்புகள் மற்றும் கூட்ட அறிக்கைகள் விநியோகித்தலும், பணிப்பளார் சபை தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இயன்றவாறு போதுமான அளவு தரவுகளையும் தகவல்களையும் ஏனைய கடித ஆவணங்கள் மற்றும் குழு அறிக்கைகள் வழங்குதலும் மேற்கொள்ளப்படுகிறது. குழுத் தீர்மானங்கள் நடைமுறைப்படுதல் தொடர்பான தொடர் நடவடிக்கைகளையும் கம்பெனி செயலாளரால் மேற்கொள்ளப்படுகிறது.

கம்பெனியின் எல்லா திணைக்களங்களையும் ஆகக்கூடிய கண்காணிப்புடனும் சிறந்த நிர்வாகத்துடனும் பேணிச் செல்லும் பொறுப்பு மூன்று நிறைவேற்று பணிப்பாளர்களிடையும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட முகாமைத்துவத்திற்காக எல்லா பணிப்பாளர்களும் சுயாதீனமாக அணுகலாம்.

### தமது தலைமைத்துவ கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றும்போது பணிப்பாளர் சபையின் பணிகள்

(அ). 2010 ஆம் ஆண்டு சிவில் விமான சேவை சட்ட இலக்கம் இலக்கம் 14 இன் கீழ் குறிப்பிடப் பட்டுள்ள விடயவெல்லைக்குள் கட்டியெழுப்பப்பட்டுள்ள கடமைப்பொறுப்புகளை அடிப்படையாகக்கொண்டு நிறுவனத்தின் நோக்குகையை அண்மிக்க வேண்டுமென் பதுடன். அதன் மூலம் அரசாங்கத்தினதும் ஏனைய பங்காளர்களினதும் தேவைகளுக்கு எந்தளவில் பணியாற்றப்பட்டுள்ளது என்பதை ஏற்புடையதாகக் கொள்ளுதல்.

(ஆ) சட்டரீதியான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யப்படுகின்றது என்பதற்கு பொறுப்பு கூறுதல் மற்றும் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பெனி சட்டத்தில் ஏற்பாடுகளுக்கும் சங்க அமைப்பு விதிகளுக் கமைவாக கம்பெனி தமது தொழிற்பாடுகளை மேற் கொள்கின்றது என்பதற்கு பொறுப்பாக இருத்தல்

(இ) அரசாங்கத்திற்கும் ஏனைய பிரதான பங்காளர்களுக்கும் நன்மை மற்றும் ஆகக்கூடிய அனுகூலங்கள் கிடைக்கப்பெறும் வகையில் முகாமைத்துவத்தால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய கொள்கைகளை தயாரித்தல்

(ஈ) பொது மக்களின் அபிப்பிராயங்களை அவ்வப்போது மீளாய்வு செய்தல் மற்றும் எதிர்கால அபிவிருத்தியின் பொருட்டு நீண்ட கால இலக்குகள் மற்றும் அபிப்பிராயங்கள் தயாரிப்பதற்காக உபாய ரீதியான வழிகாட்டல்களை வழங்குதல்

2013 - 2017 திட்டமிடல் கால வெல்லைக்காக நிறுவனத்து டனான நோக்கங்களை நவீனமயப்படுத்தல் 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன், அவற்றை நிறைவேற்றிக்கொள்ளும் ஆற்றல் மற்றும் திட்டமிடலுக்கான காலவெல்லைகளை அடையாளம்காணல்.

(உ) நிதிசார் ஒழுக்கத்தை கடைப்பிடிப்பதற்கும், எல்லா வளங்களும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கும் பொறுப்பாக இருத்தல்

(ஊ) ஆவணங்கள் மற்றும் கணக்கு புத்தகங்கள் போதுமான அளவில் பேணிச்செல்வதன் மூலம் பொறுப்பாக செயலாற்றப் படுகிறது என்பதற்கு பொறுப்பாக இருத்தல்

(எ) தடைகள் மற்றும் பின்னடைவுகள் என்பவற்றால் நிறுவனத்தை பாதுகாக்கும் பொருட்டு பயனுள்ள இடர் முகாமைத்துவ முறையினை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்பதற்கு பொறுப்பாக இருத்தல்

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பயனுள்ள நிருவாக முறைமையின் ஊடாக நிறுவனத்தின் மொத்த முகாமைத்துவத்தை மேற்கொள்ளும் பொறுப்பு பணிப்பாளர் சபையின் கண்காணிப்பு கடமைப்பொறுப்பிற்கு உரியதாவதுடன். அந்த நிருவாக முறைகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு சிரேஷ்ட முகாமையாளர்களை சாரும்.

**இந்த விடயவெல்லைக்குள் பணிப்பாளர் சபைக்கு உரிய கடமைப்பொறுப்புகள் பின்வருமாறாகும்.**

(அ). பணிப்பாளர் சபையால் தயாரிக்கப்பட்ட கொள்கைகளை நிறுவனத்தினதும், மொத்த சமூகத்தினதும் ஆகக்கூடிய நன்மை கருதி நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதற்கு பொறுப்பாக இருத்தல்

(ஆ). கம்பெனி தமது தொழிற்பாடுகளின் போது உரிய வழியில் பயணிப்பதாக பொறுப்பு கூறும் பொருட்டு முகாமைத்துவ தகவல் அறிக்கைகள் மூலம் முகாமைத்துவத்தின் செயற்பாடுகளை மீளாய்வு செய்தல் மற்றும் செயல் நிறை வேற்றுகையை மதிப்பிடல்

(இ). எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுக்கு ஏற்ப பலன்கள் கிடைக்கப்பெறவில்லையெனில் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதனை உறுதிப்படுத்தும் பொருட்டு தாமதமின்றி பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

(ஈ). பொருத்தமான ஊழியர்களை முகாமையாளராக நியமனம் செய்தல் மற்றும் உரியவாறு கடமைப்பொறுப்புகளை கையளிப்பதாகவும், தத்தமது கடமைப்பொறுப்புகளை சுயாதீனமாகவும் பொறுப்புடனும் நிறைவேற்றுவதற்கு இயன்றவாறான சூழலை ஏற்படுத்துவதன் மூலம் சிரேஷ்ட முகாமையாளர்களிடத்தில் குழு உணர்வு ஏற்படுத்துவதற்கு பொறுப்பாக செயற்படுதல்

(உ). பொது தொழில்முயற்சி தொடர்பான கணக்கு குழு (COPE) கூட்டங்களுக்கு பங்குபற்றுதல் மற்றும் பாராளுமன்ற ஆலோசனை குழு (PCC) கூட்டத்தில் பங்குகொள்ளுதல்

## பணிப்பளார் சபை குழுவாக, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் கடமைப்பொறுப்புகள்

1999.11.19 ஆந் திகதிய PF/PE 3 ஆம் இலக்க பொது திறைசேரி சுற்று நிருபத்தின் படி ஸ்தாபிக்கப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் (AMC) ஒத்துழைப்பு பணிப்பாளர் சபைக்கு கிடைக்கப்பெறுகின்றது. இந்த குழு நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்களை கொண்டமைந்துள்ளதுடன், அதன் அதிகாரத்துவத்தின் விடயவெல்லையின் வரைவிலக்கணத்தின் படி குறித்துரைக்கப்பட்ட பொறுப்புகள் காட்டப்பட்டுள்ளன. உள்ளக கணக்காய்வு பிரிவின் பொறுப்புகளை குறித்துரைத்தல், வருடாந்த கணக்காய்வு திட்டங்களின் மீளாய்வு, பிரிவின் எல்லா நடைமுறைகளுக்குமான உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை மதிப்பிடல் மற்றும் மீளாய்வு செய்தல். செலவுகளின் பயன் மிக்க தன்மை ஏற்படுத்தல் மற்றும் வீண்விரயங்களை தவிர்க்கும் பொருட்டு எப்போதும் செயல் நிறைவேற்றுகையின் மீளாய்வு, கணக்காய்வாளர் அதிபதி மற்றும் வெளியக கணக்காய்வாளர்களால் வெளியிடப்படுகின்ற முகாமைத்துவ கடிதங்கள் தொடர்பாக பின்னாய்வு நடவடிக்கைகளின் பொருட்டு வெளியக கணக்காய் வாளர்களுடன் கூட்டிணைப்பு, பிரமாணங்கள், சட்ட ஒழுங்குவிதிகள் சட்ட திட்டங்கள், மற்றும் சுற்றுநிருபங்களின் படி பணியாற்றப் படுவதாக உறுதிப்படுத்திக்கொள்ளுதல், கணக்காளர் நியமங்களுக்கேற்ப பணியாற்றப்படுகிறது என்பதற்கு பொறுப்பாக இருப்பதற்கு நிதிக் கூற்றுகளின் மீளாய்வு, பொது தொழில் முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற குழுவால் (COPE) செய்யப்பட்ட பரிந்துரைகள் மற்றும் விதிப்புகள் நடைமுறைப்படுத்தல் தொடர்பான மீளாய்வு என்பன இவற்றுள் அடங்கும்.

.

நிறைவேற்றுத் தரம் அல்லாத மூன்று பேர், விமான சேவைகள் அமைச்சின் பிரதான கணக்காளர், உள்ளக கணக்காய்வு மற்றும் தரச் சான்றிதழ் பிரிவின் தலைவர் (H/IA & QA) ஆகியோர்களைக்கொண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அமைந்துள்ளது. பணிப்பாளர் சபையால் நியமனம் செய்யப்பட்ட கலாநிதி திரு.டி.எஸ்.பீ.சேனாரத்ன, (தலைவர்) திரு.ஜே.ஆர்.யு. த சில்வா, மற்றும் திரு. யோகா பேரேரா ஆகியோர் உறுப்பினர்களாக மீளாய்விற்கான ஆண்டில் இக் குழுவில் பணியாற்றியுள்ளனர்.

அவர்களின் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்பான அறிக்கை பணிப்பாளர் சபைக்கு கிடைக்கும். பணிப்பாளர் சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள காரணங்கள் தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் குழுவிடம் இல்லாதபோது அவர்களின் விதந்துரைகள் பணிப்பாளர் சபையால் அங்கீகரிப்பதற்காக வெளிப்படுத்தப்பட்டு குறிப்பிட்டுக் காட்டப்படும். இந்தக் குழுவின் தவிசாளரால் குழு அறிக்கைகளின் பெறுபேறுகள் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்படுவதுடன் குறித்த முடிவுகள் பணிப்பாளர் சபை கூட்ட அறிக்கைகளுக்கு உள்ளடக்கப்படும். 2014 வருடத்துக்குள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு மூன்று கூட்டங்களை நடாத்தப்பட்டுள்ளன.

கணக்காய்வு குழு ஈடுபட்ட தொழிற்பாடுகள் 2 ஆவது கோட்பாடு: தெளிவுநிலை, நேர்மை மற்றும் இடர் முகாமைத்துவத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

### கோட்பாடு 2: தெளிவுநிலை நேர்மை மற்றும் இடர் முகாமைத்துவம்

கம்பனியின் நிதி அறிக்கையில் நேர்மை சுயாதீன மேற்பார்வைக்காக தேவைப்படும் மிகவும் சிறப்பான நிர்வாகம் பொறுப்புத்தன்மை மற்றும் தெளிவுநிலை AMC மூலம் உறுதிப்படுத்தப்படும்.

### உள்ளக கணக்காய்வு

திறைசேரி சுற்றுநிருபம் டீ.எம்.ஏ 2009 (1) , நிதி ஒழுங்குவிதிகள் 134 (1) மற்றும் 1995 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வுத் தரங்கள் சட்டத்திற்குரிய நிபந்தனைகளின் பிரகாரம் வி.வி.சே கம்பனியினால் ச கருத்திட்டங்கள் மற்றும் சேவைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப் படுத்துவதில் செயல் ரீதியில் ஒத்துழைப்பு வழங்குபவர்களுக்கு சுயாதீனமாக நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உள்ளக கணக்காய்வு மற்றும் தர கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நிறுத்தப்பட்ட உள்ளகக் கணக்காய்வு மற்றும் தர உறுதிப்பாட்டுப் பிரிவின் பலன்பொருந்திய உதவி தலைவர் ஆகியோர் கண்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு கிடைக்கின்றது. இந்தக் குழுவில் நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர். அதிகாரத்தின் எல்லை குறித்து உள்ளகக் கணக்காய்வு மற்றும் தர உறுதிப்பாட்டுத் தலைவர், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கும் நிர்வாக ரீதியாக தவிசாளருக்கும் அறிக்கைவிடுதல் வேண்டும்

உள்ளகக் கணக்காய்வு மற்றும் தர உறுதிப்பாட்டுப் பிரிவு முக்கியமாக கவனம் செலுத்துவது பல்வேறு விமானநிலைய சேவைகளுக்கு குறித்த நிலைமை தரங்கள் திருப்திகரமான விதத்தில் நிறைவேற்றப்படுவதற்கு உறுதி வழங்கப்படுதல், உள்ளக கட்டுப்பாடுகளின் போதுமானளவு தன்மைஇ நேர்மை மற்றும் பெறுபேற்றை மதிப்பிடுவதன் மூலம் முழு உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதிஇ இடர்பாட்டு முகாமைத்துவம் மற்றும் நிர்வாக தொழிற்பாடு தொடர்பாக சுயாதீன உறுதிப்பாட்டை வழங்குவதுமேயாகும்.

- தந்திரோபாய திட்டமிடல்களில் தொழில் வாரியான தொழிற்பாடுகள் மற்றும் மேம்படுத்தும் முயற்சி மீளாய்வு செய்தல்.
- பணிப்பாளர் சபையால் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் பயனுடைய விதத்தில் தொழிற்படுகின்றனவா உள்ளகக் கணக்காய்வு மற்றும் தர உறுதிப்பாட்டு தலைவர் பொறுப்பேற்பார்
- வி.வி.சே கம்பனியின் ஒவ்வொரு பிரிவின் விடயபரப்பின் கீழ் உட்படும் முகாமைத்துவ முடிவுகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான அபாயம் மதிப்பாய்வு செய்யும் விதந்துரைகள் மதிப்பாய்வு செய்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு மற்றும் கம்பனியின் தவிசாளருக்கு சமர்பித்தல்
- அமைப்புமுறை மற்றும் நிர்வாகம் தொடர்பாக வெளிவாரி கணக்காய்வாளர்களினால் மேற் கொள்ளப்படுகின்ற அபாயம் மதிப்பிடுவது தொடர்பாக அவதானிப்புகளை மேற்கொள்ளல்
- வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பாக மிகவும் பொருத்தமான மற்றும் காலத்துக்குப் பொருத்தமான நிதி மீளாய்வுகளை செய்தல் அவற்றை கண்டறிதல் மற்றும் அறிக்கையிடல்
- விமானநிலையத்தை தேர்ந்தெடுக்கப்பட்ட வசதிகள் மற்றும் சேவைகள் தொடர்பாக நிலைமைகள் கணக்காய்வு செய்வதற்கு பொறுப்பேற்றல்.
- தேசிய கொள்முதல் பிரதி முகவராண்மையின் (NPA) மதியுரைத் தொடர்களுக்கு இயைவாக கொள்வனவு செய்யும் தொழிற்பாடுகள் மீளாய்வு செய்தல்

மேற்குறிப்பிட்ட துறைகளை உள்ளடக்கி மீளாய்வு வருடத்துக்குள் உள்ளகக் கணக்காய்வு மற்றும் தர உறுதிப்பாட்டுப் பிரிவினால் அநேகமான ஒப்படைப்புகள் பொறுப்பேற்று செயலாற்றுகின்றது.

### கோட்பாடு 3 : முக்கிய பங்குடமையாளராக அரசுக்கு பொறுப்பு கூறவேண்டிய நிலை

முக்கிய பங்காளராக அரசிற்கு பதில்கூறும் நிலை அரசாங்கத்திற்கு முழு அளவில் சொந்தமான நிறுவனம் என்ற நிலையில் அரசாங்கத்திற்கான கணக்கியல் தன்மை, கீழ்க்காணும் வழிமுறைகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

### பாராளுமன்றம்

பாராளுமன்றம் 2002 மே 24 ஆம் திகதிய PE/PF/21 ஆம் இலக்க திறைசேரி சுற்று நிருபத்திற்கு அமைய நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்ற உறுப்பினர்களின் மீளாய்விற்காக நிறுவனத்தின் ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## பொது தொழில் முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற குழு (COPE)

தொழில்முயற்சிகளின் சரியான இலக்குகள் நிறைவேற்றுகின்ற அளவு சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றும் அளவ நிச்சயித்துக் கொள்வதற்காக அரச தொழில் முயற்சிகளின் செயற்பாட்டை மீளாய்வு செய்யமான அதிகாரம் பொது தொழில்முயற்சிகள் தொடர்பாக பாராளுமன்றக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஏதும் பொது தொழில்முயற்சிக்கு பொது தொழில் முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற குழு தொழில்முயற்சியின் தொழிற்பாடுகள் தொடர்பாக பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களுக்கு காரணமாக அமைகின்ற காரணங்கள் தொடர்பாக பதிலளிப்பதற்காக அழைப்பு கிடைக்கப்படின் தவிசாளர் பணிப்பாளர்கள், சிரேஷ்ட முகாமையாளர்கள் மற்றும் முக்கிய பொறுப்புடைய அதிகாரியான அமைச்சின் செயலாளர் அந்த மீளாய்வு கூட்டங்களுக்குள் கலந்து கொள்ளுதல் வேண்டும். வருடத்துக்குள் பொது தொழில் முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற குழு (COPE) கூட்டமொன்று நடாத்தப்பட்டுள்ளது.

## பாராளுமன்ற ஆலோசனைக் குழு (PCC)

விமான சேவைகள் சம்பந்தமான பாராளுமன்ற ஆலோசனைக் குழு, விடுக்கப்பட்ட வினாக்கள் சம்பந்தமாக விளக்கமளிக்கவும், நிறுவனத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமாக அறிந்து கொள்ளவுமென வி.வி.சே.க தலைவர், சபைப் பணிப்பாளர்கள், நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர்கள் ஆகியோரை அதன் கூட்டத்தில் சமூகமளித்திருக்கும்படி கோர முடியும். ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் நான்கு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

## நிதியமைச்சர் / திறைசேரி

அரச தொழில்முயற்சிகள் உட்பட அரசதுறையில் நிதி ஒழுக்காறு சம்பந்தமான பொறுப்பை நிதியமைச்சர் அல்லது அவரது சார்பில் பணியாற்றுகின்ற பொதுத் திறைசேரி கொண்டுள்ளது. செயலாற்றுகையை மேற்பார்வையிடுவதற்கும், நியதிச்சட்ட பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் போன்றவை பின்பற்றுவதாக உறுதிபடுத்திக் கொள்வதற்கும் முக்கிய காரணங்களை அமைச்சருக்கு அறிவிக்கவென திறை சேரிப் பிரதிநிதியொருவர் பணிப்பாளர் சபையில் நியமிக்கப்படுவது வழக்கம்.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் திறைசேரிப் பிரதிநிதியாக கலாநிதி டி.எஸ்.பி சேனாரத்ன அவர்கள் இப்பணியை நிறைவேற்றினார்.

அரச தொழில்முயற்சிகளில் நிதித்துறை முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் தொடர்பான பொறுப்புகள் தங்கியிருப்பது, திறைசேரியின் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்திடமேயாகும்.

## சிவில் விமானசேவைகள் அமைச்சு

விமானசேவைகள் அமைச்சின் செயலாளர் பிரதான கணக்கீட்டு அதிகாரியாக கம்பனியின் நிதி நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக அரசுக்கு பதில் கூறும் நிலையில் இருத்தல் வேண்டும்.இந்த பொறுப்பின் கீழ் பணிப்பாளர் சபையுடன் வழக்கமாக பின்வருமாறு காட்டப்பட்டுள்ள காரணங்கள் பணிப்பாளர் சபையுடன் மீளாய்வுக்குட்படுத்துதல் வேண்டும்

1. தாபன திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டம்
2. நடைமுறை வருடத்தின் பௌதீக மற்றும் ஏனைய செயற்பாடு
3. கம்பனி மற்றும் கணக்குகள் தொடர்பாக முகாமைத்துவக் கடிதங்கள்
4. வருடத்தில் பொறுப்பேற்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள்
5. பொது தொழில் முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற குழுவில் தோன்றிய பிரச்சினைகள்

## கோட்பாடு 4 : பங்குரிமையாளர்களின் சட்டரீதியான தேவைப்பாடுகளை கண்டறிதல்

நாம் எமது பங்காளர்களை திருப்தியடையச் செய்வதனுாடாக மற்றும் சட்டரீதியான கடப்பாடுகள் மற்றும் சமூக பொறுப்புகள் தொடர்பாக பெற்றுக்கொண்டுள்ள புகழினூடாக பங்காளர்களின் பெறுமதி உயர்த்தப்படும். அதற்கு மேலதிகமாக அனைத்து சட்ட ரீதியான பங்காளர்கள் முக்கிய பங்குரிமையாளர்கள் மற்றும் ஏனைய அங்கத்தவர்களான ஊழியர்களும் உட்பட விமான நிலையத்தை பாவனை செய்வோர் (விமானசேவைகளில் பயணிகள் மற்றும் விமானநிலையத்திற்குள் தமது வர்த்தக தொழிற்பாடுகளைச் செயற்படுத்தும் வர்த்தக சமூகம்) வழங்குநர்கள் மற்றும் ஏனைய சேவை வழங்குநர்கள் மற்றும் ஒட்டு மொத்தமாக மக்கள் சார்பாக சட்டரீதியான மற்றும் ஏனைய பொறுப்புகள் கம்பனி கண்டறிந்துள்ளது. இந்த கடமைகள் தாபனம் கருதுவது பங்குடமையாளர்களின் நீண்டகால பெறுமதி உச்சளவில் நிறை வேற்றுவதற்குத் தேவைப்படும் மிகவும் முக்கியத்துவாய்ந்த கடமையின் பகுதியாக என கருதியேயாகும்.

பொருத்தமான தாபன செயற்பாடுகள் தொடர்பாகவுள்ள அர்ப்பணிப்பு பின்வரும் காரணங்களால் தெளிவுபடுகின்றன.

1. முறைசார் கட்டமைப்பு ரீதியிலான நிர்வாகம் தொடர்பாக பணிப்பாளர் சபை மற்றும் முகாமைத்துவம் காட்டும் முயற்சி
2. விமானநிலைய தொழிற்பாட்டு பிரதிநிதியாக அரசின் கடமைகளை நிறைவேற்றுதல்
3. கடன்படுநர்களுக்கு மற்றும் நிதி நிறுவனங்களுக்கு உள்ள கடமைகள் சரியான நேரத்திற்குள் நிறைவேற்றுதல்
4. நியாயமான வர்த்தகம் தொடர்பாகவுள்ள கடமை வழக்கமாக நிறைவேற்றுதல் மற்றும் வழங்குநர்கள் மற்றும் ஏனைய வழங்குநர்களுடன் செயலாற்றும்போது நியாயமான அடிப்படை வழங்குதல்
5. சமுகத்திற்கு தாக்கமளிக்கும் வர்த்தக ஒழுங்கு முறை விதிகள் கையாளுவதற்கு உறுதியளித்தல்
6. அனைத்து தொழிற்பாடுகள் மற்றும் செயற்பாடுகள் சட்டத்திற்கு இணங்கும் வகையில் நிறைவேற்றுதல் மற்றும் மிகவும் பொருத்தமான கையாளுகைகளை பின்பற்றுதல்.
7. விமானநிலையத்தை கையாளும் அனைவரையும் பாகுபாடின்றி கவனித்தல்
8. ஊழியர்களுக்கு நியாயமான மற்றும் பாகுபாடின்றி கவனித்தல்

**கோட்பாடு 5 : சரியான நேரத்திற்கு மற்றும் சமஅளவில் காரணங்களை வெளிப்படுத்துதல்**

எமது தொலைநோக்கு முடிவுகளின்போது தேவையான ஆழ்ந்த மற்றும் பாதுகாப்பான, துல்லியமான தகவல்களை சரியான நேரத்திற்குள் அறியப்படுத்துதல் எமது உள்ளக மற்றும் வெளிவாரி தரவுகளை பகிரங்கப்படுத்தும் முக்கிய கருத்தாகும். திறைசேரியின் பொது தொழில் முயற்சிகள் தொடர்பாக திணைக்களம் நிலைநிறுத்தப்பட்ட சுற்றுநிருபங்களும் உள்ளடங்களாக தகவல்களை பகிரங்கப்படுத்துவதற்காக தேவையான அனைத்து சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல் உறுதிப்படுத்துவதற்காக கம்பனிகள் கொள்கை மற்றும் நடைமுறைகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

இடர்பாட்டு மாதிரி நிதி நிலைமை தொழிற்பாட்டுச் செயலாற்றுகை மற்றும் தாபன நெகிழ்ச்சி போன்ற தன்முனையாற்றல் பங்காளர்களுக்கு புரிந்துகொள்வதற்கு உதவுவதற்காக விவிசேக பயனுடைய மற்றும் நேரடி தொடர்பாடல் பங்காளர்களுடன் நடாத்தப்படும். கேட்கும்போது அல்லது பழக்கமான மற்றும் குறித்தகாலத்துக்கான மற்றும் தற்காலிக அறிக்கைகள் மற்றும் பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்கள் அதிகளவு வழங்கப்படும். ஊழியர்களுக்கு நிறுவனத்தின் தொழிற்பாட்டு நவடிக்கைகள் மற்றும் நிதியியல் செயலாற்றுகை தொடர்பாக புதுப்பிக்கப்படும். ஊழியர்களுக்கும் தகவல்களை பகிர்தல் பதவியுயர்வு வழங்கும் நோக்கில் கம்பனியின் உள்ளக வலையமைப்பு செயல்படுகின்றது. நாம் தொழிற்படுத்தப்படுகின்ற கூட்டத்தாருக்கு தாக்கம் விளைவிக்கும் மற்றும் எமது தொழில் முயற்சிக்கு தாக்கம் விளைவிக்கின்ற சட்டங்கள் மற்றும் நியதிகளின் அபிவிருத்திகள் கட்டளைகள் மற்றும் திருத்தங்கள் இடம்பெறுமாயின் விவிசேக பொது கொள்கை உரையாடல்களுக்காக பங்களிப்பு வழங்கப்படும்.

# இடர் முகாமைத்துவம்

நாட்டினுள்ள மூன்று விமானநிலையங்களான பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், மத்தளை ராஜபக்ஷ விமான நிலையம் மற்றும் இரத்மலானை விமான நிலையம் என்பவற்றினை முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பவற்றிற்காக பங்களிப்பு செலுத்துகின்ற இலங்கை அரசாங்கத்தின் நியதிச் சட்ட சேவை திட்டமிடலாளராக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனி விளங்குகின்றது. அதன் தொழிற்பாட்டு மற்றும் நிதி சார் செயலாற்றுகையின் அச்சுறுத்தும் இடர்பாடுகளுக்கு மற்றுமல்லாது பாரியளவில் நாட்டின் பிரதிம்பத்திற்கு ஏற்படும் இழப்பீடுகள் தொடர்பாக பல்வேறு விதமான இடர்களைத் தவிர்ப்பதற்காக தோள் கொடுத்து உதவுகின்றது. அதனால் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியின் நிறுவனசார் நல்லாட்சி வரம்புக்குள் இடர் முகாமைத்துவ முக்கிய பிரிவாக இருப்பதுடன், விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனியின் உள்ளக நிர்வாக மற்றும் இடர்பாட்டு முகாமைத்துவ அணுகுமுறையின் நற்தன்மை தொடர்பில் இதன் பணிப்பாளர் சபை பொறுப்புக் கூறல் வேண்டும்.

**இடர் முகாமைத்துவத்தின் நோக்கங்கள் பின்வருமாறு அமைகின்றது**

- பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு அணுகு முறையொன்றினை நிறுவி பேணி வருவதனுடாக அனைத்து வகையிலான இடர்பாடுளையும் கட்டுப்படுத்தல்
- இடர் முகாமைத்துவ எண்ணக்கரு தொடர்பாக பதவியணியினர் மத்தியில் விழிப்புணர்வூட்டி அது தொடர்பாக அவர்களை பயிற்றுவித்தல்
- இடர் மதிப்பீடு மற்றும் அதன் எச்சரிக்கை எதிர் விளைவுகள் என்பன பற்றி அதனுடன் தொடர்புடைய தரப்பினரை விழிப்பூட்டல்
- தரமான, போதுமான மற்றும துல்லியமான தகவல்களை காலத்துக்கேற்ப பெற்றுக் கொள்ளல்
- தொழில்நுட்ப மற்றும் சிக்கலான தகவல்களை புரிந்து கொள்ளக்கூடிய வல்லுநர்கள் இருக்கின்றமையை உறுதிப்படுத்தல்
- இடர் பற்றிய நாட்டத்தை விருத்தி செய்தல்
- விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியின் நிதி சார் மற்றும் நிதி சாரா குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு தேவையான ஆற்றலை விருத்தி செய்தல்.
- பொருத்தமான இடர்பாடுகளை இனங்காணும் முறைமைகளினூடாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனி முகங்கொடுக்கின்ற இடர் தன்மைகளை இனங்காணல்.
- விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனி முகங்கொடுக்கின்ற இடர்பாடுகளுக்காக பதிலளிக்கக் கூடியதாக மற்றும் கட்டுப்படுத்துவதற்குள்ள இயலுமை தொடர்ந்தும் விருத்தி செய்தல்
- விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியின் நன்மதிப்பினை பேணிப் பாதுகாத்தல்
- விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனி சமூக ரீதியாக பொறுப்புக் கூறக்கூடிய மற்றும் நற் பிரஜைகளாக மாற்றியமைப்பதற்கு தேவையான அனைத்து வித உதவிகளையும் பெற்றுக் கொடுத்தல்
- ஒவ்வொரு இடர் தன்மைகளுக்கும் ஏற்ற மாற்றீடுகளை பயன்படுத்தல்
- எமது தொழில் முயற்சியின் நற்தன்மை மாற்றமின்றி உள்ளமை பற்றி உறுதிப்படுத்துவதுடன் மாற்றங்களுக்கும், நவீன முன்னேற்றங்களுக்கும் தேவையான வசதிகளை பெற்றுக் கொடுத்தல்
- எமது தொழில் முயற்சியின் தரம் மாறாதிருப்பதனை உறுதிசெய்வதுடன், மாற்றங்களுக்கு மற்றும் புதிய மேம் பாடுகளுக்காக துரிதமாக பதிலளிக்கும் இயலுமைப் பெற்றுக்கொடுத்தல்.
- தொழில் முனைவோர் மற்றும் வர்த்தக வாய்புகளுடன் தொடர்புடைய இடர்பாட்டிடையே முறையான சமநிலை வடிவமைத்தல்

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியின் இடர் முகாமைத்துவ வட்டம் பின்வரும் அட்டவணையின் மூலம் விளக்கப்பட்டுள்ளது.



- இடர்களை இனங்காண்வதன் மூலம் இடர் பற்றி மதிப்பீடு செய்வது எமது செயற்பாட்டினுள் அடங்கும். அவ்வாறான இடர் தன்மைகளை இனங்காண்பதற்காக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியின் குறிக்கோள்கள், விமான சேவைகள், சந்தை மற்றும் நிறுவன ரீதியில் செயற்படுகின்ற சட்ட ரீதியான, அரசியல் ரீதியான சமூகப், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப சூழல் காரணிகள் மூலம் ஏற்படுகின்ற தாக்கங்கள் பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும். இதில் ஏற்படக்கூடிய விபரீதங்கள், தோல்விகள் என்பவற்றினை இனங்காணல் மற்றும் மோசமான பெறுபேறுகளை இனங்காணல் என்பன இடரை அறிந்து கொள்வதற்கான செயற்பாடில் அடங்கும்.?
- இடர்கள் தொடர்பாக இனங்காண்பதற்காக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியானது மேலிருந்து கீழ் நோக்கி (முகாமைத்துவம் நன்கு விழிப்பூட்டப்பட்டுள்ளது) மற்றும் கீழிருந்து மேல் நோக்கி (தொழிற்பாட்டாளர்கள் நன்கு விழிப்பூட்டப்பட்டுள்ளனர்) என்ற பிரவேச அணுகுமுறைமைகள் இரண்டு பின்பற்றப்படுகின்றது. இடர்கள் ஏற்படுவதற்கான காரணத்தை புலனாய்வு செய்வதற்காக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியானது அடிப்படை பகுப்பாய்வுகளை அனைத்து சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தி வருகின்றது.
- இடர்களை இனங் காணல் மற்றும் தொழில் முயற்சியில் தாக்கம் செலுத்தக்கூடிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியானது இடர் மாதிரி குறிப்புடன் ஒப்பீட்டு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியானது ஒவ்வொரு இடர் பற்றியும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது அதற்கு தேவையான பதில் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தீர்மானித்துள்ளது.
- இடர் அறிக்கையிடல் : இடர் முகாமைத்துவத்திற்கு தேவையான கட்டுப்பாட்டு அமைப்புமுறை, இடர்களை இனங்கண்டு அதற்கு தீர்ப்பதற்காக ஈடுபடுத்தக்கூடிய செயற்பாடுகள், முக்கிய சந்தர்ப்பங்களில் இடர் கட்டுப்பாட்டிற்காக பயன்படுத்துகின்ற விதிமுறைகள் மற்றும் அமைப்புமுறை கண்காணிப்பு மற்றும் அவதானிப்பு என்பன விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியினால் அறிக்கையிடப்படும் விடயங்களாகும்.
- இடர் பதிலீடு : இடர் பதிலீடானது இடரைக் கட்டுப்படுத்துவதற்காக தெரிவு செய்யப்படுகின்ற தொழிற்பாட்டு வழி முறைகள் அடங்கிய ஒரு திட்டமாகும். இதன் போது மாற்று வழிமுறைகள் பற்றியும் கவனம் செலுத்தப்படும். இடரைத் தவிர்த்தல், குறைத்தல், பகிர்ந்து கொள்ளல், ஏற்றுக் கொள்ளல் என்பன இதில் உள்ளடக்கப்படுவதுடன் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியானது இடர் பற்றிய வெறுப்புத் தன்மையின் மீது தங்கியுள்ளது.
- மீதிகள் பற்றிய அறிக்கையிடல் : பிரதான இடர்களின் போது அதற்கான பதிலீடுகளை மேற்கொண்டதன் பின்னர் மீதமுள்ள இடர் பற்றிய அறிக்கையிடல்
- கண்காணிப்பு : இடர் பதிலீட்டினை கட்டியெழுப்பி செயற்படுத்தியதன் பின்னர் அதன் வெற்றித் தன்மையானது இடர் முகாமைத்துவ குழுவின் கண்காணிப்பிலேயே தங்கியுள்ளது.
- தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற ஒரு செயற்பாடாக இச்சுழற்சியானது மீண்டும் மீண்டும் இடம்பெற்று வருவதுடன் இடர் முகாமைத்துவ சுழற்சியில் அந்தந்த சந்தர்ப்பங்களுக்கு உரியவாறன திருத்தங்கள் தேவைப்படும் போது மேற்கொள்ளப்படுகின்ற சுழற்சி முறையிலான செயற்பாட்டினுள் சேகரிக்கப்படுகின்ற தகவல்கள் துல்லியமாக பயன்படுத்தப்படுகின்றது.

எமது இடர், அதனுடன் தொடர்புடைய தாக்கங்கள் மற்றும் இடர் பதிலீட்டு உபாயங்கள் என்பன பின்வருமாறு.

| இடர் தன்மைகள் மற்றும் விளக்கங்கள் | விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனிக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் | இடர் பதிலீட்டு மூலோபாயங்கள் |
|---|---|---|
| மூலோபாய அபாயங்கள் | | |
| கைத்தொழில் / நாடு பற்றிய இடர்<br><br>விமானப் பயண கொள்ளளவு வளர்ச்சி வீதம் விவசேஷ வர்த்தக தொழிற்பாடுகள் விமானப் பயண கொள்ளளவு மற்றும் அதன் வளர்ச்சி மீது தங்கியிருப்பதுடன் சுற்றுலா வருகையின் மீது அதிகளவில் தங்கியுள்ளது. இது பருவக் காலத்தின் கீழ் உட்படுத்தப்படும். | • இலக்காகக் கொள்ளப்பட்டுள்ள இலாபத்தன்மை மற்றும் வருமானத்தை அடைந்து கொள்ள இயலாமை | • இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலுடன் இணைந்த சந்தைப்படுத்தல் முயற்சிகள் மூலம் நாட்டின் சுற்றுலாக் கைத்தொழில் விருத்தி செய்யப்படும். |
| உள்நாட்டு விமான சேவைகள் மீது அதிகம் தங்கியிருத்தல் ஸ்ரீலங்கன் விமான சேவையானது விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியின் பாரிய அளவிலான வாடிக்கையாளராக விளங்குவதுடன் ப.ச.வி.நி. பயணிகள் எண்ணிக்கையில் அது 53% ஆகும். | • சந்தை மற்றும் வாடிக்கையாளரை அடிப்படையாகக் கொண்டு உயர் மட்ட கட்டமைப்பு சார்ந்த இடர்களுக்கு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனி வெளிப்படுத்துகின்றது. | • விமான நிலையத்தை வழிநடத்துபவரின் மற்றும் தேசிய விமான சேவையின் தொழில்சார் திட்டமிடலை ஒருங்கிணைப்பதற்கு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியானது தொடர்ந்தும் முயற்சி செய்து வருகின்றது. நாட்டின் பிரதான விமான சேவைகள் திட்டத்தில் உள்நாட்டு விமான சேவைகளின் பயன்பாட்டினை பாதுகாக்கும் உபாயங்களுடன் திறந்த வான் கொள்கை வர்த்தக பரிமாற்றிக் அடங்கும். |

| இடர் தன்மைகள் மற்றும் விளக்கங்கள் | விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனிக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் | இடர் பதிலீட்டு மூலோபாயங்கள் |
|---|---|---|
| உபாய ரீதியான இடர் | | |
| இரண்டாவது சர்வதேச விமான நிலையத்திற்கான சந்தை அபிவிருத்தி பற்றிய இடர் மற்றும் வாடிக்கையாளர் தளம் அடிப்படையிலான இடர் | • கருத்திட்டத்தின் ஆயுட்காலம் மற்றும் மீளச் செலுத்தும் கால இடைவெளி என்பவற்றை நீடிக்க முடியும். | • ம.,.ச.வி.நிலையத்தின் சந்தைப்படுத்தும் ஆற்றலைக் கண்டறிதல் மற்றும் விரிவாக்கத்துடன் தொடர்புடைய சந்தைப் படுத்தும் முயற்சிகள் ஒருமுகப்படுத்தியுள்ளது. நிலைத் தன்மை பகுப்பாய்வு மற்றும் விமானப் பயணத் தடவைகள் மற்றும் விமான பயண பாதை கணிப்புள் என்பன முக்கிய விடயங்களாகும்.<br>• சந்தைப் படுத்தல் பிரிவினால் மேம்படுத்தல் பணிகள் மேற்கொண்டு வருவதுடன் சுற்றுலா மற்றும் விமான சேவைகள் தொகுதிகள் விருத்தி செய்யப்பட்டும் வருகின்றது. |
| தொழிற்பாட்டு இடர்பாடு | | |
| விமான சேவை சொத்துக்களுக்கு சேதம் அல்லது நட்டம் ஏற்படல் | • செலவுகள் விஞ்சிப்போதல் மற்றும் இலாபம் அற்றுப்போதல் | • முறையான பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு முறைமைகளுக்கு மேலதிகமாக அவசரகால திட்டமிடல் முன்னாயத்தங்களை வழக்கமாக மேற்கொள்ளல்.<br>• காப்புறுதி உறுதிப்பத்திரங்கள் ஊடாக மூன்றாம் தரப்பினரின் இடர் கவனிப்பு கட்டாய விடயமாகக் கருதப்படுகின்றது. |
| பாரிய மூலதன முதலீடு காரணமாக உயர் மட்டத்திலான தொழிற் பாட்டு பற்சக்கர வெளிப்பாடு. | • கம்பனியின் சொத்துக்களின் மீது,நன்மைக் கடன் வட்டிகளின் மீது விஞ்சாதிருப்பின் அதன் மூலம் கம்பனியின் பங்குகள் மற்றும் இலாபத்தன்மை என்பன வீழ்ச்சியடையச் செய்யும். | • அனைத்து விதமான முதல்தர முதலீடுகள் சாத்திய வள ஆய்வொன்றின் பின்னரே தீர்மானிக்கப்படுகின்றன. அதன் போது முதலீட்டின் மீளக் கிடைக்கப்பெறுகின்ற நிதிப் பாய்ச்சல் (FROT) மற்றும் மீளச் செலுத்தல் கால அவகாசம் மற்றும் தேறிய நிகழ்காலப் பெறுமதி, (NPV) பொருளாதாரப் பெறுமதிகளின் கூட்டுத் தொகை, (EVA) உள்ளக நன்மைகளின் வீதம் (RA) உள்ளிட்ட பல்வேறு அணுகு முறைமைகள் பயன்படுத்தப்படுகின்றன.<br>• வருடாந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் செயற்பாட்டின் ஊடாக மூலதனத்தை வரையறுத்தல் அல்லது வேறுவிதமாக குறிப்பிடுவதாயின் மூலதனச் சொத்துக்கள் அல்லது கருத்திட்டங்களின் முதலீடுகளை வரையறுத்து அதனூடாக சிறந்த திரவநிலை மட்டத்தில் மற்றும் போதுமானளவு நிதிசார் பற்சக்கரம் நீண்ட காலக் கருத் திட்டங்களுக்காக திட்டமிடப்படும். இதன்போது மூலதன வரையறை செயற்பாடானது மூலதனச் சொத்துக்கள் அல்லது கருத்திட்டத்தின் இடர் தன்மை என்பவற்றின கருத்திற் கொண்டே கையாளப்படுகின்றது.<br>• விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியின் செலவு எல்லை தீர்மானிக்கப்படுவது திரவநிலை மற்றும் நெம்புகோள் விகித அடிப்படையிலேயாகும். உயர் எல்லையைத் தாண்டிய கருத்திட்டங்களுக்கான நிதியங்களை வெளிக் காரணிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளும் தன்மையின் ஊடாகவே தீர்மானிக்கப்படுகின்றது. |

| இடர் தன்மைகள் மற்றும் விளக்கங்கள் | விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனிக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் | இடர் பதிலீட்டு மூலோபாயங்கள் |
|---|---|---|
| மூலோபாய அபாயங்கள் | | |
| தொழிற்பாட்டு இடர்பாடுகள்<br><br>சட்ட ரீதியான இடர்பாடுகள்<br><br>விமான நிலையங்களை பயன்படுத்துகின்ற பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய மரண/ உடல் ரீதியிலான இழப்புகள் மற்றும் சொத்து சேதங்கள் என்பன பற்றிய இடர்பாடுகள் | • சட்ட ரீதியான இணைப்புகள் காரணமாக ஏற்படக் கூடிய நிதி சார் நட்டங்களை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியினால் பொறுப்பேற்பதற்கு மேலதிகமாக பாதுகாப்புத் தன்மை பற்றிய மறைமுக பிரதிகூலங்களும் ஏற்படும். | • விமான நிலையத்துடன் தொடர்புடைய இடர்களை காப்பீடு செய்யும் வகையில் விமான நிலையத்தை நிருவகிக் கின்றவர்களின் பொறுப்புக் காப்புறுதி உறுதி ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டது.<br><br>• மக்கள் பொறுப்பு காப்புறுதி திட்டத்தின் ஊடாக விமான சேவைகளை இயக்குவோர், தீர்வையற்ற கடைகள் மற்றும் ஏனைய நிவாரணம் பெறுவோருடனான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளும் போது கட்டாயமாகக் காணப்படுவதுடன் அதன் மூலம் அவர்களது ஒப்பந்தங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களினுள் மூன்றாம் தரப்பினருக்கு ஏ ற்படக்கூடிய மரணங்கள் மற்றும் நட்டங்கள் பற்றிய சட்ட ரீதியான இடர்கள் இதில் காப்பீடு செய்யப்படும்.<br><br>• விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளும் போது அனைத்து ஒப்பந்ததாரர்களும் வழங்க வேண்டிய ஒப்பந்ததாரர்களின் அனைத்து விதமான இடர் காப்புறுதிக் கொள்கை, திட்டம் என்பன விமான நிலையத்தினுள் மேற் கொள்ளப்படுகின்ற நிர்மாணப் பணிகளுடன் தொடர்புடைய இடர் காப்பீடு செயற்பாடாகும்.<br><br>• எமது அனைத்து விதமான ஒப்பந்தங்களினுள்ளும் சட்ட ரீதியான அல்லது பிணக்கு தீர்ப்பதற்கு முந்திய சுமுகமாக தீர்த்துக் கொள்ளக்கூடிய வழிமுறைகள் பற்றி ஆராய வேண்டும் என கொள்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. சட்ட ரீதியான இடர் தொடர்பான உயர் செலவினங்களைக் குறைத்துக் கொள்வதற்காக இப்பிரிவு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. |
| சூழலியல் தரங்களுக்கு . இசைவுறாமை | • சூழலியல் சமநிலை பற்றி கவனித்திற் கொள்ளாமை காரணமாக நிலைப்பாட்டுத் தன்மையில் பிரச்சினைகள் உருவாகின்றது. | • மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள சூழலியல் தரங்களுக்கு பொருந்தக்கூடியவாறு செயற்படுதல்.<br><br>• உள்ளூர் பிரஜைகளின் தலையீட்டுச் செயற்பாடுகளில் தொடர்புபடுவதன் மூலம் மற்றும் அயல் ஆலோசனைக் குழுக்கள் மூலம் தகவல்கள் பரிமாறிக்கொள்ளப்படும். |
| கணனி முறைமையில் வேண்டுமென்றே மேற் கொள்ளப்படுகின்ற சேதங்கள் மற்றும் இடர்கள் | • தொழிற்பாடு தடைப்படல், பயணிகளின் திருப்தியின்மை மற்றும் போட்டித் தன்மைமிக்க சாதகத் தன்மைகள் இல்லாமல் போதல் | • தேவையற்ற தலையீடுகள் மற்றும் வைரஸ் என்பவற்றின் ஊடாக அந்தரங்கமான, உணர்வுபூர்வமான, தொடர்புடைய தகவல்களுக்கு தீங்கிழைக்கக்கூடிய அபாயத்தைத் தடுக்கவென, சக்திவாய்ந்த கணினி அரண் இயக்கமுறை உள்ளது.<br><br>• தேவையற்ற தலையீடுகளை தடுப்பதற்காகவும் மற்றும் அமைப்பு முறை சட்ட விரோத தலையீடு களிலிருந்து பாதுகாப்பதற்கும் மேலதிக வலையமைப்பு உள்நுழைவுக் கட்டுப்பாடு மற்றும் இடர் காப்பு என்பவற்றிற்காக விசேட கவனம் செலுத்தி அதுபற்றி உறுதிப் படுத்தக்கூடிய உயர் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று அமுல் படுத்தப்பட்டுள்ளது. |

| இடர் தன்மைகள் மற்றும் விளக்கங்கள் | விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனிக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் | இடர் பதிலீட்டு மூலோபாயங்கள் |
|---|---|---|
| மூலோபாய அபாயங்கள் | | |
| மோசடிகள், உள்ளக கட்டுப்பாடுகள், மற்றும் நடவடிக்கை முறை நிலைகுலைதல் | • தொழிற்பாடுகள் தடைப்படல், இலாபம் குறைவடைதல் மற்றும் வள சேதம் ஏற்படல் | தரப்படுத்தப்பட்ட நிதி செயற்பாடுகள் மற்றும் ISO சான்றிதழ் பெற்ற தர முகாமைத்துவ முறைமைகளின் கணக்காய்வு என்பவற்றினைப் பயன்படுத்தி பிரபல உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனம் பின்பற்றி வருகின்றது.<br>• உள்ளக கணக்காய்வு மற்றும் தரச்சான்றிதழ் பிரிவினால் மீண்டுவரும் மீளாய்வு மற்றும் பயன்வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாடு என்பன செயற்படுத்தப்படுவதுடன் நிறுவனத்தின் உள்ளகக் குழுக்களினால் நிறுவனத்திற்குள்ளே அடிக்கடி முகாமைத்துவம் பற்றிய கணக்காய்வுகள் மேற் கொள்ளப்படுகின்றது. |
| அமைப்புமுறை செயலிழப்பு | • தொழிற்பாடு பற்றிய இடையூறுகள் | • அமைப்புமுறை செயலிழப்பை தவிர்த்து கட்டுப்படுத்தும் நோக்குடன் முன்கண்காணிப்பு மற்றும் பின்கண்காணிப்பு இயக்கமுறை மற்றும் உணர்த்துதல் தொகுதி பொருத்தப்பட்டுள்ளன. இந்த மத்திய கோளாறு முகனித்தல் தொகுதி நடைமுறை நிலைமை கோளாறுகள் வரைப்பட முறையினூடாக பரந்தளவில் எதிர்கால நிலை குலைவு தொடர்பாக ஏற்படக்கூடிய விபத்துக்களின் எச்சரிக்கைகளை முனைப்பாக காட்டுகின்றது.<br>• இழப்புக்கள் மற்றும் நட்டங்களை கட்டுப் படுத்துவதுடன்,கோளாறுகளை தாமதமின்றி கண்டறிவதற்கு ஏற்றவாறு தீ உணர்த்தும் தொகுதிகள் மற்றும் நிச்சயிக்கப்படாத நிலைமைகளுக்குரிய திட்டங்கள் நிலைநிறுத்தியுள்ளது.<br>• கணினி வலைப்பின்னல் மெய்நிகராக்கல் மற்றும் ஒருங்கிணைப்பு மற்றும் சேமிப்பு மெய்நிகராக்கல் போன்ற நவீன தொழில்நுட்பத்திற்காக விமான நிலையத்தின் தரவு மையத்திற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது.<br>• கட்டுநாயக்க ப.ச.வி. நிலையத்தின் இடர் மீளமைப்பு மையத்தின் (DR) மூலம் தகவல் தொழில்நுட்ப அமைப்பு முறைகளில் ஏற்படக்கூடிய இயந்திர சார் செயலிழப்புக்களை கட்டுப்படுத்துவதன் ஊடாக தற்போது விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியின் தொழில் முயற்சிகளை கொண்டு நடாத்துவதற்காக வாய்புகள் கிடைக்கும். நிகழ்கால( DR) வேலைத்தளத்தின் (DR) பிரதேச மாதிரி கட்டடக்கலை, எதிர்காலத்தில் மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் நிலைநாட்டுவதில் நெகிழ்வுடையதாக அமையும். |

| இடர் தன்மைகள் மற்றும் விளக்கங்கள் | விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனிக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் | இடர் பதிலீட்டு மூலோபாயங்கள் |
|---|---|---|
| மூலோபாய அபாயங்கள் | | |
| கொள்வனவு தொடர்பான இடர்பாடுகள் | • கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பெற்றுக் கொண்ட சேவைகளுக்கான விலை, தரம் மற்றும் வர்த்தகப் பெயர் போட்டித் தன்மை உள்ளிட்ட துறைகளின் எதிர்த் துறைகள் மற்றும் இடைதரகர் நிலைக்கு ஆளாக வேண்டி ஏற்படும். | • அடிக்கடி இடம்பெறக்கூடிய அதிகமான இடர்களுக்கு ஆளாகுவதனை தவிர்க்கும் வகையில் கொள்வனவு கேள்விப்பத்திர நடைமுறைகளை தீவிரமாக கடைபிடித்தல் இடம்பெறும்.<br><br>• எம்முடன் வியாபார செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு வழங்குநர்களிடம் காணப்படும் திறனை நிர்ணயிப்பது எம்மால் நியமிக்கப்படும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் வழங்கப்படுகின்ற விதந்துரைகளைப் போன்று சந்தை ஆய்வுகளினூடாக பெற்றக்கூடிய சுயாதீன சிபாரிசுகளுடன் ஒப்பிட்டு குறுக்கு ஆராய்ச்சிகளை செய்வதாகும். தொடர்ச்சியான வழங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நாம் அவர்களது அமைப்பு முறைத் தொழிற்பாடுகள், மூலாதாரங்கள் மற்றும் சூழலின் ஊடாக அவர்களுக்கும் மற்றும் அவர்களது சுற்றுச் சூழலுக்கும் ஏற்படக்கூடிய தாக்கம் பற்றி பரீட்சிக்கப்படும். அவ்வாறே உரிய காலத்தில் சேவையினை பெற்றுக் கொடுத்தல், இசைவுறல், செழிப்புத் தன்மை மற்றும் வழங்குநர்களின் நிதி சார் நிலைத்திருக்கும் தன்மை என்பனவும் கவனித்திற் கொள்ளப்படும்.<br><br>• எமது எதிர்பார்ப்புக்கள் கேள்விப் பத்திரங்களின் தெளிவாக காட்டப்பட்டுள்ளதுடன் அதிக வெளிப்படமை தன்மையுடன் நிறைவேற்றும் பொருட்டு எம்மால் சட்டப் பிரிவுகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளடக்கப் பட்டுள்ளன.வெளித்தரப்பினருக்கு வழங்குதல், தொடர்ச்சியான வழங்கல், உரிய காலப் பகுதியில் விநியோகித்தல், விற்பனை பின்னரான சேவை என்பன தொடர்பான இடர் தன்மைகளை கட்டுப் படுத்துவதற்காக ஒப்பந்தங்கள் செய்யும் பணி முக்கியத்துவம் பெறுகின்றது.<br><br>• தேவையினை நிவர்த்தி செய்து கொள்ளக்கூடிய நுகர்வோர் மற்றும் வழங்குநர்கள் தகைமை பெற்று உள்ளக மற்றும் வெளி வழங்கல்கள் வலை அமைப்பின் பங்குதாரர் ஒருவராக வழங்குநர்கள் தமது பணியினை மேற்கொள்ளாதிருக்கும் அபாயத்தை காப்பீடு செய்தல் இடர் தன்மை பற்றியும், வங்கி பிணைகளுக்கு எதிராகவும் வெளியிட்ட செயலாற்றுகை பிணைகள் மற்றும் விலை சார்ந்த பிணைகள் என்பவற்றின் நிபந்தனை களிலிருந்து காப்பீடு செய்யப்படும்.<br><br>• வாடிக்கையாளர்களினால் கொடுப்பனவுகள் செலுத்துவது தவறுமிடத்து ஏற்படும் அபாயம் வங்கி பிணைகளை பெற்றுக் கொள்வதன் மூலம் ஈடு செய்யப்படுவதுடன், கொடுப்பனவுகள் செலுத்துவது தவறுமிடத்தில் ஏற்படும் நிதி சார் நட்டங்கள் போதுமானளவு காப்பீடு செய்யப்படும். மது எதிர் பார்ப்புக்கள் கேள்விப் பத்திரங்களின் தெளிவாக காட்டப்பட்டுள்ளதுடன் அதிக வெளிப்படமை தன்மையுடன் நிறைவேற்றும் பொருட்டு எம்மால் சட்டப் பிரிவுகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. |
| பயன்பாட்டுச் சேவைகளுக்கான தடைகள் | • தொழிற்பாடு பற்றிய இடையூறுகள் | • பிரதான நீர் விநியோக அமைப்புமுறையில் பாரியளவில் தங்கியிருப்பதனைக் குறைத்து, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் தொடர்ச்சியான நீர் விநியோக முறையொன்று உறுதிப்படுத்துவதற்கு மேலதிகமாக குழாய் கிணற்று மூலம் நிலத்தடி நீரினை பெற்றுக் கொள்வதனை மேம்படுத்துதல்.<br><br>• மின்சாரத் தடங்களின்போது பயன்பாட்டிற்கு எடுப்பதற்குத் தேவையான கொள்ளவினாலான போதுமானளவு மின் இயற்றிகளை சேவையில் ஈடுபடுத்தல். |

| இடர் தன்மைகள் மற்றும் விளக்கங்கள் | விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனிக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் | இடர் பதிலீட்டு மூலோபாயங்கள் |
|---|---|---|
| தொழிற்பாட்டு இடர்பாடுகள் | | |
| பாதுகாப்பு அபாயங்கள்<br><br>பெயர்களாக குறிப்பிட முடியுமான விமானசேவைகளுடன் இணைந்த இடர்பாடுகளாக கருதப்படுவது உலகளாவிய பயங்கரவாதம், போதைப்பொருள் கடத்தல், அபாயகரமான திரவங்கள் மற்றும் கடின பொருட்கள், வைத்திய சான்றிதழ் பெறாத விலங்குகளும், தாவரங்களும்,கட்டுக்கடங்காத பிரயாணிகள், தடை செய்யப்பட்ட பொருட்கள், ஆகும் | • பயணிகள், விமானங்கள் மற்றும் விமான சேவைகளின் சொத்துக்கள் என்பவற்றுடன் தொடர்புடைய எல்லை சார்ந்த பாதுகாப்புடன் தொடர்புடைய இடர்பாட்டுத் தன்மைகள் | விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியின் விமான நிலைய பாதுகாவலிரினால் சுங்கம், குடிவரவு சுங்கப்பகுதி, குடிவரவு மற்றும் குடியகல்வு, விமானப்படை மற்றும் பொலிஸ் பிரிவு என்பன ப.ச.வி.நி உள்ளக மேற்பார்வை மூலகங்களுடன் இணைந்து செயல்படுகின்ற வி.வி.சே.கம்பனியினது விமானநிலைய பாதுகாப்பு பிரிவினர் மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளை குறைந்த மட்டத்தில் பேணுவதில் தமது கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர். |
| இடர்<br><br>பறவைகளின் எண்ணிக்கைப் போக்கு | • பறவைகள் மூலம் ஏற்படக்கூடிய இடர்கள் மற்றும் அனர்த்தங்கள் என்பன காரணமாக விமானங்களுக்கு பாரிய சேதங்களும் நட்டங்களும் ஏற்படலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் விமான சேவையை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டிய தேவை ஏற்படலாம். | • பறவைகள் தொடர்பான கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவம் என்பன தொடர்பாக மேற் கொள்ளக்கூடிய செயற்பாடுகள் இதில் முக்கியமாக அடங்கும்.<br><br>• கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் பிரிவுடன் இணைந்த பறவையியல் சார்ந்த குழுக்களினால் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மற்றும் மஹிந்த இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரதிபலனாக விளக்கப்பட்டுள்ள சிபாரிசுகள் பறவைகள் தொடர்பான இடர்களில் இருந்து தவிர்த்துக் கொள்வதற்காக அது பற்றி கட்டுப்பாட்டு பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| கொழும்பு விமான தகவல் வலயத்தினுள் ஏற்படக்கூடிய விமானம் சார்ந்த திடீர் அனர்த்தங்கள் | • விமான சேவையானது தமது தொழிற்பாட்டு நடவடிக்கைகளை இடை நிறுத்துவதற்கு தீர்மானிக்கும் பட்சத்தில் அவ்வாறான சந்தர்ப்பங்களில் தொழில்சார் நட்டங்கள் ஏற்படுவதற்கு இடம் உண்டு. | • ஒழுங்குபடுத்தல், கற்கை மற்றும் பயிற்சி<br><br>• பாதுகாப்பு, தனிநபர் அனுமதிப்பத்திரம், விமானத் தொழிற்பாடு, வானூர்தித் தளங்கள், வான் பயண நெருக்கடி கட்டுப்பாட்டு சேவைகள என்பவற்றுடன் தொடர்புடைய அனர்த்தங்கள் பற்றி ஆராய்தல் இதில் அடங்கும். இப்பிரிவானது சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தரங்கள் மற்றும் விதந்துரைக்கப்பட்ட வழக்கங்களுக்கேற்ப<br><br>ஒழுங்குபடுத்தல் (SARP) அதிகாரசபையினால் காலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது. முகாமைத்துவ கலந்துரையாடல்கள் மற்றும் பகுப்பாய்வுகளின் கீழ் அறிமுகம் செய்யப்பட்டுள்ளவாறு நிறுவனத்தினுள் காணப்படுகின்ற பாதுகாப்பு அமைப்பு முறைமை எமது நுழைவின் செயலாற்றுகையை அதிகரிப்பதற்கு பெரிதும் உதவுகின்றது. |
| சுகாதாரம் சார்ந்த இடர்பாடுகள்<br><br>விமானப் பயணங.கள் காரணமாக பரவும் நோய்கள் ஏற்படல். | • தடுப்பு மற்றும் முன் எச்சரிக்கைத் தொழிற்பாடுகள் இல்லாதுவிடின் பயணிகள் சேரிடமாக நாட்டை தவிர்கக்கூடும். | • விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (கம்பனியின்) மருத்துவப் பிரிவான சுகாதார அமைப்பினால் உள்நாட்டு அலுவலகத்துடன் இணைந்து ஒத்துழைப்புடன் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் மற்றும் மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் உத்தரவாதம் மற்றும் விழிப்புணர்த்தும் தொழிற்பாடுகள் என்பன மருத்துவ பதவியணி உச்சளவில் வழங்குகின்றது. |

| இடர் தன்மைகள் மற்றும் விளக்கங்கள் | விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனிக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் | இடர் பதிலீட்டு மூலோபாயங்கள் |
|---|---|---|
| தொழிற்பாட்டு இடர்பாடுகள் | | |
| நிதி சார் இடர்பாடுகள்<br>நாணய மாற்றுத் தளம்பல் சார்ந்த இடர்பாடுகள்<br><br>நிலையான நாணய மாற்று வீதங்களின் பெறுமதி இல்லாத கையாள்வதிலுள்ள நாணய அலகொன்றுக்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொண்டதன் காரணமாக நிதி சார் நிலையற்ற தன்மை பற்றிய இடர் காப்பு வெளிப்படுத்துகின்றது | • வெளிநாட்டு பரிமாற்ற நிதிக் கொடுக்கல் வாங்கல் நாட்டின் பயன்பாட்டிலுள்ள நாணய அலகுடன் பரிமாற்றம் செய்யும் போது இலாபத் தன்மை மற்றும் திரவத்தன்மை பற்றி பாரிய தாக்கங்கள் இடம்பெற வாய்ப்புண்டு. | அரச பிணை முறிகளுக்கான கடன் வீதத்தினை விடவும் உயர் மற்றும் மேலான கைவிடல்கள் காரணமாக வட்டி வீதம் அறவிடுவது தொடர்பாக திரவநிலை இடர்பாடுகள் குறைக்கக்கூடியதாக உள்ளது. |
| மோசமான வட்டி வீத தளம்பல்கள் மற்றும் முதலீட்டு சார்ந்த இடர்பாடுகள் | • வளர்ச்சி குன்றிய வளர்ச்சி வாய்புகள் மற்றும் உயர் வாய்ப்பு செலவுகள் | • நாளாந்த திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்தல்<br><br>• வட்டி வீத இடர்ப்பாட்டினை குறைப்பதனை இலக்காகக் கொண்டு, நீண்டகால மற்றும் குறுகிய கால உண்டியல் முதிர்வு நிரமாலை கொள்வனவு செய்து செய்துள்ளோம்.<br><br>• அவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட இலாபங்களுடன் 100% உத்தரவாத முதலீட்டுக் கருவிகளில் முதலீடு செய்தல் |
| கடன் செலுத்த தவறும் கடன்காரர்களின் இடர்ப்பாடு | • இலாபம் அற்றுப்போதல் மற்றும் செயற்படு மூலதனத்தின் தேவைப்பாடு அதிகரித்தல | • கடன் தொகையினைப் பெற்றுக் கொடுப்பதற்கு அல்லது நீடிப்பதற்கு முன்னர் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியின் மூலம் கொடுப்பனவுகளை தவறுமிடும் அபாயம் தவிர்த்துக் கொள்வதற்காக போதுமானளவு ஆரம்ப விதந்துரைக்கப்பட்ட எல்லைகள் மீது அடிப்படையாக அமைந்த அனைத்து அனைத்து கடன் பட்டோரிடமிருந்து வங்கி பிணைகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.<br><br>• யாதேனும் ஒரு கடன் பட்டோரிடமிருந்து அத் தொகையினை மீளப் பெற்றுக் கொள்வதற்குள்ள தவணை தாண்டிச் செல்லப்படுமாயின் சேவை வழங்கல் பற்றிய ஒப்பந்தங்களை முடிவுறுத்துவதற்கும் அல்லது விமான நிலையத்தின் வர்த்தக தொழிற்பிரிவினை மீள பெற்றுக் கொள்வதற்கு தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகள் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியினால் மேற் கொள்ளப்படுகின்றது.<br><br>• பண்டாரநாயக்க சர்வதேச விமான. நிலையத்தின் நிவாரணதாரர்கள் உழைக்கின்ற புரள்வுக்காக ஆகக் குறைந்த பரிமாணங்களை சிபாரிசு செய்து செயலாற்றுகை பிணை ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்படும். திரவநிலை அபாயம், தண்டனைக் காலம், விடுவிப்பதற்கான ஒழுங்குமுறைகள் என்பன உள்ளடக்கப்படும் வகையில் ஒப்பந்தத்தில் வங்கி சார்ந்த பிணைகள் இணைக்கப்படுகின்றன. |

| இடர் தன்மைகள் மற்றும் விளக்கங்கள் | விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனிக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் | இடர் பதிலீட்டு மூலோபாயங்கள் |
|---|---|---|
| தொழிற்பாட்டு இடர்பாடுகள் | | |
| மனிதவள தொடர்பான அபாய நேர்வு<br><br>பயிற்சி மற்றும் திறன் சேவைகள் இல்லாமல் போதல் மற்றும் அறிவு ஆற்றல் குறைதல் | • பயிற்சியளித்தல் செலவினம் அதிகரித்தல் மற்றும் தொழில்முயற்சியின் நிலையான திட்டமிடல்களுக்கான உள்ள தடங்கள் | • நியாயமான மற்றும் பாரபட்சமில்லாத சம்பள கட்டமைப்பின் மூலம் குறித்த உயர் அதிகாரிகளின் பகுதியினை பணிநிலையில் தொடர்ந்தும் தங்க வைப்பதற்காக தொழில்சார், கல்வி மற்றும் தொழில்நுட்ப தகைமைகள் அடிப்படையில் விஷேட கொடுப்பனவொன்று வழங்கப்படும்.<br><br>• கொடுப்பனவுகளற்ற நிபந்தனையின் அடிப்படையில் மற்றும் இணைந்த கட்டுப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களில் ஈடுபடுவதற்கான மற்றும் வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படும். |
| நன்மதிப்பு பற்றிய இடர்பாடு<br><br>பங்குதாரர்களின் மோசமான செயற்பாடு காரணமாக நன்மதிப்பிற்கு பங்கம் ஏற்படல்<br><br>பாதகமான விளம்பரம் | • நுகர்வோர் அதிருப்தி<br><br>• நிறுவனத்தின் வியாபாரப் பெயர் இழத்தல்<br><br>• போட்டித் தன்மையின் சாதகத் தன்மை இல்லாது போதல்<br><br>• நிலையான தொழில்முயற்சி முகாமைத்துவத்தின் மீது பாதகமான தாக்கங்கள் | • இடர்களை இனங்காணல் மற்றும் அவற்றினைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்காக விசேட பிரிவொன்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படாதவாறு அனைத்துப் பிரிவுகளுக்கும் பொதுவான மற்றும் முன்னுரிமை செயற்பாடாக அமைவதுடன் பாதகமான விளம்பங்களை மேற்கொள்ளல், ஆகிய விடயங்களுக்கு சந்தைப்படுத்தல் பிரிவின் கீழ் முக்கிய பிரிவொன்று நிறுவப்பட்டுள்ளது. |

# நிதி அறிக்கை மற்றும்
# நாட்குறிப்பு



# ஈர்ப்பு மையத்தில்

## நிதி அறிக்கை


| | |
|---|---|
| நிறுவன நடவடிக்கைகள் தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் பணிப்பாளர் அறிக்கை | 61 |
| சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை | 65 |
| கணக்காய்வாளரின் தரப்படுத்தப்பட்ட அபிப்பிராயம் தொடர்பான முகாமைத்துவ தெளிவுபடுத்தல்கள் | 67 |
| விரிவான வருமானக்கூற்று | 68 |
| ஐந்தொகை | 69 |
| பங்கு மாற்றங்கள் தொடர்பான கூற்று | 70 |
| நிதிப்பாய்ச்சல் கூற்று | 71 |
| நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள் | 72 |




## நிதியியல் நாட்குறிப்பேடு

2013 ஆம் வருடத்துக்கான இறுதி பங்கிலாபம் 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் செலுத்தப்பட்டது.

2014 ஆம் வருடத்துக்கான வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் 2015 ஆம் ஆண்டு ஜுன் 25 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது.

முப்பத்து மூன்றாவது வருடாந்த பொதுக்கூட்டம் 2015 ஜுன் 30 ஆந் திகதி நடாத்துவதற்குள்ளது.

# நிறுவனத்தின் அலுவல்கள் தொடர்பில்
# பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

**கம்பெனி தொடர்பாக**

வி.வி.சே கம்பெனி என்பது, இலங்கையில் சிவில் சிமான நிலையங்களை நிர்வகிக்க மற்றும் அபிவிருத்தி செய்ய முழு அதிகாரம் கொண்ட அரச உரித்துடைய நிறுவனமாகும். இங்கு தரப்பட்டுள்ள விவரங்கள் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் தேவைகளுக்கேற்ப சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளின் மூலம் வழிநடாத்தப்பட்டுள்ளது.

**பிரதான செயற்பாடுகள்**

வி.வி.சே.க இன் தொழிற்பாடுகள் சார்ந்த செயற்பாடுகள் இவ்வாண்டின்போது மாற்றமடையாதிருந்துள்ளன. 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ஆந் திகதிய வர்த்தமானி மூலம் 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் வான் போக்குவரத்துச் சட்டத்தால் அளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வி.வி.சே.க ஏக நியதிச்சட்ட சேவை வழங்குநர் என்ற வகையில் கீழுள்ள அதன் பணிகளை தொடர்ச்சியாக நிறைவேற்றுகின்றது

1. பண்டாரநாய சர்வதேச விமானநிலையம் (BIA) மத்தல இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (MIRA) மற்றும் இரத்மலானை விமானநிலையம் (RMA) ஆகியவற்றின் அபிவிருத்தி, தொழிற்பாடுகள் மற்றும் பராமரிப்புகளை மேற்கொள்ளுதல்.
2. மேற்கூறிய விமான தளங்களின் பராமரிப்பு, மீட்பு மற்றும் தீயணைப்பு சேவைகள், விமான சேவையின் பாதுகாப்பு, மற்றும் பேணல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
3. கம்பெனி இலங்கை FIR இற்குள் அனைத்து வானூர்திகளினதும் பிரயாணிகளினதும் கெடுதல இன்மையையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி வான் செலவு, விமான தொடர்பாடல், விமான தொடர் பாடலுக்கான பொறியியல் உதவிகள் அல்லது கண்காணிப்பு மற்றும் ஏனைய தேவைப்பாடுகள் அனைத்தையும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**தொழிற்பாடுகள் தொடர்பாக கணக்காய்வு**

இந்த அறிக்கையில் மீளாய்வுகள் மற்றும் கம்பெனியின் கணக்காய்வுகள் செய்யப்பட்ட நிதி கூற்றுகள் மூலம் கம்பெனியின் சுய நடவடிக்கைகளில் உரிய நிலைமைகள் காட்டப்படுகின்றன.

**நிதிக் கூற்றுகளுக்கு பணிப்பாளர்களின் பொறுப்புடைமை**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் தங்கள் பொறுப்புடைமைகளை பணிப்பாளர்கள் நன்கு உணர்கின்றனர். அதற்கிணங்க ஏற்புடைத்தான அனைத்து கணக்கீட்டு நியமங்களுடனும் இணங்கியொழுகும் வகையில் செம்மையான நிதி சார்ந்த பதிவேடுகள் பேணப்படுவதை உறுதிப்படுத்தும் தங்களின் பொறுப்பை ஏற்றங்கீகரிக்கின்றனர்.

அவ்வாறு தயாரிக்கப்பட்ட பக்கம் 62 தொடக்கம் 100 வரை தரப்பட்டுள்ள நிதிக் கூற்றுகள் மூலம் கம்பெனியின் செயற்பாடுகளின் உண்மையை பிரதிபலிக்கும் என்பதில் பணிப்பாளர்கள் திருப்தி கொள்கின்றனர்.

**கணக்காய்வாளரின் அறிக்கை**

நிதிக் கூற்றுகள் தொடர்பாக கணக்காய்வாரள்களின் அறிக்கை பக்க இலக்கம் 65 தொடக்கம் 66 வரை காட்டப்பட்டுள்ளது.

**முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள்**

2014 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழவில்லை. 2014 ஆம் ஆண்டில் கம்பெனி மூலம் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS/SLFRS) உள்வாங்கப்பட்டதுடன், அது முன்னரான ஆண்டுடன் இணங்குகின்றது.

நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் போது உள்வாங்கப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் 72 தொடக்கம் 82 பக்கங்களில் காட்டப்பட்டுள்ளன.

**நிறுவனத்தின் சமூக பொறுப்பு**

ஆண்டில் கம்பெனியின் நிறுவனத்துடனான சமூக பொறுப்புகளின் பங்களிப்பு ரூபா 25.1 மில்லியன் ஆகும்.

**முறைமைகளின் உள்ளகக் கட்டுப்பாடு**

கமபெனியின் உள்ளளக் கட்டுப்பாட்டுப் பணியின் கண்காணிப்பு, பணிப்பாளர் சபையின் செயல் வரம்பின்கீழ் வருகின்றது. செயற்பாடுகளின் நோக்கெல்லை கம்பெனியின் செயல்நுணுக்கக் குறிக்கோள்களையும் இலக்குகளையும் எய்துதல் தொடர்பில் முறைமைகளின் பயனுறுதியாகும் தன்மைக்கு மேலதிகமாக நிதி சார்ந்ததும் எதிர்மறை விளைவின் முகாதைத்துவம் சார்ந்ததுமான அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்குகின்றது. இது பக்கங்கள் 45 – 49) வரை விவரிக்கப்படும் நல்லாட்சி படிவ சட்டகத்திற்கு அமைவாக மேற்கொள்ளப்படுகிறது.

**வருங்கால அபிவிருத்திகள்**

ப.ச.வி.நி. பிரயாணிகளைக் கையாளும் ஆற்றலை வருடத்திற்கு மேலும் 9 மில்லியனால் அதிகரித்தல். ப.ச.வி. ஓடுபாதையை செப்பனிடுவதற்கும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், ப.ச.வி., ம.இ.வி உள்ளூர் விமான நிலையம் மற்றும் அதனோடிணைந்த ஆதன அபிவிருத்தி, பழுதுபார்த்தல் மீள்திருத்த வசதி, (MRO) அத்துடன் ம.இ.ச.வி.நிலையத்தின் வசதிகளை மேம்படுத்துவதற்கான கருத்திட்டங்களை எதிர்வரும் 5 ஆண்டு காலப்பகுதியில் அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் அது நிச்சயமாக நாட்டின் வான்போக்குவரத்துக் கைத்தொழிலில் வளர்ச்சிக்கு காரணமா'க அமையும்.

**நிறுவனத்தின் வருமானக் கூற்று மற்றும் நிதிதர நிலைகளின் மொத்த விற்பனை வரவு**

கம்பெனி முன்னெப்பொழுதுமில்லாத ஆகக் கூடுதலான மொத்த விற்பனை வரவாகிய ரூபா 13.7 பில்லியனைப் பதிவுசெய்தது. கம்பெனியின் மொத்த விற்பனை வரவு மற்றும் இலாபங்கள் தொடர்பான விரிவான பகுப்பாய்வொன்று நிதி சார்ந்த மீளாய்வின்கீழ் விவரிக்கப்படுகின்றன.

## தொழிற்பாட்டு பெறுபேறுகள்

கம்பெனி மூலம் ரூபா.பி.5.5 வரிக்கு முன்னரான இலாபம் 2014 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன். அது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16% ஆன வளர்ச்சியாகும். எவ்வாறாயினும் பிற்போடப்பட்ட வரிக்காக மேற்கொண்ட ஒதுக்கீடுகளின் அதிகரிப்பு காரணமாக முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் வரிக்கு பின்னரான இலாபம் 7 ரூபா.மில் 3.3 ஆனதுடன் அது 8% அன வீழ்ச்சியாகும்.

கீழே குறிப்பிடப்படும் அட்டவணை (01) மூலம் முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டில் வரிக்கு முன்னரான இலாபத்தில் விரிவான வருமானம் உழைத்துக் கொள்ளப்பட்ட முறை சமர்ப்பிக்கப்படுகிறது.

| | 2014<br>ரூபா<br>மில்லியன் | 2013<br>ரூபா<br>மில்லியன் |
|---|---|---|
| செய்த பின்னர் வரிக்கு முன்னரான இலாபம் | 5,496 | 4,746 |
| கழிக்குக: வரிவிதிப்பு | 2,211 | 1,192 |
| ஆண்டின் வ.பி.இ. | 3,285 | 3,554 |
| ஏனைய விரிவான வருமானம் | - | - |
| ஆயுட்கால தற்கோள்களின் மாற்றங்களிலான இலாபம் | 452 | 171 |
| மொத்த விரிவான வருமானம் | 3,737 | 3,724 |

அட்டவணை 1

**ஒதுக்கங்கள்**

நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்பு ரூபா.மில் 3,225 மற்றும் ஏனைய ஒதுக்கங்கள் ரூபா.மில் 12 இன் அதிகரிப்பு காரணமாக 2013 ஆம் ஆண்டு ரூபா.மில் 7421 ஆக இருந்த ஒதுக்கங்கள், 2014 ஆம் ஆண்: இறுதியில் 10,659 ரூபா.மில் வரை அதிகரித்துள்ளது.

கம்பெனியின் ஒதுக்கங்களின் அசைவு 70 ஆம் பக்கத்தில் நிகரமதிப்பு மாற்றங்கள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டுள்ளத. மாற்றங்கள் பற்றிய கூற்றில் காட்டப்படுகின்றன.பங்குலாபம்

**பங்குலாபம்**

2013 ஆம் ஆண்டில் வரிக்கு பின்னரான இலாபத்தில் ரூபா.மி.500 ஆன இறுதி பங்கிலாபம் பணிப்பாளர்களால் வெளியிடப்பட்டு அது 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 ஆந் திகதி பொது திறைசேரியிடம் செலுத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி நடாத்தப்படவுள்ள பொதுக்கூட்டத்தில், 2014 ஆம் ஆண்டில் வரிக்கு பின்னரான இலாபத்தில் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் பங்கிலாபங்கள் முன்மொழிவதற்குள்ளது.

**மூலதனச் செலவுகள்**

2013 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா.மில் 6,378 உடன் ஒப்பிடுகையில் ஆய்விற்க ஊட்படும் ஆண்டில் கம்பெனியின் மூலதன செலவு ரூபா.மி.1,234 ஆகும். ஆண்டில் ஆதனம், பொறி, உபகரணங்களின் அசைவுகள் நிதி அறிக்கைகளில் குறிப்பு இலக்கம் 12 இல் காட்டப்படுகிறது.

# நிறுவனத்தின் அலுவல்கள் தொடர்பில்
# பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

தொடர்ந்தும்

#### ஐந்தொகை திகதியின் பின்னரான நிகழ்வுகள்

நிதி கூற்றுகளுக்கு சீராக்கல் செய்வதற்கு தேவையான முறையில் எதுவித பௌதிக நிகழ்வுகளும் ஐந்தொகை திகதியின் பின்னர் பதிவாகவில்லை.

#### தொடர்ந்தும் நிறுவனம்

உரிய விசாரணைகள், எதிர்கால வாய்ப்புகள் மற்றும் எதிர்மறை விளைவுகளை எதிர்வுகூறும் செயற்பாட்டின் பின்னர், கம்பெனியின் எதிர்காலத்தின் பொருட்டு தமது தொழிற்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு தேவையான வளங்கள், கடன்கள் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் உள்ளதாக பணிப்பாளர்கள் கருதுகின்றனர். இதன் விளைவாக நிதி சார்ந்த கூற்றுக்கள் அனைத்தும் தொடர்ந்துறும் நிறுவனம் என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

#### எதிர்பாராத நிகழ்வுகளும் ஏற்பாடுகளும்

2014 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் எதிர்பாராத பொறுப்புகளும் மூலதன ஏற்பாடகளும் தொடர்பான தகவல்கள் நிதி அறிக்கைகளின் பக்க இலக்கம் 100 இல் குறிப்பு 27 மற்றும் 28 மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

#### பங்கு மூலதனம்

கமபெனியின் பங்கு மூலதனம் கம்பெனி கணக்குகளில் காணப்படுவதுடன் ஒவ்வொன்றும் ரூபா 100 பெறுமதியுடைய சாதாரண பங்குகளைக் கொண்டுள்ளது. 2014 ஆம் ஆண்டு திசெம்பர் 31இல் உள்ளவாறு பங்குடைமை வருமாறு.

| பங்குகளின் எண் | பெருமதி ரூ. | வைத்திருப்பது. |
|---|---|---|
| 200,000 | 20,000,000 | திறைசேரிக்கான செயலாளர் |
| 1 | 100 | சிவில் வான் போக்குவரத்து அமைச்சு செயலாளர் |
| 1 | 100 | சிவில் வான் போக்குவரத்து பணிப்பாளர் |
| 200,002 | 20,000,200 | |

அட்டவணை 2

#### பணிப்பாளர் சபை மற்றும் பணிப்பாளர் சபை உப குழுக்கள் தொடர்பான விபரங்கள்

#### பணிப்பாளர்

நிதியாண்டின் இறுதியில் பதவி வகித்த 09 பணிப்பாளர்களினதும் பெயர்கள் கீழே தரப்படுகின்றன. ஆண்டில் பணிப்பாளர் சபைக்கு புதிய நியமனங்கள் அல்லது பதவியில் அகற்றல் நிகழவில்லை. தவிசாளரனிதும் (உறுப்புரை 79) மற்றும் நிறைவேற்றுத்துறை சாராத பணிப்பாளர்களினதும் (உறுப்புரை 82) நியமனம் வி.வி.சே.க இன் அமைப்பு அகவிதிகளின் அடைப்புக் குறிப்புகளில் காட்டப்பட்டுள்ள நியதிகளின்படி செய்யப்படுகின்றது.

| | |
|---|---|
| திரு. பிரசன்ன ஜேவிக்ரமசூரிய | - தவிசாளர் |
| திரு. கமால் எஸ்ரத்வத்த | - துணைத் தவிசாளர் |
| திரு. யோஹன்ன ஜயரத்ன | - நிறைவேற்றுப் பணிப்பாளர், |
| திரு. கோசல ஆர். விக்ரமநாயக | - பணிப்பாளர், |
| திரு. ஆனந்த குணதிலக | - பணிப்பாளர் |
| திரு. யோக பெரேரா | - பணிப்பாளர் |
| செல்வி ஷானிக்காகொபல்லாவ | - பணிப்பாளர் |
| திரு. ஜே ஆர் யூ ட சில்வா | - பணிப்பாளர் |
| திரு. எஸ்.பி. சேனாரத்ன | - பணிப்பாளர் |
| (கலாநிதி ட எஸ். ஜயவீர | - பணிப்பாளர்) |

2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதியில் புதிய பணிப்பாளர் சபை நியமனம் செய்யப்பட்டது.

(புதிய பணிப்பாளர் சபையின் பெயர்களும் புகைப்படங்களும் பக்க இலக்கம் 7 மற்றும் 08 இல் காட்டப்பட்டுள்ளது.

#### பணிப்பாளர் சபைக் குழுக்கள்

கட்டுப்பாடுக்கு பயனுள்ள வழிகாட்டல்களை வழங்குவதற்காக பணிப்பாளர் சபையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்படுகின்றது. இதில் சபையால் நியமிக்கப்படும் நிறைவேற்றுத்துறை சாராத மூன்று பணிப்பாளர்களை கொண்டமைகின்றது. பெயராக குறிப்பிட்டால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் தலைவராக பணியாற்றிய திரு.எஸ்.பீ. சேனாரத்ன, திரு.ஜே.ஆர். யு.த சில்வா மற்றும் திரு. யோகா பெரேரா ஆகியோர் அடங்குவர். சிவில் வான்போக்குவரத்து அமைச்சின் பிரதம கணக்காளரும் ஆண்டில் இக் குழுவில் ஏனைய உறுப்பினராக பணியாற்றினார்.

ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழவின் அழைப்பாளர் மற்றும் செயலாளராக உள்ளக கணக்காய்வு மற்றும் தர நியம தலைவர் பணியாற்றினார்.

**பங்குகள் அல்லது கடனீட்டுப்பத்திரங்கள் சார்ந்து பணிப்பாளர்களின் கொடுக்கல்வாங்கல் தொடர்பான கூற்று**

எந்தவொரு பணிப்பாளராலும் பங்குகள் அல்லது கடனீட்டுப்பத்திரங்கள் தொடர்பான உரித்துகள் கையாளப்படவில்லை

**உடன்படிக்கைகள் மற்றும் உத்தேச உடன்படிக்கைகள் தொடர்பாக பணிப்பாளர்களின் உரித்துகள்**

ஆண்டின்பொழுது அல்லது 2014 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் கம்பெனியின் தொழிலுடன் தொடர்புடைய உடன்படிக்கைகள் அல்லது உத்தேச உடன்படிக்கைகள் தொடர்பாக எந்தவொரு பணிப்பாளரும் நேரடியாகவோ நேரடியின்றியோ உரித்துகள் உடயவராக இருக்கவில்லை.

**பணிப்பாளர்களின் ஊதியமும் ஏனைய அனுகூலங்களும்**

இவ்வாண்டின் பொழுது ஊதியமாக மூன்று நிறைவேற்றுத் துறை பணிப்பாளர்களுக்கும், நிறைவேற்றுத்துறை சாராத ஒரு பணிப்பாளருக்கும் (உறுப்புரையில் 77 ஆவது பிரிவு) 22.2 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டது. இதில் அனைத்து நிதிசார்ந்த அனுகூலங்களான சம்பளம், ஊ.சே.நி. ஊ.ந.நி, பொழுதுபோக்கு செலவீடு, தொலைபேசி, விடுமுறை மற்றும் ஏனைய படிகளும் மிகையூதியமும் என்பன அடங்கும்.

நிறைவேற்றுத்துறை சாராத ஏனைய பணிப்பாளர்களுக்கு பிரயாணச் செலவுகள், சபைக் கூட்டங்களுக்கு பணிப்பாளர் கட்டணங்கள் என்ற வகையில் ரூபா 461,333/= செலுத்தப்பட்டது.

**சமூக மற்றும் சூழல் சார்ந்த பொறுப்புடைமை**

கம்பெனி ஒழுக்கநெறி மற்றும் சூழல் நேயமுடைய வகையில் தொழிற்படுவதற்குத் தன்னை அர்ப்பணித்துள்ளது. இந்த அணுகுமுறைக்கும் சமுூதய ஈடுபாட்டிற்கும், நன்கொடைகளுக்கும் கம்பெனியின் கடப்பாடுகள் பற்றிய விவரங்கள் நிலைபேறான தன்மை சார்ந்த முகைாமைத்துறை என்ற பகுதியில் காணப்படுகின்றது.

**நல்லாட்சி**

முக்கியமான எல்லா பங்காளர்களுடனும் நீண்டகால உறவை அபிவிருத்தி செய்வதற்கு கமபெனியின் பொதுப்படையான நெறியாள்கை நடைமுறையின் பயனுறுதியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்புடைமையை பணிப்பாளர்கள் கடைப்பிடித்து வருகின்றனர்.

**நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்**

அரசாங்கத்திற்கும் ஏனைய ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களுக்கும் ஊழியர்கள் தொடர்பிலும் எல்லா நியதிச்சட்டக் கொடுப்பனவுகளும் உரிய காலத்தில் செலுத்தப்பட்டுள்ளது என பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

**கணக்காய்வாளர்கள்**

பட்டயக் கணக்காளர்களான மெஸ்சர்ஸ் பிரின்ஸ் வோட்டர் ஹவுஸ்கூப்பர்ஸ் நிறுவனம் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தில் 158ஆம் பிரிவின் சட்ட திட்டங்கள் பிரகாரம் நியமனம் செய்யப்பட்டது. நடப்பாண்டுக்காக கணக்காய்வு கட்டணம் ரூபா 536,535/= (2013 ரூபா.1,395,775) ஆகும். கணக்காய்வாளர்களுக்கு கணக்காய்வல்லாத சேவை கட்டணமாக ஆண்டுக்காக எதுவித பணமும் செலுத்தப்படவில்லை.

**ஆண்டுப் பொதுக் கூட்டம்**

ஆண்டுப் பொதுக் கூட்டம் 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் தகிதி பி.ப. 3.00 மணிக்கு வி.வி.சே.க இல் பணிப்பாளர் சபை மண்டபத்தில் நடைபெறும்.

**நன்றி நவிலல்**

2015 ஆம் ஆண்டில் முதலாம் காலாண்டில் கடமைகளை முடிவுறுத்திய முன்னாள் பணிப்பாளர் சபையால் மேற்கொண்ட பரிந்துரைகள் மற்றும் வழிகாட்டல் தொடர்பில் பணிப்பாளர் சபை தனது பாராட்டுக்களைத் தெவித்துக்கொள்கின்றது.

பணிப்பாளர் சபை முகாமைத்துவத்திடம், அவர்களின் ஊக்குவிப்புகள், தொழில்சார் தன்மை மற்றும் விமர்சனங்கள் என்பவற்றின் ஊடாக கம்பெனியின் பாரிய வளர்ச்சிக்கு உதவிய அனைவருக்கும் தமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது.

அத்துடன் கம்பெனியின் நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு தொடர்ச்சியாக உதவிய இலங்கை அரசுக்கும், சிவில் வான் போக்குவரத்து அமைச்சுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் அதன் நன்றியைத் உரித்தாக்க விரும்புகின்றது.

மேலும் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவன ஊழியாகளின் அர்ப்பணிப்பு, ஒருமைப்பாடு மற்றும் கடின உழைப்பிற்கு நன்றி கூறவேுண்டும்.

எமது பதவியினரே எமது மிகப்பெறுமதியான சொத்தாக நாம் கருதுகின்றோம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திரு. ஜீ.எச் அனந்த விமலசேன
தவிசாளர்

2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

pwc

வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் பங்குதாரர்களுக்கான

### நிதிக் கூற்றின் மீதான அறிக்கை

1 2014 டிசம்பர் மாதம் 31ஆம் திகதியன்று நிலை பற்றிய கூற்று மற்றும் அன்றைய தினத்துடன் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்றும் குறிப்புக்களும் பக்க இலக்கம் 72 முதல் 100 வரையுள்ள விசேட கணக்கீட்டு கொள்கை சுருக்கங்கள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல்கள் ஆகிய தகவல்களை உள்ளடக்கிய வ.்.ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீலங்கா) கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் எம்மால் கணக்காய்வு செய்யப்பட்டன.

### நிதிக் கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

2 இலங்கை நியமங்களுக்கு ஏற்ப உண்மையான மற்றும் நியாயமான தன்மையினைக் கொண்டதான நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் தவறுகள், முறைகேடுகள் என்பன காரணமாக ஏற்படக்கூடிய வித்தியாசங்கள் அற்றவாறு நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக உள்ளக நிர்வாக முறையினை நிர்ணயித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

3 எமது பொறுப்புக்களாக அமைவது நாம் செய்த கணக்காய்வினை அடிப்படையாகக் கொண்டு ஒரு அபிப்பிராயத்தை வெளியிடுவதாகும். எம்மால், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்றவாறு கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அக்கோட்பாடுகளுக்கு ஏற்ப அக்கணக்காய்வினை திட்டமிடுவதன் மூலம், நிதிக் கூற்றுக்கள், தொகை மதிப்புக்கள் என்பவற்றில் வித்தியாசங்கள் ஏற்படாதவாறு உள்ளனவா என்பது பற்றி நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்று பெற்றுக் கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களின் பெறுமதிகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் என்பன பற்றிய கணக்காய்வு சான்றாதாரங்களை பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு நடைமுறை ஒழுங்குவிதிகள் தொடர்புபடுத்தப்படும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் எண்ணிக்கையில் பிழைகள் ஏற்படுவதற்குரிய வாய்ப்பு பற்றிய மதிப்பீட்டினை உள்ளடக்கி, கணக்காய்வு நிர்ணயத்தின் மீது தேர்ந்தெடுக்கப்பட்ட நடைமுறை ஒழுங்குவிதிகளில் தங்கியிருக்கும். கணக்காய்வாளர் அவ்வாறான கடினத்தன்மை கொண்ட மதிப்பீடுகளின் போது நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கும் நியாயமான முறையில் அவற்றினை சமர்ப்பிப்பதற்கும் ஏற்றவாறு உள்ளக நிருவாகம் தேவைக்கேற்ற கணக்காய்வு நடைமுறை ஒழுங்குவிதிகள் என்பவற்றினை திட்டமிடுவதற்கு கவனம் செலுத்துகின்றபோதிலும் அது நிறுவகத்தின் உள்ளக நிருவாக செயற்பாடு பற்றிய அபிப்பிராயத்தை வெளியிடுவதற்காக பயன்படுத்தப்பட மாட்டாது. பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் அதன் சுருக்கம் என்பவற்றினை மதிப்பீடு செய்வதும் இக்கணக்காய்வில் உள்ளடக்கப்படும்.

நாம் பெற்றுக் கொண்ட கணக்காய்வு சான்றாதாரங்கள், எமது தரக் கணிப்பீடு தொடர்பான அபிப்பிராயத்தை வழங்குவதற்கு போதிய அளவில் இருக்கின்றன என்பது பற்றியும் பொருத்தமானதாக உள்ளன என்பது பற்றியும் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

## சுயாதீன கணக்காய்வாளரின்

# அறிக்கை

**அபிப்பிராயத்தை கணிப்பீடு செய்யும் அடிப்படை**

4 மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் 2014 டிசம்பர் மாதம் 31ஆம் திகதியிற்குரிய நிதி நிலை பற்றிய கூற்றிலே செலவினங்கள் மற்றும் உபகரணங்களின் கொள்விலை என்பன 26,761,070,163 ஆகும். 2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மத்தளை சர்வதேச விமான நிலையத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், 2015 சனவரி மாதத்தில் 1218 பயணிகள் இதனூடாக பயணித்துள்ளதுடன் அத்தொகையானது 2015 மே மாதம் ஆகும்போது 196 ஆக குறைவடைந்துள்ளது. விமானங்களின் போக்குவரத்தானது, தனியாதொரு விமான சேவைக்கு மாத்திரம் தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நாம் இதனை இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 36 இன் பிரகாரம் சேதம் பற்றிய மதிப்பீடு ஒன்றாக கருதுவதற்கான காரணம் இவ்விமான நிலையத்தின் எதிர்கால தொழிற்பாடுகள் எந்த அளவிலும் எதிர்பார்க்க முடியாத காரணத்தினாலாகும். இவ்வறிக்கை தினத்தன்று மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் பொருளாதார செயலாற்றுகையானது வீழ்ச்சியடைந்துள்ளதனை காணக்கூடியதாக உள்ளது. எனினும், ஒதுக்கிய நிதி பிறப்பிப்பு அலகுகளை அடிப்படையாகக் கொண்ட நட்டம் பற்றிய கணிப்பீடு ஒன்று உள்ளனவா என்பது தொடர்பாக தேடிப் பார்ப்பதற்கு முகாமைத்துவத்தினால் நட்ட மதிப்பீடுகள் பற்றிய தகவல்கள் செய்யப்படவில்லை. 2014 டிசம்பர் மாதம் 31ஆம் திகதியன்று நிதி நிலை பற்றிய கூற்றினை தயாரிப்பதற்கு சொத்துக்களின் சேதாரங்களின் பெறுமதியினை பதிவளிக்க வேண்டுமா என்பதை தீர்மானிப்பதற்கு அது பற்றிய தகவல்கள் காணப்படவில்லை.

சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியினை கணிப்பிடுவதற்கு தேவையான தகவல்கள் இல்லாமையினால் எமக்கு 2014 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியில் திருப்தியடைய முடியாதுள்ளது.

**மதிப்பீடு செய்யப்பட்ட அபிப்பிராயம்**

5 எமது அபிப்பிராயத்தின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை பின்வரும் பந்திக்குரிய தாக்கங்கள் தவிர்ந்த நிதிக் கூற்றுக்களின் 2014 டிசம்பர் 31 ஆம் திகதியன்று கம்பனியின் நிதி நிலை மற்றும் அன்றைய தினத்துடன் முடிவுற்ற ஆண்டுக்கான அதன் நிதி செயற்பாடுகள் மற்றும் நிதிப் பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப உண்மையானவாறும் நியாயமான முறையிலும் தரவுகளைக் காட்டி நிற்கின்றது.

**விடயம் ஒன்றினை வலியுறுத்தல்**

6 மூலதனச் செலவினங்களுக்காக அரசாங்கக் கொடைகள் (செலவினத் தலைப்பு நிதியம்), நிறுத்தி வைத்த வருமான நிதியம் மற்றும் கம்பனியின் நிதி கூற்றுக்களை ஒன்று இணைக்கும் அடிப்படையினை விபரிக்கும் குறிப்புக்கள் இலக்கம் 2:1:1 இன் பக்கம் நாம் கவனம் செலுத்த வைக்கின்றோம். அது பற்றி, எமது அபிப்பிராயமானது கணிப்பீடு செய்யப்பட்ட ஒன்றல்ல.

**ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் மீதான அறிக்கை**

7 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 151(2) பிரிவின் தேவைகளுக்கு இந்நிதிக்கூற்றுக்கள் இசைவுறுகின்றன.

Pricewaterhouse Coopers

பட்டயக் கணக்காளர்கள்
2015 ஜுன் மாதம் 26ஆம் திகதி
கொழும்பில்

*PricewaterhouseCoopers, P. O. Box 918, 100 Braybrooke Place, Colombo 2, Sri Lanka*
*T: +94 (11) 771 9838, 471 9838, F: +94 (11) 230 3197, www.pwc.com/lk*

**Partners** Y. Kanagasabai FCA, D.T.S.H. Mudalige FCA, C.S. Manoharan FCA, N.R. Gunasekera FCA, S. Gajendran FCA, Ms. S. Hadgie FCA, Ms. S. Perera ACA, T.U. Jayasinghe ACA

PricewaterhouseCoopers is a member firm of PricewaterhouseCoopers International Limited, each member firm of which is a separate legal entity.

# கணக்காய்வாளரின் தகைமைப்படுத்தப்பட்ட கருத்துரை

# தொடர்பாக முகாமைத்துவ தெளிவுப்படுத்தல்கள்

1. கணக்காய்வாளர்களின் முனைப்பாக காட்டுவதற்கு / தெளிவுபடுத்துவதற்கு அமைய, ம.இ.ச.வி. இன் 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் பயணிகள் நகர்வு 1218 ஆனதுடன், 2015 சனவரி மற்றும் பெப்ருவரி மாதங்களில் பயணிகள் நகர்வுகள் முறையே 2620 மற்றும் 1307 ஆக அமைந்தது. எவ்வாறாயினும் ஸ்ரீலங்கன் விமானசேவைகள் கம்பனியின் கொள்கை வாரியான முடிவுக்கமைய 2015 பெப்ருவரி மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தும் வகையில் அவர்களின் விமானப் பயணங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதன் பெறுபேறாக 2015 மார்ச் மாதத்திலிருந்து பயணிகள் நகர்வில் குறைவு காணப்பட்டது. எமது அபிப்பிராயத்தின்படி, 03 மாதம் போன்ற குறுகிய காலத்துக்குள் (2015 மார்ச் இலிருந்து 2015 மே மாதம் வரை) இவ்வாறன பருமனில் மிகப் பெரிய கருத்திட்டத்தில் மதிப்பிடுவதற்காக போதுமானதாக இல்லை.

2. வி.வி.சே.கம்பனியின் முகாமைத்துவம் மற்றும் பணிப்பாளர் சபை கணக்காய்வாளருக்கு விமானநிலைய பொருத்தமான பாவனைக்காக உரிய முன்மொழிவுகள் மற்றும் திட்டமிடல்கள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் கருத்துரையானது விமானநிலையத்தின் குறுகிய, ஊடக மற்றும் நீண்டகால செயல்ரீதியான வளர்ச்சி ஏற்படுமென்பதாகும்.

3. சர்வதேச விமானநிலையங்கள் நிர்மாணித்தல் நீண்டகால கருத்திட்டகளாக இருப்பதுடன், இலாபங்களை உழைப்பதற்காக பொதுவாக வருட 15 இலிருந்து 20 வரை அல்லது காலம் தேவைப்படுகின்றது.

4. இக் கருத்திட்டம் குறுகிய அல்லது மத்திய கால கருத்திட்டங்களாக இல்லாதிருப்பதுடன், நீண்டகால கருத்திட்டமாகும். அது தனிப்பட்ட குறுகியகால வர்த்த கருத்திட்டமாக பெறுமதி சேர்ப்பது பெருத்தமானதாக இல்லை.

பீ. எச். ஆனந்த விமலசேன
தவிசாளர்
பணிப்பாளர் சபை தொடர்பாக
ஜுன் 29, 2015

# விரிவான
# வருமானக்கூற்று

| திசெம்பர் 31 முடிவடைந்த வருடத்துக்கான | குறிப்பு | 2014<br>ரூ. | 2013<br>ரூ. |
|---|---|---|---|
| வருமானங்கள் | 5 | **13,612,558,544** | 12,219,410,803 |
| ஏனைய வருமானங்கள் | 6 | **129,642,459** | (109,727,814) |
| | | **13,742,201,003** | 12,109,682,988 |
| நிர்வாக மற்றும் சந்தைப்படுத்தும் செலவுகள் | 7 | **(9,421,541,976)** | (9,218,845,691) |
| **செயற்படு இலாபம்** | | **4,320,659,027** | 2,890,837,297 |
| தேறிய நிதி (செலவு)/வருமானம் | 8 | **1,175,370,739** | 1,854,833,363 |
| **வரிக்கு முன் இலாபம்** | | **5,496,029,766** | 4,745,670,660 |
| வரிச் செலவுகள் | 9 | **(2,210,864,900)** | (1,192,120,539) |
| **வருடத்தின் இலாபம்** | | **3,285,164,866** | 3,553,550,120 |
| பங்கொன்றின் அடிப்படை சம்பாத்தியம் | 10 | **16,426** | 17,768 |
| **வேறு விரிவான வருமானங்கள்** | | | |
| ஓய்வூதிய பணிக்கொடை வகையின் எடுகோளான மாற்றத்தினால் ஏற்பட்ட நன்மைகள் | 23 | **451,965,325** | 170,789,838 |
| **மொத்த ஏனைய விரிவான வருமானங்கள்** | | **451,965,325** | 170,789,838 |
| **வருடத்துக்கான மொத்த விரிவான வருமானம்** | | **3,737,130,191** | 3,724,339,958 |

பக்கம் 72 தொடக்கம் 100 வரையிலான கணக்கியற் கொள்கைகளும், குறிப்புக்களும்

நிதி அறிக்கைகளின் முக்கிய பகுதியாகக் கருதப்படும்.

# ஐந்தொகை

| திசெம்பர் 31 முடிவடைந்த வருடத்துக்கான | குறிப்பு | 2014 ரூ. | 2013 ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| ஆதனம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 12 | **41,080,043,445** | 43,841,742,259 |
| தொட்டுணர முடியாத சொத்துக்கள் | 13 | **27,251,433** | 22,331,676 |
| பிற்போடப்பட்ட வரிச்சொத்துகள் | 14 | **707,123,424** | 729,040,167 |
| கடன்பத்திர முதலீடு | 15 | **2,550,000,000** | 2,550,000,000 |
| கம்பனி அலுவலர்களுக்கான கடன்கள் | 17 | **76,573,944** | 49,486,091 |
| | | **44,440,992,246** | 47,192,600,193 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| சரக்கிருப்பு | 16 | **265,250,647** | 367,704,670 |
| வர்த்தக மற்றும் பிற வரவுகள் | 17 | **3,805,846,607** | 4,288,154,564 |
| பெறத்தக்க வருமான வரிகள் | 18 | **643,041,022** | 392,812,336 |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடுகள் / முறிகள் மீள் உடன்படிக்கைகள் குறுகிய கால வங்கி வைப்புக்கள் | 19 | **9,639,936,284** | 3,641,320,794 |
| வங்கி நிலுவைகள் மற்றும் காசும் காசு சார்ந்தவையும் | 19 | **597,887,449** | 389,358,998 |
| | | **14,951,962,009** | 9,079,351,362 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **59,392,954,255** | 56,271,951,555 |
| பங்குகளும் பொறுப்புகளும் | | | |
| மூலதன ஒதுக்கங்கள் | | | |
| காட்டப்பட்ட மூலதனம் | 20 | **20,000,200** | 20,000,200 |
| ஒதுக்கீடுகள் | 21 | **1,004,726,769** | 992,726,769 |
| பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் | | **9,653,787,232** | 6,428,657,042 |
| | | **10,678,514,201** | 7,441,384,011 |
| **நடைமுறையற்ற பொறுப்புகள் அல்லாதவை** | | | |
| கடன் வாங்குதல்கள் | 22 | **33,731,461,267** | 36,569,711,285 |
| ஓய்வூதிய நன்மைப் பொறுப்பு | 23 | **2,255,951,234** | 2,336,496,517 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | 14 | **3,630,708,665** | 1,258,999,351 |
| பிற்போடப்பட்ட அரச மானியங்கள் | 24 | **1,436,666,249** | 1,607,202,584 |
| | | **41,054,787,415** | 41,772,409,737 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 25 | **5,471,460,267** | 6,310,379,613 |
| கடன் வாங்குதல் | 22 | **2,188,192,372** | 747,778,194 |
| | | **7,659,652,639** | 7,058,157,807 |
| மொத்த பொறுப்புக்கள் | | **48,714,440,054** | 48,830,567,544 |
| **மொத்தப் பங்குகளும் பொறுப்புகளும்** | | **59,392,954,255** | 56,271,951,555 |

இந்த நிதி அறிக்கைகள் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைகளோடு இணங்கும் வகையில் அமைந்துள்ளன.

..........................................
நிதித்துறை தலைவர்

இந்தக் கணக்கறிக்கைகள் தயாரிக்கப்படுவதற்கும் சமர்ப்பிக்கப்படுவதற்கும் பணிப்பாளர் சபையே பொறுப்பானது. 2015 யூன் மாதம் 25 ம் திகதி சபையின் சார்பில் கைச்சாத்திட்டவர்கள்.

...............................
தவிசாளர்

....................................
நிறைவேற்று பணிப்பாளர்

2015 ஜுன் 25 ஆந் திகதி பணிப்பாளர் சபை சார்பாக கைச்சாத்திடப்பட்டது.
பக்கம் 72 தொடக்கம் 100 வரையிலான கணக்கியற் கொள்கைகளும், குறிப்புகளும் நிதி அறிக்கைகளின் முக்கிய பகுதியாகக் கருதப்படும். சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை பக்கம் 65-66 தரப்பட்டுள்ளது.

# பங்கு மாற்றங்களின் அறிக்கை

| | குறிப்பு | காட்டப்பட்ட மூலதனம் | ஏனைய ஒதுக்கீடுகள் | பிடித்துவைக்கப்பட்ட ஆதாயம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **2013 சனவரி 01இல் உள்ளவாறான மீதி** | | 20,000,200 | 892,726,769 | 3,304,317,084 | 4,217,044,053 |
| செலுத்திய பங்கிலாபம் | 11 | - | - | (500,000,000) | (500,000,000) |
| ஆண்டிற்கான இலாபம் | | - | - | 3,553,550,120 | 3,553,550,120 |
| ஒதுக்கக் கணக்குக்கு மாற்றம் செய்தல் | | - | 100,000,000 | (100,000,000) | - |
| ஏனைய விரிவான வருமானங்கள் | | - | - | 170,789,838 | 170,789,838 |
| **2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான மீதி** | | 20,000,200 | 992,726,769 | 6,428,657,042 | 7,441,384,011 |
| **2014 சனவரி 01இல் உள்ளவாறான மீதி** | | **20,000,200** | **992,726,769** | **6,428,657,042** | **7,441,384,011** |
| செலுத்திய பங்கிலாபம் | 11 | **-** | **-** | **(500,000,000)** | **(500,000,000)** |
| ஆண்டிற்கான இலாபம் | | **-** | **-** | **3,285,164,867** | **3,285,164,867** |
| ஒதுக்கக் கணக்குக்கு மாற்றம் செய்தல் | | **-** | **12,000,000** | **(12,000,000)** | **-** |
| ஏனைய விரிவான வருமானங்கள் | | **-** | **-** | **451,965,325** | **451,965,325** |
| **2014 டிசம்பர் 31இல் உள்ளவாறான மீதி** | | **20,000,200** | **1,004,726,769** | **9,653,787,233** | **10,678,514,202** |

பக்கம் 72 தொடக்கம் 100 வரையிலான கணக்கியற் கொள்கைகளும், குறிப்புகளும் நிதி அறிக்கைகளின் முக்கிய பகுதியாகக் கருதப்படும். சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை பக்கம் 65-66 தரப்பட்டுள்ளது.

# காசுப்பாய்ச்சல் அறிக்கை

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம் | குறிப்பு | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|---|
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த/(ஈடுபடுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்கள் | | | |
| வருமான வரிகளுக்கு முந்திய தேறிய இலாபம் | | **5,496,029,766** | 4,745,670,660 |
| சீராக்கல்கள் : | | | |
| தேய்மானம் | 12 | **2,624,562,243** | 1,745,934,943 |
| கடன் தீர்ப்பு | 13 | **8,116,711** | 5,487,647 |
| பரிமாற்றம் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | 22 | **(1,164,566,849)** | (1,710,553,888) |
| முதலீடுகளிலிருந்து வருமானம் | 8 | **(698,867,771)** | (704,800,969) |
| பிற்போடப்பட்ட அரச மானியங்களின் கடன் தீர்ப்பு | | **(2,284,013)** | (1,504,067) |
| ஆதனம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் விற்பனை மூலம் கிடைத்த (இலாபம்) நட்டம் புதிவளிப்பு | 12 | **207,062,809** | Nil |
| அரசின் பிற்போடப்பட்ட மானியங்கள் கடன்தீர்ப்பு | 24 | **(150,918,051)** | 208,702,010 |
| நிதிச்செலவுகள் | 8 | **700,144,990** | 573,573,582 |
| பணிக்கொடை நலனோபாய திட்டங்களுக்கான ஏற்பாடு | 23 | **398,155,879** | 427,394,184 |
| செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம் | | **7,417,435,714** | 5,289,904,103 |
| சரக்கிருப்பு (அதிகரிப்பு) / வீழ்ச்சி | | **102,454,024** | (92,793,920) |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகள் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | | **482,307,957** | (1,539,200,432) |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அதிகரிப்பு / (வீழ்ச்சி) | | **311,226,879** | 4,029,287,464 |
| தொழிற்பாடுகள் மூலமானநிதி | | **8,313,424,573** | 7,687,197,216 |
| தீர்மானித்த நலனோக்குத் திட்ட கொடுப்பனவுச் செலவுகள் | 23 | **(26,735,837)** | (80,851,587) |
| செலுத்திய வட்டி | 8 | **(700,144,990)** | (573,573,582) |
| செலுத்திய வரிகள் | 18 | **(67,467,529)** | (1,183,822,320) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோற்றிய தேறிய காசு பாய்ச்சல் | | **7,519,076,218** | 5,848,949,727 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த நிதிப்பாய்ச்சல்கள்** | | | |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த நிதிப்பாய்ச்சல் | 12 | **(1,219,827,099)** | (6,350,563,955) |
| ஆதன, இயந்திர மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் | 13 | **(14,053,964)** | (27,819,323) |
| கற்புலானாச் சொத்துக்களை கொள்வனவு செய்தல் | 15 | **nil** | (250,000,000) |
| கடன்பத்திர முதலீட்டு | | **3,056,143** | 2,270,297 |
| கிடைத்த வட்டி | 8 | **698,867,771** | 704,800,969 |
| ஊழியர்களுக்கான கடன் வழங்கீடு | | **(98,366,407)** | (59,444,451) |
| ஊழியர் கடன் கிடைப்பனவுகள் | | **71,278,553** | 48,566,363 |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலில் ஈடுபடுத்தப்பட்ட தேறிய நிதிப்பாய்ச்சல் | | **(559,045,002)** | (5,932,190,100) |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த/ நிதிப்பாய்ச்சல்கள் | | | |
| செலுத்திய பங்கிலாபம் | 11 | **(500,000,000)** | (500,000,000) |
| கடன் கிடைப்பனவுகள் | 22 | **530,994,851** | 1,320,557,033 |
| கடன் செலுத்துகைகள் | 22 | **(764,263,842)** | (1,131,712,410) |
| வருடத்துக்குள் திறைசேரியிற்குச் செலுத்தப்பட்ட | | **(19,618,285)** | Nil |
| நிதித் தொழிற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்ட தேறிய நிதிப்பாய்ச்சல | | **(752,887,276)** | (311,155,377) |
| காசும் காசு சார்ந்தவைகளின் தேறிய அதிகரிப்பு | | **6,207,143,941** | (394,395,750) |
| வருட ஆரம்ப காசும் காசு சார்ந்தவையும் | 19 | **4,030,679,792** | 4,425,075,543 |
| வருட இறுதியில் காசும் காசு சார்ந்தவையும் | 19 | **10,237,823,732** | 4,030,679,792 |

பக்கம் 72 தொடக்கம் 100 வரையிலான கணக்கியற் கொள்கைகளும், குறிப்புகளும் நிதி அறிக்கைகளின் முக்கிய பகுதியாகக் கருதப்படும். சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை பக்கம் 65-66 தரப்பட்டுள்ளது.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

**2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**

**1. கூட்டுயாக்க தகவல்கள்**

**1.1 பொதுவான காரணங்கள்**

வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி இலங்கையில் நிலவரமாக குடியிருப்புநிலையுடைய வரையறுக்கப்பட்ட கம்பனியாக கூட்டிணைக்கப ்பட்டுள்ளது. கம்பனியின் பதிவுபெற்ற அலுவலகம் கட்டுநாயக்கவிலுள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் அமைந்துள்ளது.

**1.2 முக்கிய தொழிற்பாடுகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை**

சர்வதேச ரீதியில் ஏறறுக்கொள்ளப்பட்ட தரங்களுக்கு இயைவாக விமான நிலையங்களை முகாமைத்துவம் செய்தல், இலங்கைக்கு வரும் மற்றும் இலங்கை விமானப்பயண தகவல்கள் பிராந்தியத்தினுாடாக (FIR) பறக்கும் விமானங்களுக்கு வானோடல் சேவைகளை வழங்குதல், விமான நிலையங்களின் பாவனையாளருக்கென ஏனைய வசதிகளை வழங்குதல் போன்றவை வருடத்துக்குள் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகளாகும்.

**1.3 பகிரங்கப்படுத்துவதற்காக சட்டபூர்வமான அதிகாரம் வழங்கிய திகதி**

2014 திசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் நிதி அறிக்கைகளை பகிரங்கப்படுத்துவதற்காக பணிப்பாளர் சபை முடிவிற்கமைய 2015 ஜுன் 25 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**2. தனிச்சிறப்பு வாய்ந்த கணக்கியல் கொள்கைகளின் பொழிப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகள் பின் வருமாறு காட்டப்பட்டுள்ளன. விசேடமாக குறிப்பிட்டு இல்லாதுவிடின் இந்த அனைத்து கொள்கைகளும் சகல வருடங்களிலும் தொடர்ந்தும் ஈடுபடுத்தியுள்ளன.

**2.1 தயாரிக்கும் அடிப்படை**

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கியல் கொள்கைகளுக்கிணங்க அதற்கேற்ற விதத்தில் தயாரித்துள்ளன. நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக் கிரயம் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருப்பதுடன் சில நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் நியாயமான நடைமுறைப் பெறுமதி காட்டப்பட்டுள்ளவாறு தேவையான திருத்தங்கள் மேற் கொள்ளப் பட்டுள்ளன. இலங்கை நிதியியல் அறிக்கை தரங்களுக்கு இணங்கும் வகையில் நிதி அறிக்கைளை தயாரிக்கும்போது மாறுநிலை கணக்கியல் மதிப்பீடுகளை கையாள வேண்டியேற்படும். அதேபோன்று கணக்கியல் கொள்கைகளை ஈடுபடுத்திக் கொள்ளும்போது முகாமைத்துவம் தனது முடிவுகளை நடைமுறைப்படுத்த வேண்டும். நிதிக்கூற்றுக்களுக்காக முக்கியத்துவம் வாய்ந்த எடுகோள் மற்றும் மதிப்பீடுகள் பயன்படுத்திய துறைகள் தொடர்பாக குறிப்பு இலக்கம் 4 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.இந்த கணக்கீட்டு அறிக்கைகள் இலங்கை ரூபாவிலிருந்து முன்வைக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இயைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது

**2.1.1 ஒருங்கிணைப்பு**

இந்த நிதிக்கூற்றுக்கள் மூலம்,

(அ) மூலதன செலவுகளுக்கான அரச மானியங்கள் பிரதிநிதிப்படுத்துகின்ற வாக்களிக்கப்பட்ட நிதியம் மற்றும்.

(ஆ) சட்டமா அதிபரின் முடிவு கிடைப்பதற்குள்ள 2011 வருடம் வரை தனிப்பட்ட வகையில் தயாரித்து முன்வைத்த பிடித்துவைக்கப்பட்ட வருமான நிதி உள்ளடங்களாக கம்பனியின் ஒருங்கிணைந்த நிலையை முன்வைக்கும்.

2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 17 ஆந் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் 3.5 ஆம் பந்தியிற்கிணங்க விமான நிலையத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் ஒருங்கிணைப்பதற்குத் தேவையான முக்கிய நடவடிக்கைகளை தொடங்குவதற்காக கம்பனி விமானசேவை அமைச்சிற்கு சமர்ப்பித்த வேண்டுகோளினை அடிப்படையாகக் கொண்டு சிவில் விமானசேவைகள் அதிகாரசபையின் சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தினை விசாரித்துள்ளது.

முன்னாலிருந்த விமானநிலைய அதிகாரசபையினால் ஏற்கப்பட்ட சொத்துக்களின் பகுதி 1983 ஆம் ஆண்டில் கம்பனியிற்கு மாற்றியமைத்ததும் அதிகாரசபையைக் கலைத்து கம்பனியினை நிறுவியதன் காரணமாக மீதியாகயிருந்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மேற்குறிப்பிட்ட இரு நிதியங்களும் பிடிப்பில் வைத்திருந்ததனால் அமைச்சரவை விஞ்ஞாபனத்திற் கிணங்க அதனை தீர்க்க வேண்டியிருந்தது.

இலங்கை கணக்கியல் தரங்களுக்கு இயைவாக (SLFRS/LKAS) கம்பனியின் பணிப்பாளர் சபையால்

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

2013 ஜுன் 28 ஆந் திகதி ஒருங்கிணைத்தல் அனுமதிக்கப்பட்டது. இதற்கு அடிப்படையாக அமைந்து. இரு நிதியங்களால் பதிவு செய்யப்பட்ட சொத்துக்கள் ஈடுபடுத்தி பொருளாதார நன்மைகளை உழைக்குமாறு தனது அடிப்படை தொழிற்பாடுகளில் கம்பனி ஈடுபடுதல் மற்றும் குறித்த பொறுப்புக்கள் பதிவு செய்யாது கடன்சேவைகள் தொடர்பாக பொறுப்புகளுக்கு இணைதல் போன்ற காரணங்களின் அடிப்படையில் முக்கியமான கணக்கியல் எண்ணக் கருகளிலிருந்து விலகிச் செல்லுதல்.

ஒருங்கிணைப்பு மற்றும் 2010 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சிவில் விமானசேவைகள் சட்டத்தின் 1982 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க வானோடல் சேவைகள் (விஷேட ஒழுங்குவிதிகள்) சட்டத்தை பிரயோகிக்கத் தக்க முடியாததனால் மூலதன செலவுகள் வாக்களிக்கப்பட்ட நிதியம் தொடர்பாக 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) ( ஊ) பிரிவின் கீழ் கணக்காய்வாளர் செய்த கணக்காய்வு மேலும் உரித்துபெறாது கருதப்பட்டது. அதற்கிணங்க மூலதன சொத்துக்களுக்காக அரசினால் திட்டமிடப்பட்ட ஏற்பாடுகள் பிரதிநிதிப்படுத்தப் படுகின்ற வாக்களிக்கப்பட்ட நிதியம் கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படாததுடன் பிரயிஸ் வோட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் நிறுவனத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான கணக்காய்வு செய்யப்பட்டது.

### 2.1.2 இணக்கப்பாட்டு கூற்று

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கம்பனியின் ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான வருமானக்கூற்று, நிதிப்பாய்ச்சல் கூற்று, பங்கு மாற்றங்களின் கூற்றுடன் கணக்காய்வு கொள்கைகள் மற்றும் குறிப்புகளும் (''நிதிக்கூற்று'') இலங்கை கணக்காய்வு மற்றும் பதிவுத்தரங்களுக்கு (SLFRS/LKAS) இணைவாக தயாரித்துள்ளன.

### 2.1.3 ஒப்பீட்டுத் தகவல்கள்

வேறு விதத்தில் குறிப்பிடாது இருப்பதனைத் தவிர்ந்த, கம்பனி கடந்த வருடங்களில் பிரயோகிக்கப்பட்ட கணக்கியல் கொள்கைகள் ஒரேமாதிரியாக பின்பற்றப்பட்டுள்ளன.

### 2.1.4 கணக்கியல் கொள்கைகளில் மற்றும் வெளிப்பாடுகளின் மாற்றங்கள்

**புதிய தரங்களின் திருத்தங்கள் மற்றும் பொருள் விளக்கங்கள் வெளிப்படுத்தல்.**

(அ) 2014 சனவரி 1 ஆந் திகதிக்கு அல்லது பின்னர் ஆரம்பிக்கப்பட்ட நிதி வருடத்தின் அடிப்படையில் பின்வருமாறு காட்டப்பட்டுள்ள தரங்கள் முதலாவது தடவையாக வெளிப்படுத்தப்பட்டதுடன் அது கம்பனியின் மீது கருதக்கூடியவாறான தாக்கம் விளைவித்த விதம் :

